களுவாஞ்சிக்குடி பொது நூலகம்

# வாஞ்சை



1.34
ாச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாஞ்சை

**"நல்ல நூல்களை படிக்கும் பழக்கம் -**
**வெற்றிக்கு வழிவகுக்கும்"**

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு
வெளியிடப்படும் சஞ்சிகை 2018




Public Library
MS&EP P.S
KALUWANCHIKUDY

வள்ளுவர் வாசகர் வட்டம்,
ம.தெ.எ.ப.பிரதேச சபை,
பொது நூலகம்,
களுவாஞ்சிகுடி.

2018.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மகுட வாசகம்

"நூலைத் தேடு உலகம் உன்னைத் தேடும்"

## தூரநோக்கு - VISION

அனைத்து துறைகளிலும் செயல்களிலும்
ஓர் பண்பட்ட அதிநவீன தொழில்நுட்பத்துடனான
நகர்வினை முன்னோக்கிச் செல்லல்.

## பணிக்கூற்று - MISSION

கல்வி கலை கலாசாரத்துடன் கூடிய எதிர்கால
சவாலுக்கு முகம் கொடுக்கும் வகையில்
அதிநவீன தொழில்நுட்ப அறிவு மிகுந்த
சமுதாயத்தினை வாசிப்பினூடாக உருவாக்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நூல்விபரம்


| | |
|---|---|
| சஞ்சிகையின் பெயர் | : **வாஞ்சை – 2018** |
| வகை | : சஞ்சிகை |
| மொழி | : தமிழ் |
| வெளியீடு | : வள்ளுவர் வாசகர் வட்டம்,<br>பொது நூலகம்,<br>களுவாஞ்சிகுடி. |
| பதிப்பு | : 2018 |
| பக்கம் | : 149 பக்கங்கள் |
| பிரதிகள் | : 500 |
| கணனி வடிவமைப்பு | : SM. Rifkey |
| அச்சுப்பதிப்பு | : Kabeer Publication<br>No: 26/2 S.P lane<br>Kattankudy – 02<br>0776021737 |
| அட்டைப்படம் | : Nafeer |


**"இளைய தலைமுறைக்கு பரிசளிக்க விரும்பினால்**
**புத்தகத்தை பரிசாகக் கொடு"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாஞ்சையின்

# நுழைவாயில்...

**"புத்தகங்கள் தான் நம்முடன் பேசும்மௌன நண்பர்கள்**
**ஒரு புத்தகம் நூறு நண்பர்களுக்குச் சமன்"**

இலத்திரனியல் துறையின் வளர்ச்சி எப்படித்தான் உச்சத்தைத் தொட்டபோதும் அதீத அறிவின் வளர்ச்சிக்கு வாசிப்பு அவசியம் என்றால் மிகையாகாது. இதற்காக நாட்டிலுள்ள பொது நூலகங்கள் சிறந்த சமூதாயத்தினை உருவாக்கும் நோக்கத்துடன் பல விசேஷட விழிப்புணர்வுச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதற்காக ஒக்டோபர் மாதம் முழுவதும் தேசிய வாசிப்பு மாதாகப் பிரகடனப்படுத்தி வைபவரீதியாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் எமது களுவாஞ்சிகுடி பொது நூலகம் பல்வேறு செயற்திட்டங்களை கடந்த 2004ம் ஆண்டு தொடக்கம் நாடாத்தி வருகின்றது. 2 தடவைகள் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் விருதுகளைப் பெற்று முன்னணியில் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ் வருடம் ஒரு விசேட அங்கமாக **"வாஞ்சை"** எனும் சஞ்சிகை ஒன்றை வெளியிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இச்சஞ்சிகையில் பொது அறிவு விடயங்கள், மருத்துவம், இலக்கியம், சிறுகதை, விளையாட்டு, போன்ற பல்துறைசார்ந்த பல்சுவை ஆக்கங்களும் உள்ளடக்கப்பட்டது.

சமூகத்தில் பல ஆக்கங்கள் நூல் வடிவில் வெளி வந்தாலும் வாஞ்சையும் ஒரு ஊடக வரவாக வாசிப்புத் தளத்தில் வலம் வந்து வாசகர் மேம்பாட்டை ஊக்கிவிக்கும் கருவியாகவும் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய இலத்திரனியல் யுகத்தில் ஆண், பெண், சிறுவர்கள், மாணவர்கள், இளைஞர்கள், முதியோர்கள், கலைஞர்கள் அடங்கலான பலதரப்பட்டோரும் முகநூலில் மூழ்கிப் போயிருந்தாலும் சமகாலத்தில் நூல் முகத்தைத் தரிசிக்காதோர் இல்லை என்றே கூறலாம்.

ஆம், என்ன தான் நவீன தொழிநுட்பமானது இலத்திரனியலூடாக வாசிப்பை இலகு படுத்தினாலும் கூட பொது நூலகங்களே நூல்களை வாசிக்க வழி செய்து வசதி செய்து கொடுத்துள்ளது. இலத்திரனியலும் நூலக செயற்பாட்டிற்கு பக்கத் துணையாக இருக்கிறதே தவிர நூலகத்தின் தேவையை வாசிப்பின் அவசியத்தை மட்டுப்படுத்தப்படவில்லை.

மேற்சொன்ன காரணங்களைக் கருத்தில் கொண்டே தேசிய வாசிப்பு மாதமான ஒக்டோபர் மாதம் 2018 ம் ஆண்டில் **'வாஞ்சை'** எனும் முதற் சஞ்சிகையை களுவாஞ்சிகுடி பொது நூலகத்தின் வள்ளுவர் வாசகர் வட்டம் வெளியிடுகின்கிறது. பலவேறு சிரமங்களுக்கு மத்தியில் முடியாது என்று இருக்காமல் முயன்று வெற்றி காணப்பட்டுள்ளது.

எமது கன்னி முயற்சியான இச் செயற்திட்டம் இடை நடுவே நின்று விடாது வருடா வருடம் மென்மேலும் வளர்ந்து எமது நோக்கை நிறைவு செய்ய வாசகர் வட்டம் நடவடிக்கை மேற்கொள்ளும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இச் சஞ்சிகை ஆக்கத்திற்கு வழிகாட்டி ஆலோசனை வழங்கிய எமது பிரதேச சபையின் தவிசாளர் திரு.ஞா. யோகநாதன் அவர்களுக்கும், செயலாளர் திரு.கே. லட்சுமிகாந்தன் அவர்களுக்கும். மற்றும் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.சுரேஸ் றொபேட் பிரபாளினி அவர்களுக்கும் பொதுநூலகம் சார்பாகவும், வள்ளுவர் வாசகர் வட்டம் சார்பாகவும் முதற்கண் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து வள்ளுவர் வாசகர் வட்ட தலைவர் திரு வே. நித்தியானந்தன், மற்றும் உறுப்பினர்கள், நூலக உத்தியோகஸ்தர்கள் திருமதி சிறிதாரணி சுதன். திருமதி சுந்தரி பரமேஸ்வரன். ஆகியோருக்கும், இதனை தட்டச்சு செய்ய உதவிய செல்வி போ.யே.மொறின் லக்சிகா மற்றும் எமது சஞ்சிகைக்கான ஆக்கங்களை கேட்டவுடன் வழங்கி ஆதரவு நல்கிய அன்பான கட்டுரையாளர்கள், நூலகத்தின் இனிய வாசகர்கள், ஆலோசகர்கள், இச்சஞ்சிகையை அழகான வடிவில் வடிவமைப்பு செய்து உதவிய முசுமு. றிப்கி மற்றும் பலவழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எனது கரம் குவித்து மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

“ இந்நூலில் வருகின்ற வாசகர்களின் ஆக்கங்களுக்கு அதை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பாளர்களாவார்கள். இப் பிரதியில் ஏதும் தவறுகள் காணப்பட்டால் மன்னித்து எதிர்காலத்தில் ஏற்படா வண்ணம் ஆலோசனை வழங்கி எம்மை உற்சாகப்படுத்துமாறு அனைத்து அன்புள்ளங்களையும் மிக மிக அன்பாகக் கேட்டுக் கொள்கிறேன். ”

நன்றி

திருமதி. ரமணி ஜெயபாலன்,
நூலகப் பொறுப்பாளர்,
பொது நூலகம்,
களுவாஞ்சிகுடி.
2018





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மலர் வெளியீட்டுக் குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. வே .நித்தியானந்தன் |
| உபதலைவர் | : | திரு.கு. றஜகோபி |
| செயலாளர் | : | திருமதி. ரமணி ஜெயபாலன் |
| உபசெயலாளர் | : | திருமதி. சிறிதாரணி சுதன் |
| பொருளாளர் | : | திரு. ஆ.கலாபராஜன் |
| ஆலோசகர்கள் | : | திரு.க. தருமரெத்தினம் |
| | | திரு.க. மதிசீலன் |
| | | திரு. நா.நாகேந்திரன் |
| | | திரு.க.யோகநாதன் |
| | | திரு. க. சத்தியமோகன் |
| | | திரு.ந.புருஷோத்மன் |
| | | திரு.ம.கௌதமன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வள்ளுவத்தின் வழி நிற்போம்

தெள்ளு தமிழ் வள்ளுவத்தின்
வழியினிலே தினம் நிற்போம்
தெளிந்த நல் ஞானத்தால்
தமிழ் வாழப் பணிசெய்வோம்
உள்ளத்தில் உயர் குணத்தை
உவந்தேத்தி நிதம் வளர்ப்போம்
செல்லக் குழந்தைகள் போல்
சேர்ந்தொன்றாய்ப் பணிசெய்வோம்
வாசிப்போம் யோசிப்போம்
வருங்காலத்துக்கும் வசதி செய்வோம்
பேசரிய கலை வளர்ப்போம்
பெரும்பணிகள் பல புரிவோம்
ஒளி நோக்கி உலாப்போவோம்
உலகுக்காய் ஒளி செய்வோம்
ஆழிக்கடல் போலே அமைதியாய் நாம்
அனுதினமும் இங்கிருந்து பணிசெய்வே
வாழையடி வாழையாக
வாசகர் வட்டமாக நாமிருந்து
நாளைய பொழுதுக்காய்
நாளெல்லாம் பணி செய்வோம்.



சரஸ்வதி புத்திரன்
சரவணமுத்து நவேந்திரன் (கன்னிமுத்து வெல்லபதியான்)
களுவாஞ்சிகுடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாஞ்சையில் விளைந்த முத்துக்கள்

1. களுவாஞ்சிகுடி பொதுநூலக வரலாறு 12

**இயல் - அ**

1. தமிழ்த்தாய் வாழ்த்தும் தமிழ்மொழி வாழ்த்தும் தமிழர்களே சிந்தியுங்க 24
2. களுவாஞ்சிகுடி பொதுநூலகமும் நூலகப் பொறுப்பாளரும் ஓர் அனுபவ பகிர்வு 29
3. களுவாஞ்சிகுடி பொதுநூலக தன்னியக்கமாக்கலும் அதன் இலத்திரனியல் சேவைகளும். 36
4. காணியுடன் தொடர்புடைய சில பிரச்சனை 47
5. நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும். 51
6. மக்களின் கழிவு முகாமைத்துவ சீர்கேட்டின் கசப்பான உண்மைகள். 57
7. வாசிப்பு 67
8. மனிதன் மனிதனாக வாழ வேண்டும். 70
9. ஆசிரியர். வாண்மையை வளமாக்குவதில் முக்கியபங்கு வகிப்பது நூலகம் 73

**இயல் - ஆ**

1. நூலகம்மா (குறுங்கதை) 78
2. வாசகன் திலீபன் 80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

3. நிம்மதி 84
4. நதி என்னும் முதியவர் 92

**இயல் - இ**

1. அன்று எரிந்து சிதைந்து அழிந்து காட்சிதந்த நூலகம் இன்று புகழ்பெற்று நற்சேவை ஆற்றி வருகிறது. 96
2. களுவாஞ்சிகுடியில் கமழும் மண்வாசனை 98
3. தாய் மண்ணே என் வணக்கம் 100
4. அம்மா 103
5. இனங்களுக்கிடையில் புரிந்துணர்வு 104

**இயல் - ஈ**

1. நாட்டார் பாடல்களின் பேச்சு வழக்கு மண்வளச் சொற்களின் இனிமை. 108
2. சத்தியவான் சாவித்திரி - கூத்து 113

**இயல் - உ**

1. அவசர சேவை தொலைபேசி இலக்கங்கள் 128
2. திருக்குறள் 131
3. விளையாட்டு 132
4. தமிழர் எவ்வளவு அறிவாளிகள் தெரியுமா? 134

**இயல் - ஊ**

1. தூயி தசமப் பகுப்புத்திட்டம் 138
2. பல நோய் தீர்க்கும் ஒரு மருந்து 147



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# களுவாஞ்சிகுடி
# பொது நூலக
# வரலாறு

ஆசியா கண்டத்தில் அரும் பெரும் ஆழி சூழ்ந்த அழகான தீவில் தேசியம் காத்திடும் தெய்வீக மணம் கமழும் மீனகத்தின் தென்பால் மருதமும், நெய்தலும் பேராறும் பெருங்குளமும் சைவத்தோடு,தனித் தமிழ் பண்பாடும் கொண்டுள்ள **களுவாஞ்சிகுடி** எனும் அழகிய நகரில் கடற்கரை வீதியில் வம்மியடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னால் அமைந்துள்ள களுவாஞ்சிகுடி பொதுநூலகத்தின் வரலாற்றினை எழுதுவதற்கு முன்னர், களுவாஞ்சிகுடியில் முதல் முதலில் வாசிகசாலை ஒன்று ஆரம்பித்த வரலாற்றிலிருந்து தொடங்க வேண்டும்.

**1950**

சுமார் 1950ம் ஆண்டு காலப்பகுதியில் களுவாஞ்சிகுடி ஸ்ரீ மாணிக்க பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னால் உள்ள ஆலயத்திற்குச் சொந்தமான காணியில் கிராமத்து மக்கள் பொதுக் கூட்டங்கள் நடாத்துவதற்கும், பாரம்பரிய கூத்துகள் ஆடுவதற்கும், சிறுவர்கள் விளையாடுவதற்கும், பொழுது போக்குக்காக கூடும் இடமாகவும் இருந்த இடத்தில் சிறிய ஓலையால் வேயப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கட்டிடம் ஒன்றை அமைத்து அங்கு கார் பற்றறியில் இயங்கும் பெரிய வானொலிப் பெட்டி ஒன்று வைத்திருந்ததாகவும் ஓய்வு நேரங்களில் பொழுதைக் கழிப்பதற்கு வரும் இளைஞர்கள், முதியவர்கள் பெரியவர்கள் செய்தி.பாட்டு, மற்றும் உலக விவகாரங்களை அறிந்து கொள்ளவும் பயன்படுத்திவந்தனர். பின்னர் 1951ம் ஆண்டளவில் கிராமத் தலைவராகவும் சைவமகாசபையின் தலைவராகவும் இருந்த திரு த.சபாபதிப்பிள்ளை (விதானையார)அவர்கள் ஸ்ரீவிக்னேஸ்வரர் சனசமூக நிலையத்தையும் (BT/MSE/CC6/1951) தோற்றுவித்தார்.

நாளடைவில் தினமணி, சிந்தாமணி போன்ற பத்திரிகைகளை எடுத்து வழங்கியதாகவும் வசதியுள்ள சிலரால் தங்கள் வீடுகளில் வாசித்து முடிந்த ராணி,மாலைமதி, மங்கை,கல்கி போன்ற சஞ்சிகைகளையும் ஒரு சில ஆங்கில சஞ்சிகைகளையும் வழங்கி வந்ததாகவும் [பெரியோர்களால் அறிய முடிந்தது.] பின்னர் திரு த. சபாபதிப்பிள்ளை அவர்களின் மறைவை அடுத்து கிராமத்தில் தொழில் புரிவோர் மாதாந்தம் ஒருவர் பத்திரிகையை எடுத்து சனசமூக நிலையத்திற்கு வழங்கி வந்ததாகவும் பெரயவர்கள் மூலம் அறியமுடிந்தது.பின்னர்

**1978** ம் ஆண்டு கிழக்கில் ஏற்பட்ட பாரிய சூறாவளியின் போது சனசமூக நிலையம் முற்றாக சேதமடைந்தது. அதனால் சில காலம் இயங்காமல் இருந்தது. பின்னர் இளைஞர்கள் மேற்கொண்ட முயற்சியின் பயனாக மீண்டும்வேறு இடத்தில் இயங்கியது. இருந்த போதும் வாசகர் எண்ணிக்கை அதிகரிப்பும் பராமரிக்க ஊழியர்கள் இல்லாத காரணத்தினாலும் பெரிய சிக்கல்கள் ஏற்பட்டது. பிற்பாடு நூலகம் ஒன்றின் அவசியத் தேவையை உணர்ந்த கிராமத்தின் பிரமுகர்கள் அரசாங்க அதிபர், மற்றும் களுதாவளை மாவட்ட அபிவிருத்தி சபை உப அலுவலகம் ஆகியவற்றிக்கு வேண்டுகோள் விடுவித்தனர். பலரின் உந்து சக்தியின் பிரகாரம் பொதுநூலகம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

அதன்படி, **1986**ம் ஆண்டு நிரந்தரமான பொது நூலகத்தை அமைப்பதற்கான பணி ஆரம்பமானது. அப்போதைய கிராமத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தலைவர் திரு.சா.நாகமணி ஆசிரியர் அவர்களின் தலைமையில் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திற்கு எதிர்திசையில் அடிக்கல் நடப்பட்டதுடன் நான்கு மாதங்களில் 15000 ரூபாய் செலவில் வாசிப்பு பிரிவு, இரவல் பிரிவு, களஞ்சிய அறை என்பவற்றுடன் அழகிய சிறிய நூலகம் அமையப்பெற்றது.

**1986 நூலகர் தெரிவு :**

புதிய நூலகத்திற்கான நூலகப்பொறுப்பாளர் தெரிவில் களுவாஞ்சிகுடி -யைச் சேர்ந்த திரு.குமாரசூரியம் ஜெயபாலன் அவர்கள் **01-10-1986** முதல் நூலகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அவர் சிறிது காலம் மாவட்ட உப அலுவலகத்தில் கடமை செய்து வந்தபின்னர் **09-05-1987**ம்ஆண்டு புதிய நூலகம் சம்பிரதாய பூர்வமாக திறக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்காக விடப்பட்டது. 550 நூல்களுடன் வீரகேசரி,தினகரன்,டெயிலிநியூஸ் போன்ற பத்திரிகைகளும் குமுதம்,விகடன்,கல்கி,கல்கண்டு போன்ற சஞ்சிகைகளும் எடுத்துவழங்கப்பட்டது. பட்டிருப்புத் தொகுதி வாழ் மக்களுக்கு மட்டுமன்றி படுவான் கரை வாழ் மக்களுக்கும் ஓர் வரப்பிரசாதமாக, நிழல் தரும் விருட்சமாக இந்நூலகம் அமைந்தது.

பெருமளவான வாசகர்களை உள்ளீர்த்து அவர்களின் அறிவுப் பசியை தீர்த்ததுடன் வாசகர் வட்டக் குழு ஒன்றும் 09-05-1987 அமைக்கப்பட்டு நூலக சிறந்த சேவையை ஆற்றி வந்தது. அன்றைய இளைஞர்களும் நூலகருடன் இணைந்து நூல் சேகரிப்பு, சிரமதானம் மற்றும் பொதுப் பணிகளிலும் ஈடுபட்டு மிகச் சிறப்பாக இயங்கி வந்தனர்.

**பாரிய இழப்பு**

மக்களின் வரப்பிரசாதமாக இருந்து வந்த நூலகத்திற்கு பெரும் துன்பகரமான நிகழ்வொன்று நடைபெற்றது. களுவாஞ்சிகுடி ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் 23-10-1987ல் காலை 09:18 மணியளவில் பாரிய குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது. இதன் எதிரொலியாக இந்திய அமைதிப்படை இராணுவத்தினரால் நகரமே தீக்கிரையானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவ்வேளையில் நூலகம் எரிக்கப்பட்டதுடன் கடமையில் இருந்த நூலகரும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இத்துன்பவியல் சம்பவத்தின் பின்னர் சிறிது காலம் இயங்காது இருந்த நூலகத்தை திருத்தியமைத்து புதிய நூலகப்பொறுப்பாளராக **15-04-1988** ஆண்டு திருமதி ரமணி ஜெயபாலன் நியமிக்கப்பட்டு மீண்டும் மக்கள் பாவனைக்கு விடப்பட்டது. பின்னர் வீடுவீடாக சென்று வசதி படைத்தவர்களிடம் நூல்களை அன்பளிப்பாக பெற்று நூல்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்தது.

### 1990ம் ஆண்டு

ஓரளவு வளர்ச்சி கண்டு வரும் வேளையில் 1990 ம் ஆண்டு ஆனி மாதம் கிழக்கில் ஏற்பட்ட பாரிய வன்செயலின் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்து விட்டனர். இதனால் அனைத்து அலுவலகங்களும் செயலிழந்து போய்விட்டது நூலகமும் மூடப்பட்டது.

### 1991 ம் ஆண்டு

1991ம் ஆண்டு மீண்டும் நூலகம் திறக்கப்பட்ட போது அநேகமான நூல்கள் காணாமல் ஆக்கப்பட்டிருந்தது. அதன் பின் 1992 ம் ஆண்டு ஆனி மாதம் பொலிஸ் சோதனைச் சாவடி ஒன்று நூலகத்திற்கு அருகில் அமைக்கப்பட்டது. இதனால் நூலகத்திற்கு வரும் வாசகர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டது.

### உள்ளூராட்சி சபை தேர்தல்

பின்னர் உள்ளூராட்சிச்சபைகளுக்கான தேர்தல் நடைபெற்றது. தவிசாளராக திரு.என்.மனோகரராசா அவர்கள் தெரிவு செய்யபட்டார் அவரது அலுவலகம் பாதுகாப்பு கருதி நூலகத்தில் அமைக்கப்பட்டது. இதன் காரணமாக நூலகத்தினை வாசகர்கள் பயன் படுத்துவதில்பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது சபைக் கூட்டங்கள் நடைபெறும் நாட்களில் வாசகர் நூலகத்தைப் பயன் படுத்த முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இவ்வாறான சிக்கல்களினால் கிராமத்தின் பிரமுகர்கள் வேறு இடத்திற்கு நூலகத்தை இடமாற்றுமாறு கோரிக்கை விடுத்தனர்.ஆனால் பொருத்தமான இடம் இல்லாத காரணத்தினாலும் ,வாடகை பணம் செலுத்துவதில் ஏற்பட்ட சிக்கல்களிலும் அந் நடவடிக்கை கைவிடப்பட்டது

**2001**

அந்த வேளையில் மட்/ பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நியமனம் பெற்று வந்த திரு மா.தயாபரன் அவர்கள் இந்த நெருக்கடியான சூழ்நிலையினை தனது கவனத்திற்கு எடுத்து களுவாஞ்சிகுடி முகாமை ஆலய பரிபாலனசபையிடம் வேறு இடத்தில் காணி ஒன்றைப் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டார்.அதன்படி வம்மியடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னால் காணி ஒன்றை முகாமை ஆலய பரிபாலனசபையினர் பெற்றுக் கொடுத்தனர்.

அதன் பிற்பாடு, 12.11.2001 ம் ஆண்டு கிராமத்தின் முன்னாள் தலைவர் திரு.மு.வாமதேவன் அவர்கள் தலைமையில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.மா.தயாபரன் அவர்கள், விசேஷட ஆணையாளர் திரு. சி.பாஸ்கரன்அவர்கள் ,பிரதேசசபை செயலாளர் திரு.க.குணரத்தினம், சனசமூக உத்தியோகத்தர் திரு வி முருகமூர்த்தி நூலகப்பொறுப்பாளர் திருமதி ரமணி ஜெயபாலன், மற்றும் சனசமூக நிலையத் தலைவர் திரு.க.தில்லேஸ்வரன் ஆகியோரால் அடிக்கல் நடப்பட்டது. பின்னர் அரைவாசி கட்டப்பட்ட நிலையில் கவனிப்பாரற்று பாசி பிடித்தநிலையில் கிடந்தது.

**அடுத்து 2002**ம் ஆண்டு ஆரையம்பதியைச் சேர்ந்த திருமதி க. மகேந்திரலிங்கம் தரம் III நூலகராக நியமனம் பெற்று வந்தார். இவரது காலத்தில் நூலகம் சிறந்த முறையில் செயற்பட்டுள்ளது. நூல்களுக்கு ஒழுங்கான முறையில் பகுப்பாக்கம் செய்திருந்ததை அவதானிக்க முடிந்தது இவர் **2002-2008 ஆண்டு** வரை கடமை புரிந்தார்.

அதன் பின்னர் **2008-2009** வரை கல்லடியைச் சேர்ந்த திருமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கமலினி உருத்திர குமார் கடமை புரிந்தார். இவரது காலத்திலும் நூலகம் சிறந்த முறையில் செயற்பட்டதுடன் நூலகத்தின் திருத்த வேலைகளிலும் முன்னின்று செயற்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

பின்னர் **2009 - 2011** வரை மட்டக்களப்பைச் சேர்ந்த திரு ரி. சரவணபவான் நூலகராக சிறந்த முறையில் கடமை புரிந்துள்ளார். வாசகர் வட்டத்துடன் இணைந்து நூலகத்தின் பெயர்ப்பலகை பொருத்த நடவடிக்கை எடுத்தார். இவரும் சிறந்த முறையில் சேவையாற்றியுள்ளாார் என அறிய முடிகிறது

அதனைத் தொடர்ந்து களுதாவளைச் சேர்ந்த திரு வ.கிருபாகரன் அவர்கள் **2011-2013** வரை கடமைம செய்தார். அவர் தனது சேவைக் காலத்தில் மிகத் திறமையாக தனது சேவைகளைச் செய்தார் இவர்கள் அனைவரும் தேசிய வாசிப்பு மாத செயல் திட்டங்களையும் சிறப்பாகச் செய்தமைக்கான ஆதாரங்கள் நூலகத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது

இவரைத் தொடர்ந்து **2013 ம் ஆண்டு 09** வருடங்களின் பின்னர் மீண்டும் திருமதி ரமணி ஜெயபாலன் மாற்றலாகி வந்தார். அவருடன் திருமதி தனலோகம் யோகநாதன் தொண்டராக பணியாற்றினார். அந்த நேரம் நூலகம் மிக நெருக்கடியான நிலையில் இருந்தது. மேற் கூரையினால் மழைநீர் வடிந்து பல அரிய நூல்கள் சேதமடைந்து காணப்பட்டது. கறையானால் புத்தக இறாக்கை சேதமடைந்திருந்தது. அத்துடன் வாசகர் இடவசதி போதாமையால் மிக நெருக்கடியை எதிர்நோக்கியிருந்தனர்.

இருந்த போதும் தேசிய வாசிப்பு மாதத்தில் மாபெரும் புத்தகக்கண்காட்சி ஒன்று உள்ளுராட்சி ஆணையாளர் திரு. மா. உதயகுமார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மாணவர்களுக்கிடையே திறன் விருத்திப் போட்டிகள் வலயமட்டத்தில் நடாத்தப்பட்டது. 400க்கு மேல் நூல்கள் அன்பளிப்பாக பெற்றுக் கொள்ளப்பட்டது திரு. நாகராஜா ஜெகபால் 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நூல்கள் வழங்கினார் அத்துடன் களுவாஞ்சிகுடி சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நலன்புரிச் சங்கம் லண்டன் கிளை 40 ஆயிரம் பெறுமதியான கண்ணாடி நூற்தட்டு வழங்கியது. பரிசளிப்பு விழா செய்யப்பட்டது. போன்ற பல செயற் திட்டங்களைச் செய்து தேசிய வாசிப்பு மாதம் 2013க்கான விருதினை 2014ம் ஆண்டில் முதல் தடவையாகப் பெற்றுக் கொண்டது சிறப்பம்சமாகும். இதற்கான ஒத்துழைப்பினை வள்ளுவர் வாசகர் வட்டம் வழங்கியது. தலைவர் திரு ந. புருசோத்மன் முன்னின்று செயற்பட்டார்.

அதேவேளை புதிதாக கட்டப்பட்ட நூலகம் பாசிபிடித்த நிலையிலிருந்தது. அந்த நூலகத்தினை கட்டிமுடிக்க முன்னின்று பாடுபட்டார். பிரதேச சபையினதும், கிராமோதயசபை. மற்றும் நலன் விரும்பிகளினதும் பெரும் முயற்சியின் பயனாக நெல்செப் திட்டத்தின் மூலம் புதிய நூலகம் கட்டி முடிக்கப்பட்டது. திறக்கும் தருணத்தில் எதிர்பாராதவிதமாக இடமாற்றம் பெற்றுச் சென்றார்

அதனைத் தொடர்ந்து 2014-2015 வரை மருதமுனையைச் சேர்ந்த S.M.R. அமீனுதீன் அவர்கள் கடமையாற்றினார் 10 மாதங்களாக புதிய நூலகம் திறக்கப் படாமல் இருந்தது. இவர் வாசகர் வட்டத்துடன் இணைந்து மேற்கெண்ட முயற்சியினால் 03.11.2014 அன்று பிரதேச சபை செயலாளர் திருமதி யா. வசந்தகுமாரன் அவர்கள் தலைமையில சம்பிரதாய பூர்வமாக திறக்கப் பட்டது. களுவாஞ்சிகுடி நலன்புரிச் சங்கம் லண்டன் கிளை கணனி ஒன்றை அன்பளிப்புச் செய்தனர். அவருடன் திருமதி தாரணி பிரகாஸ் பதில்கடமையாளராக பணியாற்றனார். அடுத்து

2015ம் ஆண்டு நிந்தவூரைச் சேர்ந்த ஜனாபா ஏ.எல் நஷிரா கடமையாற்றினார் அவரது காலத்திலும் நூலகத்தில் பல அபிவிருத்திச் செயற்திட்டங்களை செய்யப்பட்டுள்ளது. அன்பளிப்பாக திரு. க. சத்தியமூர்த்தி 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நூல்களும் திரு. அ.கந்தவேள் 5ஆயிரம் ரூபாய் பெறுமதியான நூல்கள் நூல்கள் பெறப்பட்டுளளதை ஆவணங்கள் மூலம் அறியமுடிந்தது அத்துடன் 12.12.2016ம் ஆண்டு கணனி மயப்படுத்தப்பட்ட உசாத்துணைப் பிரிவு முதலமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டது இலவச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வைபை (WI-FI) திட்டம் நூலகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் வாசகர் பயன்பாட்டிற்கு இதுவரை வசதி செய்யப்படவில்லை. அத்துடன் தேசிய வாசிப்பு மாதத்திற்கான தேசிய விருதினை இரண்டாவது தடவையாக பெற்றமை சிறப்பம்சமாகும் பின்னர்:

கொஹா திட்டத்தின் கீழ் தன்னியக்கமாக்கல் இலத்திரனியல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு திறந்த பல்கலைக் கழகத்தினால் களுவாஞ்சிகுடி பொதுநூலகமும் தெரிவு செய்யப்பட்ட போது அதன் ஆரம்ப கட்டத்தில் ஒத்துழைப்பு வழங்கினார். பின்னர் தற்காலிக இடமாற்றம் பெற்றுச் சென்றார். அவருடன் திருமதி இராஜலக்சுமி சச்சிதானந்தம், லி. சுஜிதானி ஆகியோரும் நிறைவான ஒத்துழைப்புக்களை வழங்கியிருப்பதை அவதானிக்க முடிந்தது.

நூலகத்தின் காவலாளி திரு வ.யோகராசா சிறந்த முறையில் அழகான பூந்தோட்டம் அமைத்து பராமரித்து வந்துள்ளார். சிறந்த ஒரு காவலாளி தனது கடமையில் விசுவாசமும் பற்றும்உள்ளவர் தற்போது ஓய்வு பெற்று சென்றுள்ளார்.

அடுத்து **30.03.2017**ம் மீண்டும் திருமதி ரமணி ஜெயபாலன் கடமைக்கு வந்தார் பழைய அரிதான பல நூல்கள் பழைய நூலகத்தில் கரையானுக்கு இரையாகி இருந்ததை காணமுடிந்தது. அத்துடன் தன்னியக்கமாக்கல் சேவையும் இடைநடுவில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது. அவரது துரித முயற்சியினால் கிழக்குப் பல்கலைக் கழக சிரேஸ்ட உதவிநூலகர் திரு.எம்.என்.ரவிகுமார் அவர்களுடன் தொடர்புகொண்டு விளக்கங்களைப் பெற்று துரித மாக செயற்பட்டு வெற்றிகரமாக **(E-Library Automation Project) 21.10.2017**ம் ஆண்டு உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டு வாசகருக்கு இரவல் வழங்கப்பட்டது. தற்போது எமது நூலகத்திற்கு உள்ளே மாத்திரம் செயற்படுத்தப்பட்டுள்ளது. அங்கத்தவராக 200/= பணத்தினைச் செலுத்தி இலத்திரனியல் அட்டையைப் பெற்றுக் கொள்ளலாம். இதனால் வாசகர் குறுகிய நேரத்துக்குள் விரைவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நூல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இச்செயற்திட்டத்தின் கீழ் 75 மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இச்சேவையை இணையத்துடன் இணைத்து வெளியில் இருந்தும் வாசகர்சேவையைப் பெற்றுக் கொள்ள தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது விரைவில் வாசகர் நன்மையடைவர்.

30.03.2017ம் ஆண்டு 4200 ஆக இருந்த நூல்கள் **'வீட்டுக்கொரு நூல்'** செயற் திட்டத்தினை அறிமுகப் படுத்தியதன் மூலம் தற்போது 6800 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. .இதற்கு **திரு.இராசநாயகம் டட்லி சுரேஸ்** 15 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நூல்களும், **திரு.குணசிங்கம் ஜெயமோகன்** 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நூல்களும் **திரு கு.பிரபாகரன்** ஆசிரியர் ஒரு தொகுதி நூல்களும் மற்றும். நலன் விரும்பிகள், வாசகர் பலரும் அன்பளிப்புச் செய்துள்ளனர். அங்கத்தவர் எண்ணிக்கை **988** ல் இருந்து தற்போது **1103** ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. நாளாந்த வாசகர் சுமார் 30 - 40 பேர் வரை வருகின்றனர். நூல் இரவல் வழங்கல் மூலம் நாளாந்தம் 20 - 30 பேர் வரை பயன் பெறுகின்றனர். இந்நூலகம் தரம் 111 நூலகமாகவே இருக்கின்றது. இதனைத் தரம் 11 நிலைக்கு தரமுயற்துவதற்கு வாசகர்வட்டம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது, எமது பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் 3 – தொடக்கம் தரம் 09 வரையுள்ள மாணவர்களை அங்கத்தவர்களாக இணைத்து அவர்களின் வாசிப்புத்திறனை அதிகரிக்கும் நோக்குடன் சிறுவர்களுக்கான நல்வழிக் கதைகள், பொது அறிவு விடயங்கள் போன்ற நூல்களை கட்டாயமாக வாசிக்கத் தூண்டி நூலகத்தையும் நூல்களையும் எவ்வாறு கையாள்வது, எவ்வாறு இரவல் பெறுவது போன்ற பயிற்சிகளை வழங்கி வெற்றிபெற்றுள்ளார். தற்போது தாமாகவே பாடநூல்களைத் தெரிவு செய்து உரிய முறையில் திருப்பி ஒப்படைக்கக் கற்றுக்கொண்டுள்ளனர். இச்செயற்திட்டத்திற்கு களுவாஞ்சிகுடி SDC ஆசிரியர்களும்.மாணவர்களும் முழு ஒத்துழைப்புகளை வழங்கியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முக்கிய அம்சமாக பொது மக்கள் நலன் கருதி நூலகம் தினமும் காலை 8.00 - இரவு 7.00 வரையும் திறந்திருக்கின்றது. திருமதி. சிறிதாரணி சுதன் அத்துடன்,ஆளணி பற்றாக்குறை, பௌதிக வளங்கள் மிக குறைவாக இருந்த போதும் மிகச் சிறந்த சேவையை செய்து வருகின்றார். இவருடன் திருமதி சிறிதாரணி சுதன் கடமை செய்கிறார். அநேகமான நாட்கள் 10 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாகச் கடமை செய்யவேண்டியுள்ளது. மேற்படி வசதிகள் அதிகரிக்கும் பட்சத்தில் இன்னும் சிறப்பாகச் செய்யமுடியும் என்ற நம்பிக்கை உள்ளது. 2018.10.26 வாஞ்சை எனும் சஞ்சிகை ஒன்று வெளியிடப்படுகிறது. மனநிறைவைத் தருகிறது.

நன்றி

திருமதி.ரமணி ஜெயபாலன்,
நூலகப் பொறுப்பாளர்,
பொது நூலகம்,
களுவாஞ்சிகுடி,
2018.

**“மன அமைதியின்றி தூக்கம் வரவில்லையா? ஒரு நல்ல நூலை கையில் எடுங்கள். தானாகவே அமைதியான தூக்கத்தை பெறுவீர்கள்”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இயல் - அ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழ்த்தாய் வாழ்த்தும், தமிழ்மொழிவாழ்த்தும்!

(சட்டத்தரணி, பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசா)

நாம் யாரையாவது வாழ்த்தும்போது, "உன் பக்கத்துவீட்டு பார்த்தீபன், தக்கபடி வாழ முடியாமல் அகால மரணம் அடைந்ததைப்போல் சாகாமல், நீ இப்போதும் இளமையுடன் இருப்பதை வியந்து பாராட்டுகிறேன்" என்று வாழ்த்துவோமா? அப்படி வாழ்த்துவது சரியா? தகுமா? நல்ல பண்பாடா? இல்லையல்லவா.

ஆனால் நமது இலங்கைத் திருநாட்டில் அப்படித்தானே நடக்கிறது! பாடசாலைகளிலும், மற்றும் இடங்களிலும் நடைபெறும் விழாக்களில் தமிழ் மொழி வாழ்த்து பாடப்படுவது வழக்கம். காலங்காலமாக, "வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி வாழிய வாழியவே" என்று தொடங்கும், பாரதியாரின் அழகான பாடல்தான் பாடப்பட்டு வந்தது. ஆனால் இப்போது மனோன்மணியம் பெ.சுந்தரம்பிள்ளை என்ற தமிழறிஞர் எழுதிய "நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்" என்று தொடங்கும் பாடல் தமிழ்த்தாய் வாழ்த்து என்ற பெயரில், பாடப்படுகிறது.

கடந்த வருடம் மட்டக்களப்பின் பிரபலமான பாடசாலை ஒன்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மண்டபத்தில் நடைபெற்ற ஒரு விழாவில் முதன்முதலாக அதனைக் கேட்ட பொழுது எனது நெஞ்சில் தாங்க முடியாத வலி ஏற்பட்டது. இது எப்போது நுழைந்தது? ஏன் இதனைப்பாடுகிறார்கள்? யார் இந்த வழக்கத்தைப் புகுத்தினார்கள்? ஏன் இதுவரை எவருமே இதுபற்றி எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருக்கிறார்கள்? என்ற கேள்விகள் எல்லாம் என்மனதில் எழுந்தன.

கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சரான தனது முதலாவது பதவிக்காலத்தில், மனோன்மணியம் பெ. சுந்தரம்பிள்ளை அவர்களது இந்தப் பாடலைத் தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தாக சட்டரீதியாக ஏற்றுக்கொண்டு தமிழகத்தில் பாடசாலைகளிலும், வைபவங்களிலும் பாடப்படுவதை அதிகாரபூர்வமாக்கினார். அவ்வாறு அவர் செய்தபோது அந்த மூலப்பாடலில் இருந்த சிலவரிகளை நீக்கிவிட்டுப் பொருத்தமான வரிகளை மட்டுமே தெரிவுசெய்து தமிழத்தாய் வாழ்த்தாக மாற்றினார். அதுதான் இப்போதுவரை தமிழகத்தில் பாடப்பட்டு வருகிறது.
அந்தத் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடல் இதுதான்:

## தமிழ் தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தை கெழிலொழுகும!
சீராரும் வதனமெனத் திகழ் பாரதக் கண்டமிதில்!
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திரு நாடும்!
தக்கசிறு பிறை நுதலும் தரித்தநறும் திலகமுமே!
அத்திலக வாசனை போல் அனைத்துலகும் இன்பமுற!
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெரும் தமிழணங்கே!!!
தமிழணங்கே!!!
உன் சீரிளமை திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!!!
வாழ்த்துதுமே!!!
வாழ்த்துதுமே!!!

ஆனால், எல்லாவற்றுக்கும் குருட்டுத்தனமாகத் தமிழகத்தைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பின்பற்றுவதைப் போல இப்போது இந்தப்பாடலைப் பாடுவதும் இலங்கையில் பின்பற்றப்பட்டு விட்டது. சரி பரவாயில்லை. நல்லதுதானே என்று எடுக்க முடியாதுள்ளது. ஏனென்றால் இலங்கையில் மனோன்மணியனாரின் முழுப்பாடலும் பாடப்படுகிறது.

## அந்தப்பாடல் இதுதான்:

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே!
பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்து துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் தேயுதித்தே ஒன்றுபல வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே!

அறிவுபூர்வமாகச் சிந்திக்கக்கூடிய, பண்பாடுள்ள எவராவது, இந்தப் பாடலைத் தமிழ்த்தாய் வாழ்த்தாகப் பாடுவதை அறிமுகப்படுத்தியிருப்பாரா, என்று கேட்கத்தோன்றுகிறது. பாடுபவர்கள்கூட ஏன் கவனம் செலுத்தாமல் இருக்கிறார்கள் என்பது வியப்பாக இருக்கிறது. கவலையைத் தருகிறது.

கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு ஆகிய மொழிகள் உன்னிடம் இருந்துபிறந்திருந்தும்கூட நீ சிதைந்து போகாமலும், உலகத்தில் வாழ முடியாமல் வடமொழி அழிந்ததுபோல நீ அழிந்துவிடாமலும் இளமையோடு இருக்கின்ற உனது திறமையை வியந்து வாழ்த்துகின்றோம் என்ற கருத்துள்ள வரிகளை, நமது மொழியை வாழ்த்தும்போது பாடுவது தவறல்லவா. மற்றொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மொழி. அதுவும் தமிழுக்கு நிகராகக் கோலொச்சிய மூத்த மொழி அழிந்ததைச் சொல்லியா நமது மொழியை நாம் போற்றவேண்டும். இதனைக்கருத்தில் கொண்டுதானே கலைஞர். இந்த வரிகளை நீக்கியிருக்கிறார். ஆனால், அவரால் தெரிவுசெய்யப்பட்டு இப்பொழுது தமிழ் நாட்டில் பாடப்பட்டுவரும் பாடலில் உள்ள மேலும் இரண்டு வரிகள் தமிழ் மொழியை இழிவுபடுத்துவதை அவரும் கண்டுகொள்ளவில்லையே என்பதுதான் மிகவும் கவலைக்குரியது.

**"அத்திலக வாசனை போல் அனைத்துலகும் இன்பமுற,**
**எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெரும் தமிழணங்கே!!!**

என்ற வரிகளில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றது? நெற்றியிலே வைக்கப்பட்ட பொட்டிலே உள்ள நறுமணத்தைப்போல, எல்லாத் திசைகளிலும் புகழ்மணக்கஇருந்ததமிழ்ப்பெண்ணே"என்றுசொல்லப்பட்டுள்ளது. நெற்றியிலே வைத்திருக்கும் பொட்டிலே எவ்வளவு காலத்திற்கு நறுமணம் வீசும்? ஆகக்கூடியது அந்தப்
பொட்டு இருக்கும்வரை மணம் வீசலாம்.
சிலவேளை. பொட்டு அழிவதற்கு முன்னரே மணம் போய்விடலாம். அதே போல, **"புகழ் மணக்க இருந்த பெரும் தமிழணங்கே.."** என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் முன்பு ஒருகாலத்தில் தமிழ் புகழ் மணக்க இருந்தது, இப்போது மணக்கவில்லை, அது மங்கிப் போய்விட்டது என்றுதானே பொருள்.

மாபெரும் தமிழறிஞரான கருணாநிதி அவர்கள் இதனைக் கருத்தில் கொள்ளாமல் விட்டது கவலைக்குரிய விடயம். சிலவேளை எதிர்காலத் தமிழ்நாட்டில் தமிழின் நிலைமையை அப்போதே நினைத்துக்கொண்டு அந்தவரியை அனுமதித்தாரோ தெரியவில்லை. ஆனால், மொழிக்காக உயிர் கொடுத்த இனம் என்று உலகம் போற்றுகின்ற இலங்கைத் தமிழ் இனம், "எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே" என்று பாடுவது அறிவுக்குகந்ததல்லவா! **"எத்திசையும் புகழ்மணக்க இருக்கும் எங்கள் தமிழணங்கே"** என்றல்லவா பாடவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இது எதுவுமே தேவையில்லையே, ஒருவரின் பாடலைத் திருத்தவும் தேவையில்லை, சிதைக்கவும் தேவையில்லை, மற்ற மொழிகளைப் பழிக்கவும் தேவையில்லை. இடையிலே வந்த இந்த வழக்கத்தைத் தொடரவும் தேவையில்லை.

தமிழ்மொழியும், தமிழ்த்தாயும் வேறு வேறல்ல. தமிழ் மொழியைத்தான் தமிழ்த்தாய் என்கிறோம். அப்படியிருக்கும்போது தனித்தனியாகத் தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழ்மொழிவாழ்த்து என்று இரண்டு எதற்கு?

மகாகவி பாரதியாரின் பாடலைப் பாடியே தமிழ்மொழியை வாழ்த்துவோம். பண்பாடுள்ள தமிழராய் வாழ்வோம். சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கருத்தில் கொள்ளுங்கள்.

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# களுவாஞ்சிகுடி பொது நூலகமும், நூலகபொறுப்பாளர் அவர்களும் - ஓர் அனுபவப் பகிர்வு

ஊர்கள் தோறும் பாடசாலைகள் எத்தகைய முக்கியத்துவத்தைப் பெறுகின்றனவோ அத்தகைய முக்கியத்துவத்தை நூலகங்களும் பெறுகின்றன. கீழ் வகுப்புக்களில் மாணவர்களுக்குப் பலதுறைகளை அறிமுகப்படுத்துகின்ற பாடசாலைகள் மேல் வகுப்புக்களில் குறிப்பிட்ட ஒரு துறைக்கான பயில் நிலைகளையே பயிற்றுவிக்கின்றன. உயர் கல்லூரிகளும் அத்தொடர் நிலைகளையே பெரும்பாலும் பேணி வருகின்றன. ஆனால் நூலகங்களோ அவ்வாறு அமைவதில்லை. ஒரு துறைகளில் மாத்திரமல்லாமல் பல் துறைகளில் மாணவர் தம் அறிவினைப் பெருக்க வழி செய்கின்றன. விஞ்ஞானப் பிரிவு மாணவன் நூலகத்தின் உதவியுடன் கவிதை எழுதப் பயில்கின்றான், சிறுகதை, நாவல் எழுதுகிறான். கலை, வர்த்தகப் பிரிவு மாணவன் விஞ்ஞான சஞ்சிகைகளைப் படிக்கின்றான். வைத்திய துறையில் பயில்கின்ற மாணவன் சமய பக்திப்பாடல்களை நூலகங்களில் பெற்றுப் பண்ணோடு பாடுகின்றான், விஞ்ஞானத்திற்கும் மெய்ஞானத்திற்கும் இடையிலான தொடர்பு நிலையினை ஆராய்ச்சி செய்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இவ்வாறு நூலகமானது வாசகர்கள் பல துறைகளைப் பயில்வதற்குரிய பயிற்சிக்களமாக அமைவதோடு, ஒரு மனிதனை பூரண அறிவுள்ள மனிதனாகவும் உருவாக்கி விடுகின்றது. "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" , "கண்டது கற்கப் பண்டிதனாவான்" போன்ற பொன் மொழிகளும் கூட இதனையே குறித்து நிற்கின்றன.

இத்தகைய பெருமை மிகுந்த நூலகங்கள் சிறப்புடன் இயங்குவதற்கு மூலகாரணமாக அமைபவர் அந்நூலகத்தின் நூலகரே ஆவார். ஒரு நூலகத்தின் இயக்கமானது அந்நூலகரின் இயங்கு நிலையிலேயே தங்கியுள்ளது. அந்த வகையில் களுவாஞ்சிக்குடி பொது நூலகத்தின் சிறப்பான இயங்கு நிலைக்கு எமது மதிப்புக்குரிய நூலக உத்தியோகத்தர் திருமதி. ரமணி ஜெயபாலன் அவர்களின் அதி உன்னத இயங்கு நிலையே காரணமாக அமைகின்றது.

நான் களுவாஞ்சிகுடி பொது நூலகத்திற்கும் எனக்கும் இடையிலான தொடர்பினை நினைத்துப் பார்க்கின்றேன். 1988 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரம் பயில்கின்ற போது இந்நூலகத்தின் வாசகராக என்னைப் பதிவு செய்தேன். அப்போது நான் முதன்முதலாகக் கண்ட நூலகர் திருமதி. ரமணி ஜெயபாலன் அவர்களே ஆவர். அவரை வாசகர் பலர் "ரமணி அக்கா" என்றுதான் அழைப்பார்கள். நானும் அவ்வாறுதான் அழைப்பேன். எப்போதும் சிரித்த முகம், அமைதியான சுபாவம், நூலகத்தில் பேச வேண்டிய தொனியில் அழகாக உரையாடுவார்.

வாசிப்பின் பொருட்டு மாணவர்களை ஊக்கப்படுத்துதல், வாசகர்களின் வரவை அதிகரிக்கச் செய்தல், புதிய வாசகர்களை இணைத்துக்கொள்வதற்கேற்ற செயல்திட்டங்களைச் செய்தல், வாசகர்களுக்குத் தேவையான வசதிகளை நூலகத்தில் ஏற்படுத்துதல் போன்ற செயற்பாடுகளை அப்போது இருந்தே செய்துவரும் இவரிடம் சிறு கண்டிப்புக் கலந்த அன்பு இருக்கும். நான் பல தடவைகள் இரவல் பெற்ற புத்தகங்களை மீள ஒப்படைக்கப் பிந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அப்போதெல்லாம் மிகக் கண்டிப்புடன் இருந்து அதற்குரிய தண்டப் பணத்தினைப் பெற்றுக் கொள்வார். எவ்வித பாரபட்சமும் இன்றி கடமையை நடுநிலைமையோடு செய்வதில் அவருக்கு நிகர் அவரேதான்.

தன்னுடைய கணவனை இழந்த துயருடன் நூலகம் நுளைந்த இவருக்கு நூலக ஊழியர்களும், நூல்களும், வாசகர்களும் சற்று ஆறுதலை அளித்தனர். ஒவ்வொரு நூல்களையும் தன்னுடைய குழந்தையாகக் கருதி அவற்றைப் பராமரிக்கின்ற போக்கு அவரிடம் காணப்படுகின்றது. ஆயிரக் கணக்கான நூல்கள் உள்ள நூலகத்தில் நாம் தேடுகின்ற நூலின் பெயரை அவரிடம் கூறினால் போதும் உடனே குறிப்பிட்ட புத்தக அலுமாரிக்குச் சென்று கைவைத்த உடனேயே அப்புத்தகம் அவருடைய கையில் இருக்கும். அத்தகைய பரிட்சயம் அவருக்கு இருக்கின்றது.

சிற்சில வருடங்களில் களுவாஞ்சிக்குடி நூலகத்தில் இருந்து ரமணி அக்கா காணாமலும் போய் விடுவார். இடமாற்றம் அவ்வப்போது வந்து இவருடைய தொடர்ச்சியான நூலக அபிவிருத்திச் செயற்பாடுகளை முடக்கிவிடும். ஆனாலும் இவர் மாற்றம் பெற்றுச் செல்லுகின்ற நூலகங்கள் எதுவாக இருந்தாலும் அவருடைய சேவைக்கால எல்லைக்குள் அவற்றை எவ்வாறெல்லாம் வளர்த்து விடலாமோ அவ்வாறு வளர்த்து விட்ட ஒருவராகவே இவர் இருக்கின்றார். இதற்குச் சான்றாக பெரியகல்லாற்றிலும், தேற்றாத்தீவிலும் இவர் வெளியிட்ட சஞ்சிகைகளும் அந்நூலக வாசகர் வட்டங்களின் கருத்துரைகளும் அமைகின்றன.

எமது நூலகர் அவர்கள் மீண்டும் மாற்றங்கள் பெற்று எமது நூலகத்திற்கு வருகை தருகின்ற போதெல்லாம் துயரமே அவரை ஆட்கொள்ளும். காரணம் தான் வைத்துச் சென்ற ஒழுங்கு முறையில் நூல்கள் இருப்பதில்லை. பல நூல்கள் சேதமுற்றிருக்கும், சில நூல்கள் எவ்வித பதிவும் இல்லாது காணாமல் போய்யிடிருக்கும். இத்தகைய இடர்பாடுகளால் நூலக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வளர்ச்சி நிலை அவ்வப்போது பாதிக்கப்படுவது இயல்பான தொன்றாகி இருந்தது.

இங்கே மிக முக்கியமாகக் குறிப்பிட்டுக்கூறக்கூடிய விடயம் என்ன வெனில் நூலகத்திற்கு முன்னால் களுவாஞ்சிக்குடி பொலிசார் தமது பொலிஸ் நிலையத்தின் இரண்டாவது பகுதியினை (Police post- 02) அமைத்தமை ஆகும். இதன் காரணமாக வாசகர்களின் வரவு வெகுவாகக் குறைந்துவிட்டது. அடிக்கடி நடைபெறுகின்ற வன்செயல் காரணமாக வாசகர்கள் நூலகம் செல்ல அஞ்சினர். நானும் கூட அத்தகைய காலங்களில் நூலகம் செல்வதை நிறுத்திக் கொண்டேன். எப்போது என்ன நடக்கும் என்று தெரியாத பயங்கர நிலை அது. அந்நிலையிலும்கூட எமது நூலகர் தமது கடமை உணர்வின் உந்துதலால் தொடர்ந்தும் பணி புரிந்தமை மெச்சத்தக்கதொன்றாகும்.

நாளடைவில் நூலகக் கட்டடம் செயலிழந்து செல்லும் நிலையைக் காணக்கூடியதாக இருந்தது. மழை ஒழுக்குகளினால் பல புத்தகங்கள் பாதிக்கப்பட்டன. பல பெறுமதிவாய்ந்த புத்தக அலுமாரிகள் சேதமுற்றன. இத்தகைய பல காரணங்களின் நிமித்தம் புதிய கட்டடத்தின் தேவை அப்போது உணரப்பட்டது. எமது நூலகர் அவர்கள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கம், எமது நூலக வாசகர் வட்டம் ஆகியோரின் உதவியுடன் களுவாஞ்சிக்குடி முகாமை ஆலய பரிபாலனசபையிடம் இருந்து காணியைப் பெற்று தற்போதைய இடத்தில் நூலகத்திற்குரிய கட்டட நிர்மாணத்திற்கான நிதி உதவியினைப் பல்வேறுபட்ட போராட்டத்தின் மத்தியில் அரசிடமிருந்து பெற்று அக்கட்டடத்தின் ஒவ்வொரு கல்லும், மண்ணும், கம்பியும், சீமெந்தும் இவரது கண்ணிற் படாமல் கட்டடம் ஏறியதே இல்லை. என்று கூறுமளவிற்கு இவருடைய நேரடி கண்காணிப்பின் கீழ் இக்கட்டடம் கட்டப்பட்டு இன்றைய புது நிலையினை எய்தியது.

நூலகருக்கு புதிய கட்டடம் வந்தமை மகிழ்ச்சியை கொடுத்தாலும், பழைய கட்டடத்தில் ஏற்பட்ட மழை ஒழுக்கினாலும் கறையான் அரிப்பினாலும் முக்கியமான பல புத்தகங்கள் அழிந்தமை ஒரு பேரிழப்பாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அத்துன்பியல் சம்பவத்தினை நூலகர் அவர்கள் அடிக்கடி என்னிடம் கூறி கவலைப்பட்டுக்கொள்வார். எனக்கும் அது மிகுந்த ஏமாற்றத்தினை அளித்தது. ஏனெனில் பல்கலைக்கழகத்தில் நான் பயில்கின்ற காலத்தில் பல்கலைக்கழக நூலகத்தில் இரவல்பெற முடியாத நூல்கள் பலவற்றை களுவாஞ்சிக்குடி பொது நூலகத்தில் இரவல் வழங்கும் பகுதியில் இருந்து பெற்று பயன்படுத்தி இருக்கின்றேன். அத்தகைய நூல்களின் அழிவு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். எமது நூலகருக்கு இடமாற்றம் வராமல் இருந்திருந்தால் அந்நூல்களை பாதுகாத்திருக்க முடியும். எமது நூலகத்தின் அபிவிருத்தி குன்றுகின்ற சந்தர்ப்பங்கள் எப்போதெல்லாம் ஏற்பட்டதோ அப்போதெல்லாம் எமது நூலகர் இடமாற்றம் பெற்று சென்ற காலங்களிலாகும் என்பது நூலகச் செயற்பாட்டினை ஆழ ஊடுருவி நோக்குபவர்களுக்குப் புலனாகும்.

திருமதி. ரமணி ஜெயபாலன் அவர்களின் அயராத உழைப்பின் காரணமாக கடந்த 2013 ஆம் ஆண்டின் வாசிப்பு மாதத்திற்கான மாவட்ட மட்ட விருதினை களுவாஞ்சிகுடி பொது நூலகமே முதல் தடவையாகப் பெற்றுக் கொண்டது. அதற்காக அவர் கடந்த 2014 ஆம் ஆண்டில் விருது பெற்று பெரும் கௌரவத்தினை அடைந்தார்.

களுவாஞ்சிக்குடி நூலகத்தின் அடுத்த ஒரு மைல்கல்லாக அமைவது கடந்த 21.10.2017 இல் இலத்திரனியல் நூலகமாக (E. Library) தரம் உயர்த்தப்பட்டமையே ஆகும். இந்த மகத்தான பெருவிழாவிற்கு நானும் கலந்துகொள்ள வாய்ப்புக்கிடைத்ததோடு இலத்திரனியல் நூலகத்தின் முதலாவது இலத்திரனியல் அங்கத்துவ அட்டையினைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பமும் ஏற்பட்டது. தற்போது இந்நூலகத்தில் வாசகர்களாக இருக்கின்ற 1092 அங்கத்தவருள் 24 வது அங்கத்துவ இலக்கத்தினைக் கொண்டவனாக இருப்பது எனக்கு மகிழ்சியைத் தருகின்றது.

எமது நூலகர் அவர்கள் இலத்திரனியல் நூலகத்தினை சிறப்பான முறையில் செயற்படுத்தும் நோக்குடன் அனைத்து நூலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விபரங்களையும் நாம் வீட்டில் இருந்தவாறு அறிந்துகொள் வதற்கும், எமக்குத் தேவையான நூல்களைத் தெரிவு செய்வதற்கும், நாம் இரவல் பெற்றுக்கொண்ட நூல்களின் காலாவதித் திகதியை ஞாபகப்படுததுவதற்கும், உலகில் எந்தவொரு மூலையில் இருந்தும் எமது நூலகத்தையும் நூல்களையும் அறிந்து கொள்வதற்கும் ஏற்றவகையில் செயற்பட்டு வருகின்றார். தாம் ஓய்வு பெறுவதற்கு முன்பே இத்தகைய கைங்கரியங்களைச் செய்து முடித்து விடுவதென்பது அவருடைய இலக்காகும்.

இவர் கடந்த 2017 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை முன்னெடுத்துக் கொண்டு வரும் செயற்றிட்டம் ஒன்றினை வெளிப்படுத்தாமல் இருக்க முடியாது. அதாவது களுவாஞ்சிக்குடியில் மாலையில் நடைபெறும் இலவசக் கல்வி நிலையங்களிலும் அண்மித்த பாடசாலைகளிலும் கற்கின்ற சின்னஞ் சிறார்களை அணுகி அவர்களுக்கு வாசிப்புப் பழக்கத்தினையும் நூலகத் தொடர்பினையும் உண்டுபண்ணும் நோக்கில் கடந்த 2017 இல் சிறிய கதைப்புத்தகங்களை வழங்கி, அவர்களுக்கு வாசிப்புப் பயிற்சியினை அளித்து, தற்போது அவர்கள் சற்றுப் பெரிய நூல்களை வாசிக்கவும், நூலகத்திற்குத் தாமாக வந்து பொருத்தமான நூல்களைத் தெரிவு செய்யவும், பயிற்சியினைப் பெற்றுள்ளனர். இச்சிறந்த செயற்றிட்டத்தினை எவரது ஆலோசனையுமின்றி தனது உள்ளத்து உந்துதலின் நிமிர்த்தம் செய்து கொண்டு வருகிறார். சுய வேலைப்பழுக்கள் அதிகமாக உள்ள இக்காலத்தில் இத்தகைய பொதுநலச் செயற்பாட்டில் அதிக நாட்டம் கொண்டு இயங்கும் இந்நூலகரின் சேவை போற்றுதற்கு உரியதாகும்.

இத்தகைய பெருமை மிக்க இந்நூலகர் இன்னும் சில மாதங்களில் ஓய்வு பெற இருப்பதனால் தொடர்ந்தும் அவருடைய சேவை எமது நூலகத்திற்கும் எமக்கும் கிடைக்காத துர்பாக்கிய நிலை ஏற்பட இருக்கின்றது. இந்நிலையானது எமக்கு மிகுந்த ஏமாற்றத்தினையும் மன வேதனையினையும் ஏற்படுத்தக் கூடியதாக அமைகின்றது. எமது நூலகருக்குக்கூட இந்நூலகத்தை விட்டு பிரிவதென்பது கவலையளிக்கக் கூடிய விடயமாகவே அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏனெனில் தற்போது செயற்பாட்டில் இருக்கின்ற இலத்திரனியல் நூலக அமைப்பு முறையை செயற்படுத்தும் பயிற்சியினை தன்னைத் தவிர எந்த நூலகர்களும் பெற்றுக் கொள்ளவில்லை என்பதும், தன்னைப்போல் நூல்களையும், நூலகத்தினையும், வாசகர் எண்ணிக்கையினையும், வாசகர் வட்டத்தினையும்பேணுவோர் யாவர்? போன்ற வினாக்களும் அவரை வாட்டியெடுத்த வண்ணமே உள்ளன என்பதனை அவருடன் அளவளாவிய ஒரு சிறு பொழுதிலே அறிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது.

இவ்வாறாக எத்தனையோ தடைகள் வந்தபோதிலும் செய்யும் தொழிலே தெய்வம் என்ற உயரிய சிந்தனையோடும் மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற உன்னத நோக்கோடும் 30ஆண்டுகள் செயலாற்றி, நூலக அபிவிருத்தி தொடர்பாக அவர் வைத்திருந்த மேலான குறிக்கோளை எய்த பல வியூகங்கள் வகுத்து, அதனை இலாவகமாக எட்டிப்பிடித்து வெற்றிக்கொடி நாட்டியிருக்கும் எமது களுவாஞ்சிக்குடி நூலகத்தின் வாழ்நாள் நூலகராக வாசகர் மனங்களில்உலாவருகின்றதிருமதி. ரமணிஜெயபாலன் அவர்கள் நூலகர்களுக் கெல்லாம் முன்னுதாரணமாக விளங்குகிறார் என்பதனை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். எதிர் காலத்தில் எமது நூல் நிலையத்தில் ஏற்பட இருக்கும் அவருடைய வெற்றிடத்தை ஈடுசெய்வதானால் அவரைப் போன்று சுயநலம் கருதாது பொதுநல நோக்கில் சேவையாற்றவல்ல ஒருவரால்தான் முடியும். அத்தகைய ஒருவரை மிகுந்த ஏக்கத்துடன் வாசக சமூகத்தினர் எதிர்பார்த்திருப்பர் என்பது திண்ணமாகும். எமது நூலகரின் எதிர்காலம் சிறக்கவும் அவர் நீடூழி காலம் வாழவும் வாசக அங்கத்தவன் என்ற வகையில் நான் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. க. மதிசீலன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
கலைகலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# களுவாஞ்சிகுடி பொது நூலக தன்னியக்கமாக்கலும் அதன் இலத்திரனியல் சேவைகளும்

பொது நூலகங்கள் ஒரு சமூகத்தின் அறிவு திறனை விருத்தி செய்யும் தகவல் மையங்களாகும். சிறியவர் முதல் பெரியவர் வரை அவரவர் தேவைகளுக்கான தகவல்களையும் சேவைகளையும் வழங்கும் முக்கிய நிறுவனமாக பொது நூலகங்கள் அமைகின்றன. பல்கலைக்கழக நூலகங்கள், பாடசாலை நூலகங்கள், விசேட நிறுவன நூலகங்கள் என பல்வேறுபட்ட நூலகங்கள் காணப்பட்டாலும் இவையனைத்திலும் தலை சிறந்ததாக பொது நூலகங்கள் கருதப்படுகின்றது. காரணம் பொது நூலகங்கள் சமூகத்தில் உள்ள அனைத்து வகையான வாசகர்களுக்குரிய சேவைகளையும் தகவல்களையும் வழங்கும் ஓர் அறிவுக் களஞ்சியமாகும். எமது நாட்டை பொறுத்தமட்டில் அதிலும் குறிப்பாக எமது கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த மட்டில் பல பாடசாலைகளில் நூலகத்துக்கான இட வசதியோ அல்லது வளங்களோ காணப்படுவதில்லை ஒரு சில நகரத்தை அண்டிய பாடசாலைகளும் தேசிய பாடசாலைகளும் மட்டுமே சிறப்பான நூலக வசதிகளை கொண்டு காணப்படுகிறது. அவ்வாறு காணப்படும் பாடசாலை நூலகங்களிலும் பொதுவாக கற்றல் கற்பித்தல் சம்பந்தமான ஆவணங்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அதிகம் காணப்படுகின்றன. எனவே இளைய சமூகத்தின் வாசிப்புத் திறன் கற்றல் திறன் மற்றும் நினைவாற்றல் என்பவற்றை விருத்தி செய்யும் பாரிய பொறுப்பு எமது பிரதேசங்களில் உள்ள பொது நூலகங்களுக்குண்டு. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பதற்கேற்றால் போல் இளவயதில் வாசிக்கும் பழக்கத்தை விதைப்பதில் பொது நூலகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. ஏனெனில் பொது நூலகங்களே சிறுவர்களுக்கென ஓர் தனிப்பகுதியையும் நூல்களையும் அங்கத்துவத்தையும் வழங்குகின்றன. இவ்வாறு பொது நூலகங்களின் சிறப்பினையும் முக்கியத்துவத்தையும் ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கிக் கொண்டே போகலாம்.

இருப்பினும் எமது பிரதேசங்களில் உள்ள பொது நூலகங்களின் பாவனை எவ்வாறு உள்ளது? அதில் எத்தனை அங்கத்தவர்கள் உள்ளனர்? அதிலிருந்து இரவல் பெறப்படும் புத்தகங்களின் எண்ணிக்கை எவ்வளவு? போன்ற வினாக்களுக்கு விடை காண எத்தனித்தால் நிச்சயமாக இன்றைய காலகட்டங்களில் பொது நூலகங்களின் பாவனை குறைந்து செல்வதை எம்மால் உணர முடியும். இதற்கான காரணம் என்ன? என ஆராயும் பொழுது நம்மில் பலர் கூறுவது அதிகரித்து வரும் தொழில்நுட்ப வசதிகள், இணைய பாவனை, கையடக்கத்தொலைபேசி / ஸ்மார்ட் போன் பாவனை அதிகரிப்பு. தொலைக்காட்சி நிறுவனங்களின் அதிகரிப்பு, சமூக வலைதளங்களில் பாதிப்பு என பல காரணங்கள். இதை சற்று ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் எமது மாகாணத்தை விட ஏன் இலங்கையை விட அதி நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட, அதிவேக இணைய வசதிகளை கொண்ட மேற்கத்தைய நாடுகளில் இன்றும் பொது நூலகங்களின் பாவனை குறைவடையவில்லை என்பதை அறிந்து கொள்ள காணமுடியும். அப்படியென்றால் பொது நூலகங்களில் பாவனை குறைவடைவதற்கான உண்மையான காரணம் யாதாக இருக்க முடியும்?. இதற்கான ஒரு காரணங்களை சுட்டிக்காட்டுவதுடன் பொது நூலகங்களின் பாவனையை எவ்வாறு அதிகரிக்கலாம் என்பதற்கான வழி முறைகளையும் இயம்புவதாக இக்கட்டுரை அமைகின்றது. மேலும் தற்போதைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அதிநவீன இலத்திரனியல் யுகத்திற்கேற்ப களுவாஞ்சிகுடி பொது நூலகம் எவ்வாறு மாற்றியமைக்கப்பட்டு வளப்படுத்தப்பட்டுள்ளது என்பது பற்றியும் இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

தற்காலங்களில் ஏற்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சியினால் உருவான இணைய வசதிகள், சமூக வலைத்தளங்கள், ஸ்மார்ட் போன் எனப்படும் அதிநவீன கையடக்கத் தொலைபேசிகள் என்பன உலகை உள்ளங்கையில் அடக்கிவிடுகிறன. இக்காலத்தில் உருவாகும் சமூகத்திற்கு அதிலும் குறிப்பாக இளைய சமூகத்திற்கு தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள் அதிகமாகவே காணப்படுகின்றது. அது மட்டுமல்லாமல் தமக்குத் தேவையான தகவல்களை உடனுக்குடன் இலகுவாக இணையத்தின் மூலம் எங்கிருந்து வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதி காணப்படுகின்றது. எனினும் சரியான உண்மையான தகவல்களை பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் மிக அரிதாகவே உள்ளது. எனவே இக்காலகட்டத்தில் இளைய சமூகத்திற்கு தேவையான சரியான உண்மைத் தகவல்களை வழங்க வேண்டிய பாரிய பொறுப்பு நூலகங்களுக்கும் நூலகர்களுக்குமுண்டு. மேலும் விரைவான தகவல் பாவனை, கணப்பொழுதில் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல் போன்றவையே இன்றைய சமூகத்தின் பெரும் எதிர்பார்ப்புக்களாகும். அத்துடன் தமக்கு தேவையானவற்றை தமது காலடியில் பெற்றுக்கொள்வதையே பெரும்பாலானோர் இன்று விரும்புகின்றனர். இணையம் மூலம் பொருட்கள் கொள்வனவு செய்யும் வழக்கம் அதிகரித்து வருவது இதற்கு ஓர் சிறப்பான உதாரணமாகும். ஒரு ஸ்மார்ட் போன் கையில் இருந்தால் அதன் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகள் எண்ணிலடங்காதவை. எனவே இன்றைய சந்ததியினரின் எதிர்பார்ப்பும் தேவையும் மிகவும் மாறுபட்டது. இதனை உணர்ந்து இன்றைய சமூகத்திற்கு மட்டுமல்லாமல் எதிர்கால சந்ததியினரினதும் தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் பூர்த்திசெய்யக்கூடியவாறு தகவலையும் சேவைகளையும் வழங்க வேண்டியது நூலகங்களின் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இலங்கையில் காணப்படக்கூடிய எத்தனை பொது நூலகங்கள் இவ்வாறான சவால்களை சந்திக்க தயாராக உள்ளது?. உண்மையில் அதிகரித்து வரும் நவீன தொழில்நுட்ப யுதத்திற்கேற்ற வகையில் எமது நாட்டில் உள்ள பொது நூலகங்கள் தகவல்களையும் சேவைகளை வழங்க முடியாமல் இருப்பதே அவற்றின் பாவனை குறைவடைந்து செல்வதற்கான மிக முக்கிய காரணமாகும். இலங்கையில் உள்ள பொது நூலகங்கள் உள்ளூராட்சி மன்றங்கள் அல்லது நகராட்சி மன்றங்கள் அல்லது பிரதேச சபைகளின் கீழ் நிர்வகிக்கப்பட்டுவருவதுடன் பொது நூலகங்கள் பெருமளவில் பராமரிக்கப்படாததும் அதற்குரிய முக்கியத்துவம் வழங்கப்படாததும் அதன் பாவனை குறைவதற்கு மற்றுமொர் காரணமாகும். மேலும் பொது நூலகங்களில் போதியளவு வளங்கள் காணப்படாமை, குறைவான உட்கட்டமைப்பு வசதிகள், ஆளனி பற்றாக்குறை, நூலகர்ளின் சேவை தொடர்பான பிற்போக்கான எண்ணப்பாடுகள், நவீன இலத்திரனியல் யுகத்திற்கேற்ப புதிய நூலக சேவைகளை வழங்க தம்மை தயார் செய்து கொள்ள தவறும் நூலகர்களின் பிற்போக்கான மனப்பாங்குகளும் வேறு சில காரணங்களாகும்.

இதனை இனம் கண்டு கொண்ட இலங்கை அரசாங்கத்தின் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு, இலங்கையில் உள்ள பொது நூலகங்களை மேம்படுத்துவதற்காக **"ஈ லைபரி ஓட்டோ மேஷன்"** (E-Library Automation Project) என்னும் ஒர் நிகழ்ச்சித் திட்டத்தை கடந்த வருடம் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பொது நூலகங்களை தன்னியக்கமாக்குவதுடன் பொது நூலகங்களில் தொழில் புரியும் நூலகா□கள் மற்றும் நூலக ஊழியர்களை வளப்படுத்தல் மூலம் இக்காலத்திற்கு ஏற்றவாறு புதிய இலத்திரனியல் நூலக சேவைகளை வழங்குவதற்காக பொது நூலகங்களை மேம்படுத்துவதாகும். அதாவது நூலகத்தில் கணனிகளைப் பொருத்தி அவற்றில் நூலக மென்பொருட்களை உட்செலுத்தி அவற்றை கையாளுவதற்கு தேவையான சகல விதமான பயிற்சிகளையும் நூலக ஊழியர்களுக்கு வழங்குவதன் மூலம் புதிய சேவைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வழங்குவதற்கு ஏற்றவாறு நூலகர்களையும் நூலகத்தையும் வளப்படுத்துவதாகும். இத் திட்டத்துக்கான நிதி அனுசரணை உலக வங்கியும் அவுஸ்திரேலிய அரசாங்கமும் வழங்கியிருந்ததுடன் இதற்காக சுமார் 30 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. மேலும் இத் திட்டத்துக்கான முழு தொழில்நுட்ப ஒத்துழைப்பும் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் வழங்கியதுடன் நூலக தன்னியக்கமாக்கலுக்காக நூலகர்களை வளப்படுத்தும் பணியும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.


இதன்னடிப்படையில் இலங்கை பூராகவும் உள்ள பொது நூலகங்களில் இருந்து 40 நூலகங்கள் தெரிவு செய்யப்பட்டது. அதில் 30 நூலகங்கள் பூரணமாக தன்னியக்கமாக்கப்படுவதெனவும் 10 நூலகங்கள் இலத்திரனியல் சேவைகளை வழங்குவதற்கு ஏற்றவாறு தயார் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. களுவாஞ்சிகுடி பொது நூலகமும் இத்திட்டத்தின் கீழ் முற்றாக தன்னியக்கமாக்க தெரிவு செய்யப்பட்ட நூலகங்களில் ஒன்றாகும்.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக களுவாஞ்சிகுடி பொது நூலகத்தின் நிலை அதன் உட்கட்டமைப்பு, கணனி உபகரணங்கள், ஆளணி என்பன சார்பாக இனம் காணப்பட்டது. இரண்டாவது கட்டமாக தன்னியக்கச்சேவையை வழங்குவதற்காக நூலகங்கத்தில் உள்ள நூலகர்களுக்கு தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதன்போது நூலகர்கள் திறம்படச் செயற்படத் தேவையான நேரான எண்ணங்களை தோற்றுவித்தல் (Positive Thinking) , அவர்களது மனபாங்குகளை கட்டி யெழுப்புதல் (Attitude Building) போன்ற கருப்பொருட்களில் செயலமர்வுகள் நடத்தப்பட்டன. மேலும் நூலக செயற்பாடுகளை சீராக மேற்கொள்ளுவதற்காக 5S முறைமை (System) தொடர்பான வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன. மூன்றாவது கட்டமாக நூலகங்களில் கணனி வலையமைப்புகள் நிறுவப்பட்டன. நான்காவது கட்டமாக நூலக தன்னியக்கமாக்களலுக்குத் தேவையான கணனி உபகரணங்கள் (Sever, Desktop), பார்கோட் பிரிண்டர் (Barcode



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Printer), பார்கோட் ஸ்கேனர் (Barcode Scanner) போன்ற உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் அவற்றைக் கையாளுவதற்கு தேவையான தொழில்நுட்ப பயிற்சிகளும் வழங்கப்பட்டன.



நூலகத்திற்கு வழங்கப்பட்ட பார்கோட் பிரிண்டர் , பார்கோட் ஸ்கேனர், கணினி உபகரணங்கள்

இறுதியாக நூலக தன்னியக்கமாக்களலுக்குத் தேவையான நூலக முகாமைத்துவ மென்பொருள் ஒன்று நிறுவப்பட்டு அதனை கையாளுவதற்கு தேவையான பயிற்சிகள் நூலக ஊழியர்களுக்கு வழங்கப்பட்டன. இதற்காக 'கொஹா' (Koha) எனப்படும் மென்பொருள் தெரிவு செய்யப்பட்டது. இம்மென்பொருளானது உலகளாவியரீதியில் பெரும்பான்மையான நூலகங்களால் பயன்படுத்தப்படும் ஒரு மென்பொருளாகும். மேலும் இலங்கையில் அநேக பல்கலைக்கழக நூலகங்கள் தமது தன்னியக்க செயற்பாட்டுகளுக்கு இம் மென்பொருளை பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது. இம்மென்பொருள் தொகுதியைக் கொண்டு ஒரு நூலகத்தில் நடைபெறும் அனைத்து பிரதான செயற்பாடுகளையும் இலகுவாக மேற்கொள்ள முடியும்.

இதற்கமைய களுவாஞ்சிகுடி பொது நூலகத்தில் 'கொஹா' நூலக முகாமைத்துவ மென்பொருள் தொகுதி நிறுவப்பட்டு தன்னியக்கமாகல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் போது நூல்களின் விபரணங்கள் அணைத்தும் தரவுத்தளத்தில் பதியப்பட்டதுடன் நூலகத்தை பாவிக்கும் அங்கத்தவர்களின் விபரங்களும் கணனியில் பதிவேற்றப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



கொஹா தானியங்கு முறைமையில் தரவு உள்ளீடு

தற்போது களுவாஞ்சிகுடி பொது நூலகத்தில் உள்ள அனைத்து நூல்களும் பார்கோட் முறை மூலம் அடையாளமிடப்பட்டிருப்பதுடன் அங்கத்தவர்களை இனம் காண்பதற்காக பார்கோட் அங்கத்துவ அடையாள அட்டை வழங்கப்படுகிறது. இதன் மூலம் வாசகர்களின் விபரங்களை அவர்களின் புகைப்படங்களுடன் பெற்றுக்கொள்ள முடிவதுடன் பட்டியலாக்கம், நூற் சுழற்சி போன்ற நூலக செயற்பாடுகள் அனைத்தும் இம் மென்பொருளின் உதவியுடன் நிறைவேற்றப்படுகிறது.



பார்-கோடு அடையாளமிடப்பட்ட நூல்        பார்-கோடு அடையாளமிடப்பட்ட அங்கத்துவ அட்டை

மேலும் இத் தன்னியக்க தொகுதி மூலம் ஒரு வாசகர் தனக்குத் தேவையான நூல்களை நூற் தலைப்பை கொண்டோ அல்லது ஆசிரியரின் பெயரை கொண்டோ அல்லது விடயம் சார்பாகவோ இலகுவாக தேடிப் பெற்றுக் கொள்ளவதுடன் ஒரு குறிப்பிட்ட நூலாசிரியரினால் எழுதப்பட்ட அந் நூலகத்திலுள்ள அனைத்து நூல்களையும் கணப்பொழுதில் தெரிந்து கொள்ள முடியும். அத்துடன் ஒரு அங்கத்தவருக்கு தேவையான ஒரு நூல்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நூலகத்தில் இருந்து இன்னுமோர் அங்கத்தவரினால் இரவல் பெறப்பட்டிருப்பின் அதை இலகுவாக இனங்காண கூடிய வசதி கிட்டியுள்ளது. மேலும் நூல் உள்ள பகுதி, இராக்கை என்பவற்றை இலகுவாக இணம் காண்பதன் மூலம் அக்குறிப்பிட்ட நூலை அணுகுவது இலகுவாகிறது. மேலும் வாசகர்கள் தாங்கள் இரவல் பெற்ற நூல்களின் விபரம், திருப்பி ஒப்படைக்க வேண்டிய திகதி, தண்டப்பணம் செலுத்த வேண்டுமாயின் அது பற்றிய விபரம் போன்ற பல விடயங்களை தாமாகவே அறிந்து கொள்ள முடியும்.


இதைத் தவிர நூலகத்தைப் பொறுத்தமட்டில் நூலக நடவடிக்கைகளுக்கு தேவையான அனைத்து புள்ளி விபரங்களையும் இம்மென் பொருளின் உதவிகொண்டு இலகுவாக பெற்றுக்கொள்ள முடிகிறது. உதாரணமாக நூலகத்தில் உள்ள மொத்த நூல்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மொத்த நூல்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு வகையிலும் உள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு நாளும் இரவல் வழங்கப்படும் நூல்களின் விபரம், ஒவ்வொரு நாளும் திருப்பி ஒப்படைக்கப்படும் நூல்களின் விபரம் போன்ற பல தகவல்களை இலகுவாக பெற்றுக்கொள்ள முடிகிறது. மேலும் அதிக முறை இரவல் பெறப்படும் நூல்களின் விபரம், அதிகளவு நூல்களை இரவல் பெற்று கொள்ளும் அங்கத்தவர்களின் விபரம், மற்றும் நூலகத்திலிருந்து இதுவரை காலமும் எந்த நூல்களையும் பெற்றுக் கொள்ளாத அங்கத்தவர்களின் விபரம் என பல விடயங்களைத் தெரிந்து கொள்ள முடியும். தற்போது நிறுவப்பட்டுள்ள தன்னியக்க தொகுதியின் மூலம் ஒரு குறிப்பிட்ட நூல் காலம் தாமதித்து திருப்பி ஒப்படைக்கப்படுமிடத்து தானாகவே உடனடியாக அதற்குரிய தண்டப்பணம் கணிக்கப்பட்டு தெரிவிக்கப்பட்டுவதால் தண்டப்பணம் அறவிடல் இலகுவாக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு நூல் எந்த வாசகரினால் இரவல் பெறப்பட்டுள்ளது என்ப -தையும் அது எப்பொழுது திருப்பி ஒப்படைக்கப்படும் என்பதையும் இலகுவாக இனம் காணலாம். அத்துடன் நூலக வருடாந்த கணிப்பீடு, வருடாந்த நூல் கொள்வனவு என்பவற்றை மேற்கொள்ளுவது இலகுவாக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

'கொஹா' (Koha) என்பது இணையவழி சார்ந்த நூலக முகாமைத்துவ மென்பொருள் தொகுதி என்பதால் அது பாவனையாளர்களுக்கும் நூலகர்களுக்கும் என இரு வெவ்வேறு வகையான இடைமுகங்களை வழங்குகின்றது. இதனால் நூலகர்களும் அங்கத்தவர்களும் தத்தமது தேவைக்கேற்ப எவ்வித தடங்கலும் இன்றி இந்தத் தொகுதியை பாவிக்க முடியும். அதுமட்டுமல்லாமல் அங்கத்தவர்கள் மேற்கூறப்பட்ட அனைத்து வசதிகளையும் தாமாகவே பெற்றுக்கொள்ளக் கூடியதாக அமைவதுடன் ஸ்மார்ட்போன் (Smart Phone), டாப் (Tab), லேப்டாப் (Laptop), போன்ற எந்த ஒரு கணனி உபகாரணத்தின் ஊடாகவும் இதனை பாவிக்க முடியும். வேறு எவ்விதமான மென்பொருட்களையும் தமது உபகரணங்களில் நிறுவாமல் இத்தொகுதியை இணையத்தைப் போன்றே பயன்படுத்த முடியும்.





நூலகங்களுக்கான இடைமுகம்



அங்கத்தவர்களுக்கான இடைமுகம்

மேற்கூறப்பட்ட அனைத்து வசதிகளையும் கொண்டதாக களுவாஞ்சிக்குடி பொது நூலகம் தற்போது காணப்படுவதுடன் தனது தன்னியக்க சேவையை வெற்றிகரமாக 21.10.2017 அன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.





தன்னியக்க சுழற்சி முறை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எனினும் தன்னியக்க சேவைகள் அனைத்தும் தற்போது களுவாஞ்சிகுடி பொது நூலகத்தின் கட்டடத் தொகுதியின் உள்ளே மாத்திரம் வரையறுக்கப்பட்டதாக காணப்படுகிறது. அதாவது இந்நூலகத்தில் காணப்படும் அனைத்து தன்னியக்க சேவைகளையும் ஒவ்வொரு அங்கத்தவரும் நூலகத்திற்கு வெழியே இருந்தும் பெற்றுக் கொள்ள வேண்டுமெனின் தற்போது நூலகத்தில் நிறுவப்பட்டுள்ள தொகுதியானது இணையத்துடன் இணைக்கப்பட வேண்டியது அவசியமாகும். இதன் மூலம் ஒவ்வொரு அங்கத்தவரும் தமக்குரிய பாவனையாளர் பெயர் (User Name) மற்றும் ரகசியக் குறியீடு (Password) என்பவற்றைக் கொண்டு நூலகத்தின் இணையவழி நூல் பட்டியலினுள் (Online Public Access Calalouge) உள்நுழைந்து (Login) எங்கிருந்து வேண்டுமானாலும் அனைத்து சேவைகளையும் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு கிட்டும். மேலும் புதிய நூல்களை இத்தொகுதியில் பதியும் பொழுது அது உடனடியாக மின்னஞ்சல் (Email) மூலமாகவோ அல்லது குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அங்கத்தவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். ஒரு குறிப்பிட்ட நூலை ஒரு அங்கத்தவர் திருப்பி ஒப்படைக்க வேண்டிய காலம் தவறும் பட்சத்தில் அது தொடர்பான ஒரு நினைவூட்டல் குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் ஒன்று குறிப்பிட்ட அங்கத்தவருக்கு சுயமாகவே அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு பல்வேறு வகையான நவீன தொழில்நுட்பங்களைக் கொண்ட அதி நவீன தன்னியக்க இலத்திரனியல் சேவையினை களுவாஞ்சிகுடி பொது நூலகத்தினால் இப்பிரதேச மக்களுக்கு வழங்கும் காலம் தொலைவிலில்லை. பல லட்சம் ரூபாய் செலவில் நவீன மயப்படுத்தப்பட்ட களுவாஞ்சிக்குடி பொது நூலகத்தை பூரணமாக பயன்படுத்தி இப்பிரதேச மக்கள் நன்மை பெற வேண்டும் என்பதே எனது அவா.

இறுதியாக இந்நிகழ்ச்சித் திட்டத்தில் ஆலோசகராகவும் வளவாளராகவும் பணியாற்ற வாய்ப்புளித்த இலங்கை திறந்த பல்கலைக் கழகத்திற்கும், உள்ளுராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சிற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நிகழ்ச்சித்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

திட்டத்தை மிகவும் சிறப்பாக நிறைவேற்ற என்னோடு சேர்ந்து ஒத்துழைப்பு வழங்கிய களுவாஞ்சிகுடி பொது நூலகத்தின் நூலகர்கள் மற்றும் நூலக ஊழியர்கள், மண்முனை தெற்கு எருவில் பற்று பிரதேச சபை செயலாளர் மற்றும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

எம்.என்.ரவிகுமார்
திட்ட ஆலோசகர் / இலத்திரனியல் நூலகங்கள் - தன்னியக்கமாக்கல் நிகழ்ச்சித் திட்டம்
சிரேஷ்ட உதவி நூலகர்,
கிழக்கு பல்கலைக்கழகம்,
இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காணியுடன் தொடர்புடைய சில பிரச்சனைகளும் அவை தொடர்பான சட்டமும்

சட்டம் சம்மந்தமான விடயங்களில் மிகச்சிக்கலான விடயம் காணி சம்மந்தமானதாகும். எல்லோரும் காணி தொடர்பாக சில சில முக்கிய விடயங்களை மட்டுமே அறிந்து வைத்துக்கொள்கிறார்கள். உதாரணமாக பிரிவிடல் பிரகடனம்இ உரித்து நிறுவல், ஈடு, குத்தகை, சேவகர்கள், வாடகை போன்றவையே பலராலும் அறியப்பட்டுள்ளது. காணியை பற்றிய சட்டம் கடல் போன்றது. ஆகவே இவற்றையெல்லாம் சாதாரணமாக படிக்க இயலாது. இதனால் தான் இயன்றளவு நடைமுறையில் ஏற்படும் பிரச்சனைகளையும் அவற்றை தீர்க்கும் உபாயங்களையும் தெரிந்து வைத்துக்கொள்ளல் அத்தியாவசியமானதாகும். இந்த வகையில் இக்கட்டுரையில் காணி தொடர்பான சில விடயப்பரப்புக்கள் ஆராயப்படுகின்றது.

**போட்டிபோடும் உறுதிகளில் எந்த உறுதி சட்ட வலு கொண்டது?**

காணி ஒன்றை வாங்குபவர் அந்த உறுதியை காணி அலுவலகத்தில் பதிய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அதேபோல் அந்த உறுதியை பதியாவிட்டால் அது செல்லாது என்று கூறவும் முடியாது. அப்படியானால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏன் அந்த உறுதியை காணி அலுவலகத்தில் பதிவு செய்கின்றோம் என்ற வினா எழுவது இயற்கையேயாகும். அதற்கு காரணம் என்னவெனில் ஒரு காணிக்கு இரண்டு உறுதிகள் இருந்தால் அதில் எந்த உறுதிக்கு முன்னுரிமையுண்டு என நீதிமன்றங்கள் தீர்க்க இப்பதிவு தான் சாட்சியமாக அமைகின்றது. அந்த உறுதியே சட்டத்தின் முன் செல்லுபடியாகும். அதனை மிகவும் தெளிவாக கூறுவதானால் காணிக்கு இரண்டு உறுதிகள் இருக்கும் போது அவற்றில் முதல் பதிந்த உறுதியானது அதன் பின்னர் பதிந்த உறுதியுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது முன்னர் பதிந்த உறுதியே முன்னுரிமை பெற்ற உறுதியாக நீதிமன்றம் ஏற்கும். ஆகவே தான் பதிவு அவசியமாகின்றது. இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியவை உறுதிகள் இரண்டு பெறுமதி மிக்க மதிபலனுக்கு பெற்ற உறுதிகளாக அவை இருக்க வேண்டும்இ உரிய இதழில் பதியப்பட்டிருக்க வேண்டும், எதிர் உரித்து கொண்டவையாக இருக்க வேண்டும்.

இவ் விடயத்தில் இன்னுமொரு வினா எழுவதை நீங்கள் காணலாம். அது என்னவெனில் முன்னுரிமை பிரச்சினை எழுவது இரண்டு உறுதிகள் ஒரு காணிக்கு இருக்கும் போதேயாகும். அது எப்படி ஏற்படும்? அதாவது ஒரு காணியை இரண்டு முறை விற்பது எப்படி என்றாகும். அவ்வாறு விற்பதும் உறுதி எழுதுவதும் சட்டவிரோதம் என்றாலும் பல உறுதிகள் அத்தகைய குணாம்சங்கள் கொண்ட உறுதிகள் நாட்டின் பல உறுதிகள் அத்தகைய குணாம்சங்கள் கொண்ட வேளைகளில் கள்ள உறுதி அசல் உறுதியை முந்திவிடுவதும் உண்டு. உதாரணமாக X என்பவர் தனது காணியை Y என்பவருக்கு விற்றார். X இறந்ததும் அவரது வாரிசுகளில் ஒருவரான Z அந்த காணியை A என்பவருக்கு விற்றார். ஆனால் Y அந்த உறுதியை உரிய முறைப்படி காணி அலுவலகத்தில் பதியவில்லை. உய்மையில் Z அந்த காணியை A என்பவருக்கு விற்பதற்கு முன்பே X என்பவர் அக்காணியை Y என்பவருக்கு விற்று இருந்தார். இருப்பினும் நீதிமன்றம் நோக்குவது எவ்வாறெனின் மேற்படி காணி X இன் வழியில் வந்தது. ஆகவே Y இன் உறுதியும் A யின் உறுதியும் எதிர் உரித்து கொண்டவையாக விளங்குகின்றன. A பெறுமதியான பணப்பெறுமதிக்கே காணியை பெற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்னும் y இன் உறுதி முறைப்படி பதிவு செய்யப்படவில்லை என்றும் A யின் உறுதி முறைப்படி உரிய இதழில் பதிவு செய்யப்பட்ட படியால் காணி A இற்கு சொந்தம் எனவும் தீர்ப்பளிக்கப்படலாம். ஆகவே காணியை வாங்குபவர்கள் அனைவரும் கட்டாயமாக குறித்த காணி ஏற்கனவே யாரேனும் ஒருவருக்கு விற்கப்பட்டுள்ளதா என்பதனை காணி பதிவேட்டினில் சரிபார்த்து கொள்ளுதல் அவசியமானதாகும்.

**காணியை அபிவிருத்தி செய்தோம் என்று கூறி நஷ்டஈடு பெறுதல்.**

ஒருவர் காணி தனது என்ற எண்ணத்துடன் அக்காணியில் சில அபிவிருத்தி வேலைகளை செய்ததன் பின்னர் அக்காணி வேறு ஒருவர் உடையது என கண்டால் அவர் என்ன செய்யலாம்? நீதிமன்றம் பார்ப்பது என்னவெனில் அபிவிருத்தி செய்த விடயம் நிலத்துடன் இணைந்ததாகும் பிரிக்க முடியாததாகவும் இருக்கின்றதா என்றாகும் நிலத்தில் இருந்து அபிவிருத்தி செய்ததை பிரிக்க முடியாது எனக்கண்டால் சொந்தக்காரர் அபிவிருத்தி செய்தவருக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும். இவ்வாறு இழப்பீடு வழங்குவதற்கு முன்னர் அபிவிருத்தியை செய்தவரின் எண்ணத்தை நீதிமன்றம் பரீசீலிக்கும். நானே உரித்தாளர் என்ற எண்ணம் உள்ள ஒருவர் அபிவிருத்தி செய்திருந்தால் அவருக்கு இழப்பீடு வழங்க வேண்டும். சில வேளைகளில் வாடகை குடியிருப்பாளர் சட்டபூர்வமானவர்களாக அக் காணியில் இருந்து அபிவிருத்தியை செய்தால் அவருக்கு இழப்பீடு கேட்கலாம். அபிவிருத்தியால் அந்த காணியின் பெறுமதி கூடுவதால் காணி சொந்தக் -காரன் மட்டும் நன்மை பெறக்கூடாது என்றும் அபிவிருத்தி செய்தவருக்கும் உரிமையுண்டு என்பதாகும். செய்யப்பட்ட அபிவிருத்தியானது தீய எண்ணத்துடன் செய்யப்பட்டு இருந்த போதும் அந்த அபிவிருத்தியானது காணிக்கு அவசியமானது எனக்கண்டால் வழக்காளிக்கு நீதிமன்றம் இழப்பீட்டை கொடுப்பதற்கு பின் நிற்பதில்லை. அத்தோடு அபிவிருத்தி நடைபெறுவது காணியுரிமையாளருக்கு தெரிந்திருந்தும் அவர் அதை தடுக்காமல்இருந்தால் இழப்பீடு பெற வழக்காளிக்குஉரிமையுண்டு. ஆகவேஅபிவிருத்திக்கான இழப்பீட்டை நன்நோக்குள்ளவர் பெற உரிமையுண்டு அதனை கொடுக்கும் வரைக்கும் ஆட்சியுரிமை அவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பக்கம் இருக்கும். ஆகவே நன்நோக்குடன் இருப்பவர் அக்காணியை அபிவிருத்தி செய்தால் இழப்பீட்டை வழுங்குவதே நல்லது. தீய நோக்குடன் காணியில் இருப்பவருக்கு மேற்படி உரிமையில்லை. ஆனால் தீய நோக்குடையவர் காணியை அபிவிருத்தி செய்கியார் என்று கண்டால் அதனை உடன் உரித்தாளர் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும். தவறின் தீய நோக்குடையவருக்கும் ஆட்சியுரிமை சட்டம் வேலை செய்ய தொடங்கும் என்பதை மறந்துவிட கூடாது.

இந்த கட்டுரையில் ஆதன சட்டத்தின் இரு முக்கிய விடயங்கள் பற்றியே எழுதப்பட்டுள்ளது. விசேடமாக உறுதிகள் பற்றி எழுதியது கவனத்திற்குரியது. சாதாரணமாக ஒருவர் நொத்தாரிஸ் ஒருவரிடம் சென்று உறுதியொன்றை எழுதும் போது அந்த காணி விற்பவருக்கு உரியதா? என பரீசீலனை செய்ய வேண்டியது நொத்தாரிஸீன் கடமையாகும். ஆனால் காணியை வாங்குபவர் அதற்குரிய அவகாசத்தை வழுங்குவதில்லை. உடனடியாக எழுதவேண்டும் என்றுநொத்தாரிஸை வற்புறுத்துவது உண்டு நொத்தாரிஸீம் செய்வது தெரியாது எழுதுவதுண்டு. இதனால் இந்த உறுதி சில சமயம் உரிய பக்கத்தில் பதியப்படாமல் விடுவதுமுண்டு. வேறு ஒரு இதழில் பதியப்பட இடமுண்டு. இதனால் சில காணிகளுக்கு இரண்டு மூன்று உறுதிகள் இருப்பதை காணலாம். அதன் விளைவு முன்னுரிமை இழப்பு அவருக்கு உதவும். அத்துடன் நொத்தாரிஸீக்கும் அவப்பெயர் ஏற்படவாய்புள்ளது.

**“சட்டம் தெரியாது என கூறுவது ஒருவருக்கு மன்னிப்பளிக்காது”**

உசாத்துணை : சட்டமும் நீங்களும்
கே.ஜீ.ஜோன்
சட்டத்தரணி

செல்வி : சுந்தரலிங்கம் நிலானி
சட்டபீடம்
பல்கலைக்கழகம்,
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சிப் போக்கும்

கலாசாரம் என்றால் என்ன? என நாம் நோக்குமிடத்து சகல இனமத மக்களுடைய விழுமியங்களைக் கட்டி காக்கும் ஒரு கட்டுக் கோப்பு அல்லது ஒரு அமைப்பு முறையாகும். கலாசாரம் வேறுபாடுகள் எனும் போது இன மதங்களிடையே காணப்படும் பண்பாட்டுக் கோலங்கள் வேறுபட்டவையாகக் காணப்படுகிறது.பாரம் பரிய விழுமியங்களைக் கட்டிக்காக்கும் பொறுப்பு அந்த அந்த இன மக்களிடையே காணப்பட வேண்டியது அவர்களது தார்மீகக் கடமையாகும்.

## நாடகத்தின் கலாசார பின்னணி

பொழுது போக்கு ஒரு கலாசாரமாக இருந்ததுடன் அரங்கியல் உருவாகுவதற்கு அதாவது ஏனைய பொழுது போக்கு அம்சம் போதாமையினை நாடகக்கலாசாரம் தோன்ற காரணமாயிருந்தது.

அரசர்கள் நிறைய ஒத்துழைப்புக்களை அன்னாளில் வழங்கியிருந்தமையும் இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். சேக்ஸ்பியருடைய காலத்திலும் ஏனைய பொழுது போக்கு அம்சாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நிறைந்து காணப்படாத காரணத்தினால் நாடகக் கலாசாரம் சிறப்பாகத் தோன்றியது எனலாம்.

மேலும் படித்தவர்கள் படிக்காதவர்கள் ஆகிய இருபிரிவினருக்கும் பயன்படக் கூடியதாக இருந்தமையும் அதற்கான பின்னணியில் எடுத்துக் கூறலாம். ஒவ்வொரு நாடகமும்அந்த அந்த கலாசாரத்துக்கு ஏற்பவே அமைந்து காணப்படல் அதாவது அந்தக் காலங்களில் பெண்கள் பெருமளவு பங்குபற்றுவதில்லை.ஆண்களே பெண்பாத்திரம் ஏற்று நடித்துள்ளனர் இவை மட்டுமல்ல நாடக உருவாக்கத்திற்கும் தற்போது இருப்பதற்கும் உள்ள காலம் இவற்றினையும் பின்னணியில் எடுத்துக்காட்டலாம் அந்தக் காலங்களில் உள்ள உடைகள் அணிகலங்கள்அரங்கு அமைப்பு வேடம்தாங்கி நடித்தல், அலங்காரம் (மேக்கப்) போன்றவைகள் யாவும் கலாசாரப் பின்னணியையே காட்டி நிற்கிறது.

**நாடகம் என்றால் யாது?**

நாடகம் என்பதுசிந்தனைக் களஞ்சியமாகவும் மனச் சாட்சியின் தூண்டு கோலாகவும் சமுதாய நடத்தையின் விளக்கமாகவும் விரக்தி சோகம் ஆகியவயற்றை விரட்டும் படைக்கலமாகவும் மனித வளர்ச்சியின் ஆலயமாகவும் இருக்க வேண்டும் என்று BEMARD SHOW கூறுகிறார்.

நாடகம் மனித முரன்பாடுகளின் கதையாகவும் நாடகத்தில் ஈடுபடுபவர்கள் ஆழமாக கற்றல் வேண்டும். ஒரு இலக்கியத்தின் பாவனையை நாடகம் என அரிஸ்ரோட்டில் கூறுகிறார். Drama என்ற சொல் கிரேக்கத்தில் Dramonon என்ற சொல்லிருந்து தோன்றியதாகும். நாடகம் என்பது ஒரு உரையாடல் வடிவில் அமையும் மனித முரண்பாடுகளை கூறும் அம் முரன்பாடு அவலப்பண்புடையதாகவும் அல்லது மகிழ்ச்சி நெறிப்பண்புடையதாகவும் இருக்கும். இது பேச்சு, இயக்கம் என்பவற்றினூடாக வெளிப்படுத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**நாடகத்தின் தோற்றம்**

நாடக அரங்கம் பற்றி பல்வேறுபட்ட அறிஞர்கள் பல்வேறுபட்ட கருத்துக்களை குறிப்பிட்ட போதிலும் உலக அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விளக்கம் சடங்கிலிருந்து நாடகம் தோன்றியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டியத்திலிருந்து நாடகம் தோன்றியது என பேராசிரியர் கின்ம பிறயிட் மற்றும் ஸ்ரோங் ஆகியோர் குறிப்பிடுகிறனர். பொம்பலாட்டத்திலிருந்து தோன்றியதாக சிலர் கூறுகின்றனர். இருப்பினும் சடங்குகளிலிருந்து வந்த பரிணாம வளர்ச்சி வடிவமே அரங்கெனச் சிலர் குறிப்பிடுகின்றனர். எவை எப்படி இருந்தாலும் சடங்கிலிருந்து நாடகம் தோன்றியது என்ற பேராசிரியர் தோம்ஷின் கருத்தே இன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும்.

சடங்கு என்ற சொல் மதரீதியாக அல்லது சமூக ரீதியாக ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட நடைமுறையைக் குறிப்பதொன்றாகும். உதாரணமாக விவாகத்தினை (திருமணம்) சடங்கு என்கிறோம். அல்லது இறந்த பின் சடங்கு என்கிறோம். அதாவது 3ம்நாள், 8ம் நாள் மேற்கொள்ளப்படும் கருமங்களை சடங்கு என்கிறோம். மட்டக்களப்பில் சிறுதெய்வக் கோயில்களில் வருடா வருடம் நடைபெறும் உற்சவம் சடங்கு என்கிறோம். சடங்கு என்பது பொதுவாக எதனைக் குறிக்கின்றது ஒரு சாதாரண விரத நாளாக இருக்கலாம் அல்லது ஒருவருடைய இறப்பின் பொழுது செய்யப்படுகின்ற சடங்காக இருக்கலாம்.

முன்னர் யாரோ ஒருவர் இவ்வாறு ஒன்று செய்திருக்கிறார். அதனால் நாமும் அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் எங்களுடைய வாழ்கையில் அதனை திருப்பிச் செய்கின்ற பொழுது நமக்கு அதே பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை முன்னர் ஏதோ ஒன்று நிகழ்ந்தது என்பது நம்பிக்கை இதனை ஐதீகம் என்று கூறுவர். அது இவ்வாறுதான் நிகழ்ந்தது என்ற செய்கை சடங்காகும். அதாவது நிகழ்ந்தது என்பதிலே நம்பிக்கை அது எவ்வாறுதான் நிகழ்ந்தது என்ற சடங்கு முறையில் நம்பிக்கை அதனை திருப்பிச் செய்தால் பலன். நமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை இத்தகைய சடங்குகள் எல்லா இடங்களிலும் உண்டு. சடங்கு இல்லாத மதங்கள் இல்லை. எந்த ஒரு மதத்திற்கும் 2 விடயங்கள் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

1. நம்பிக்கை

2. சடங்கு (நம்பிக்கையின் அடியாக வரும் சடங்கு)

நாங்கள் கடவுளே என்று கூறுவதும் ஒரு சடங்குதான். திருநீறு பூசுவதும் ஒரு சடங்குதான். இதேபோன்று கிறிஸ்தவர்கள் சிலுவையை அணிந்திருப்பதும் ஒரு சடங்குதான். இவ்வாறான சடங்குகளில் இருந்துதான் நாடகம் தோன்றுகிறது.

உதாரணமாக கந்தசஷ்டி விரத காட்சி சூரன் போர் அதாவது ஒரு காலத்தில் அசுரர்கள் செய்த அனியாயங்களை தேவர்கள் முருகனிடம் முறையிட சூரபத்மனை சங்காரம் செய்ய சிவபெருமானால் முருகனை தோற்றுவித்து சங்காரம் செய்த கதை இவற்றினை நாம் திரும்ப செய்தால் அந்தப் பலன் கிடைக்கும் என்பதற்காக கொண்ட நம்பிக்கை. அதேபோலதான் கிறிஸ்தவ சடங்கையும் குறிப்பிடலாம். உதாரணமாக ஞாயிற்றுக்கிழமைகளில் தேவாலயங்களில் நடக்கும் இயேசுவினுடைய மரிப்பும் அவர் புத்துயிர்ப்பு பெற்று எழுவது சித்தகரித்து காட்டுவதையும் காணலாம்.

அதேபோலதான் முஸ்லிம்கள் ஹஜ்ஜுக்குச் செல்கிற போது நபிபெருமான் வாழ்ந்த இடத்திற்குச் சென்று வருவதன் மூலம் அந்த நம்பிக்கையில் தாங்களும் இணைந்து கொள்கிறார்கள்.

சடங்கு நிகழ்கின்ற போது படிப்படியாக அவற்றினுடைய தன்மை பெருக பெருக 3விடயங்கள் படிப்படியாக மேலே எழுவதை பார்க்கலாம்.

1. அதனைச்செய்பவன்
2. செய்யப்படுகின்ற இடம்
3. அதனைப் பார்ப்பவர்கள்

எல்லோரும் சேர்ந்து செய்யும் போது பார்வையாளர்கள் இருக்காது ஆனால சூரன் போரின் போது அதனை எல்லோரும் பார்ப்பவர்கள் அதிகம் பேர் காணப்படுவர். நாடகம் என்பது ஆரம்ப நிலையில் பாரம்பரிய கதைகளையே கொண்டிருந்தது. கிராமிய நாடகங்களை எடுத்துப் பார்த்தால் மகாபாரதம், இராமாயணம் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கதைகளை சித்தரிப்பன. இவைகள் இந்து மதத்துடன் தொடர்புடையவை. இந்த நிலை முற்றிலும் மாறியதன் பின்னர்தான் புதிய கதைகள் வரலாயின.

சடங்கு நாடகங்களாக ஆடப்படுகின்றன. உதாரணமாக சூரன் போர், மாம்பழத்திருவிழா, வேட்டைத்திருவிழா போன்ற கதைகள் நாடகங்களாக நடித்துக் காட்டப்படுகிறது.

இலங்கையிலுள்ள கிறிஸ்தவ நாடகப் பாரம்பரியத்திலுள்ள நாடகங்களைப் பார்த்தால் இந்தக் கதை மாற்றம் நன்கு தெரிவதை காணலாம். முதலில் காணப்படும் நாடகங்கள் இயேசுவினதும் மரியாளினதும் வாழ்க்கை சம்பந்தப்பட்ட நாடகங்களாக இருந்தன. பின்னர் கிறிஸ்துவத்தின் எடுத்துக் காட்டுகின்ற நாடகங்களாக மாறின. இத்தகைய நாடக வடிவம் யாழ்ப்பாணத்திலும் காணப்படுகின்றன.

**நாடகத்தின் பாவனையும் சித்தரிப்பும்** சூரன் போரில் சூரனைப் போல் பாவனை செய்து சித்தரித்தல் இவை நாடகமாக மாறுகிறது. அதாவது நாடகத்தில் இடம் பெறும் அனேகமான விடயங்களும் பாவனையும் சித்தரிப்பு அமைந்திருக்கும். சித்தரிப்பும் பாவனையும் இல்லையென்றால் நாடகம் வெற்றி பெற மாட்டாது. வேட்டைத் திருவிழாவின் போது வேடர்கள் போன்றும் மிருகங்கள் போலவும் பாவனை செய்து சித்தரிப்பர்.

**நடிப்பு**

நாடகம் என்பது நடிகர்களின் கலை எனப்படுகின்றது. ஏனெனில் பார்வையாளர்களின் கட்புலனுக்கு தெரிந்தவற்றில் நடிகரே முதன்மையானவன்.

- மேடையில் தோன்றும் ஏனைய கட்புலக்காட்சியான காட்சியமைப்பு ஒளியமைப்பு ஆகிய யாவும் நடிகருக்கு துணை புரிவதற்காகவே அமைக்கப்படுகின்றன.
- 'போலச் செய்தல்' எனும் போது பாத்திரமாக மாறிவிடல்.
- செய்தல் என்னும் நடிப்பு முறை அது உண்மையாகச் செய்தல். என்பதனைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

குறிக்கும் இது கூடுதலாக யதார்த்தப் பாணியில் அமைந்த நாடகங்களில் சாத்தியமாகும்.

♦ பார்ப்போருக்கு நடிகர் அந்தக் காலத்தில் பாத்திரமாக புலப்பட வேண்டும்.

♦ பார்ப்போர் பாத்திரமாக நடிகரை நம்ப வேண்டும். அவர்கள் அப்பாத்திரம் தான் மேடையில் நிற்கிறது. என்பதனை உணர்ந்து அதனுடைய தூண்டல்களினூடாக வெளிப்படுத்துவர்.

## நடிப்புப்புப் பயிற்சி

♦ நடிகன் சிறந்த ஒரு கலைஞராக இருக்க வேண்டியது அவசியமாகுகின்றது.

♦ அவனது கலைத்துவம்,கற்பனை,ஆக்கத்திறன் அறிவு, அவதானம் ஆகிய பண்புகளையே நடிகன் என்ற வகையில் தனது ஆற்றல்களை வளர்த்துக் கொள்வதற்கு உதவும் பலவற்றை அவன் பயிற்சி மூலம் பெற்றுக் கொள்கின்றான்

♦ இந்த நோக்கத்திற்காக நாடகக்கலைஞர்கள் அனைவருக்கும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

♦ நடிகனது பொருள்களாக அமைகின்றவை உடலும், குரலும் இவை இரண்டையும் கொண்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றது.

♦ உடலிலும் எப்பொழுதும் தளர் நிலை இருப்பது அவசியம்.

♦ குரல் பயிற்சியை ஆரம்பிப்பதற்கு முன்னர் மூச்சுப் பயிற்சி வழங்கப்படும் .

மேற்குறித்த விடையங்களைத் தொகுத்து நோக்குமிடத்து நாடக கலாசார பின்னணியையும் நாடகத்தோற்றம் வளர்ச்சியையும் உணர்ந்து செல்ல முடிகிறது.

கலாநிதி தேசபந்து நா.நாகேந்திரன். JP
பிரதி அதிபர்.
மட்/ பட்/ பட்டிருப்பும.ம.வி.தேசியபாடசாலை.
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மக்களின் கழிவு முகாமைத்துவ சீர் கேட்டின் கசப்பான உண்மைகள் உங்களுக்குத் தெரியுமா?

கழிவு மலைகளினால் உலகம் அழியப்போகிறது. "one day our earth can die by waste" ஆம் உலகம் ஒரு மூடிய தொகுதி இங்கே. பொருட்களை ஒரு வடிவத்திலிருந்து இன்னொருவடிவத்திற்கு மாற்றலாமே தவிர ஆக்கவோ அழிக்கவோ முடியாது. நாம் உருவாக்கும் குப்பைகள் இந்த உலகத்தை விட்டு வெளியில் போவதோ அழிந்து விடுவதோ இல்லை. குப்பைகள் நமக்கு வேண்டாத பொருளாக இருந்தாலும், இயற்கை அதை வேண்டாத பொருளாக கருதுவதில்லை. நம்மால் உருவாக்கப்படும் கழிவுகளில் மிக மிக... ஆபத்தான கழிவாக பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகள், மின் கழிவுப் பொருட்கள் (E- waste) கருதப்படுகின்றன.

பிளாஸ்ரிக் 50 - 100 வருடங்களுக்குள் அழிவடைந்து நுண் பிளாஸ்ரிக்காக மாறுகிறது.

ஒரு பிளாஸ்ரிக் போத்தல் அழிவடைந்து 10,000 நுண் பிளாஸ்ரிக்கை உருவாக்கின்றது. இது மண்ணிலும் நீர் நிலைகளிலும் கலக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இதே போல் நைலோண் கலந்த துணி வகைகளிலிருந்து (micro plastic Fibers) நுண் பிளாஸ்ரிக் நார்கள் உருவாகின்றது. இவை துணி துவைக்கும் போது நீருடன் கலக்கின்றது. இந்த நுண் பிளாஸ்ரிக் நார்கள் நீரில் கலந்து நீர் நிலைகள் வாழ் உயிரினங்களுக்கும் விலங்குகளுக்கும் உணவாகவும் பயன்படுகின்றது.

நுண் பிளாஸ்ரிக் காணக் கூடிய உணவுவகைகளாக மீன்கள். பாற்பொருட்கள் இறைச்சிவகை முதலியன அடங்குகின்றன. இவை மட்டும் இன்றி உணவுச்சங்கிலி மூலமும் கடத்தப்படுகிறது.

### (E-waste) கழிவு மின்னியல் உபகரணங்கள்

உலகில் ஒவ்வொரு வருடமும் 50 மில்லியன் தொன் E-waste உருவாகுகிறது. E-wast பாரமான உலோகங்களால் [கட்மியம், குறோமியம், ஆசனிக், முதலியனவற்றால்] ஆக்கப்பட்ட இவை எரித்தாலும் புகைத்தாலும் மிக நஞ்சு மட்டுமின்றி உக்காத கழிவு பொருட்களாகவும் காணப்படுகிறது. (உ+ம்) Phone, Computer, Electronic items....

### டையொக்சின் Dioxin

பிளாஸ்ரிக் பொருட்களை எரிக்கும் போது டயோக்சின், பியூரனிஸ் போன்ற கொடிய நஞ்சான வாயுக்கள் வெளிவருகின்றன. (800° C-1200°C வரை உள்ள வெப்ப நிலையில் மாத்திரமே நச்சு புகை வெளிவராது.)

### இவற்றினால் ஏற்படும் பாதிப்புக்கள்

1. கான்சர்
2. விருத்திக்குறைவு குறைபாடுள்ள பிள்ளைகள் பிறத்தல்.
   (உ+ம்) கற்கை குறைபாடு, குறைபாடுள்ள பிள்ளைகள் பிறத்தல்
3. நோய் எதிர்ப்பு சக்தி குறைவு
4. மலட்டுத் தன்மை
5. வேறு சுகதார பிரச்சினைகள்
   (நீரளிவு, ஈரல், நரம்பு மண்டலம், எண்பு மச்சை பாதிப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாம் பிளஸ்ரிக்கை எரிக்கும் போது வரும் நச்சுப் புகைகையானது 100km வரை பயணம் செய்யும் அத்துடன் (புகை) 25- 100 வருடங்கள் வரை மண்ணின் மேற்படையில் காணப்படும் அது மட்டும் இன்றி உணவு சங்கிலியினுடாக இன் நஞ்சு கடந்து செல்லும்.

## Reduce - குறைப்பு

பொலித்தின் பிளாஸ்ரிக் போன்ற ஆபத்தான கழிவுகளை 3R மூலம் உங்களால் முகாமை செய்ய முடியும்

01. (R) Reduction (குறைப்பு) பிளாஸ்ரிக் பொருட்கள் வீட்டில் சேர்வதைக் குறைத்தல்.

[உ+ம்]

♦ சந்தை,கடைகளுக்குச் செல்லும் போது பிரம்புக் கூடைகள், துணிப்பைகளைக் கொண்டு பொருட்களை வாங்குங்கள்.

♦ பிளாஸ்ரிக் போத்தல்களுக்கு பதிலாக கண்ணாடி, சில்வர் போத்தல்களைப் பயன்படுத்துதல்.

♦ சாப்பாட்டுப் பொதிகளுக்கு பொலித்தின் 'ரிஸ்யு' களுக்குப் பதிலாக சில்வர் பாத்திரங்கள், வாழை இலைகளைப் பயன்படுத்துதல்.

02. (R) Re-Use - மீள்பாவனை பிளாஸ்ரிக் போத்தல்களை பூந் தொட்டியாக்கலாம்.

[உ+ம்]

♦ பனர்களை ஆண்டு போடாமல் அடித்து வருடாவருடம் பாவிக்கலாம்

♦ உற்சவ காலங்களில் செய்யும் சோடனைகளுக்கு ஆண்டுதோறும் பொலித்தீன்களுக்குப் பதிலாக வர்ணத் துணிகளை பாவிக்கலாம்.

03. (R) Re cycle - மீள் சுழற்சி

[உ+ம்]

♦ தேவையற்ற பிளாஸ்ரிக் மற்றும் மின் உபகரணங்களை விற்றுப் பணமாக்கலாம்.

♦ முடிந்த வரை பொலித்தீன், பிளாஸ்ரிக் , மற்றும் மின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உபகரணங்களைக் வாங்குவதைபக் குறைப்பதுடன் அதனைப் கண்ட கண்ட இடங்களில் வீசுவதையோ, எரிப்பதையோ, புதைப்பதையோ முற்றாகத் தவிருங்கள். அதனைத் தரம் பிரித்து உரிய முறையில் களஞ்சியப்படுத்தி பிரதேசசபைக்கோ அல்லது நகரசபைக்கோ அனுப்பி வையுங்கள்.

♦ ஏனைய கழிவுகளை அகற்றுவதற்கான சில ஆலோசனைகள்

♦ சமையறைக் கழிவுகள் மற்றும் இலை, சருகுகள் போன்றவற்றை சேதனைப் பசளை தயாரிக்கலாம். மற்றும் கோழி, ஆடு வளர்த்து அதற்கு உணவாகப் பயன்படுத்தலாம்.பின்னர் அவற்றின் மூலம் நாம் முட்டை, இறைச்சியைப் பெறலாம்.

♦ மீன் வளர்த்து அதற்கு உணவுக்கழிவுகளை இட்டு விற்றல்.

இவ்வாறு தரம் பிரிக்கும் போது உங்கள் வீட்டில் கழிவுகளே இல்லாமல் போகும்.

**சட்டங்கள்**

♦ 2017ம் ஆண்டின் 7ம் இலக்க தேசிய சூழல் குப்பை கூளங்கள் மற்றும் பிளாஸ்ரிக் உட்பட வேறு எரியக்கூடிய பொருட்களைத் திறந்த வெளியில் எரித்தல் தண்டனைக்குரிய குற்றமாகும். தவறும் பட்சத்தில் 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் பிரிவு 31ன் கீழ் தண்டனை வழங்கப்படும் எனவே சிந்தித்துச் செயற்படுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உயிராபத்தான தொற்றா நோய்கள்

தொற்றா நோய்களாவன : புற்றுநோய்,நீரழிவு.உயர் இரத்த அழுத்தம்.தொய்வு, பாரிசவாதம் முதலியன.

இந்நோய்களிலிருந்து விடுபட நீங்கள் விரும்பினால் தாமதியாது வைத்தியசாலை ஆரோக்கிய வாழ்வு சிகிச்சை நிலையத்திற்குச் (Healthy Life Style Center) சென்று அந்நோய் வராமல் இருப்பதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்நோய் மக்களின் தவறான பழக்கவழக்கங்களினாலேயே ஏற்படுகிறது. இவற்றிலிருந்து நாம் விடுபட இதோ சில ஆலோசனைகள்:

1. புகைத்தலை நிறுத்துங்கள்.
2. மதுபாவனையை நிறுத்துங்கள்.
3. உடற்துணிவு சுட்டியை சரிவரச் செய்தல்
4. சிரமமான உடற்பயிற்சிசெய்யுங்கள்
5. நாளொன்றுக்கு 5 பங்கு பழங்கள், மரக்கறிகள் உட்கொள்ளுங்கள்.
6. நாளான்றுக்கு ஒருவருக்கு 01 தேக்கரண்டி உப்பை மட்டுமே சேர்த்துக் கொள்ளுங்கள்.
7. இனிப்புப் பாவனையை கட்டுப்படுத்துங்கள்.
8. Trans கொழுப்பமிலம் சேர்க்கப்பட்ட உணவின் பாவனையை குறைத்துக் கொள்ளுங்கள்.
9. உளநலத்தையை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுங்கள்
10. உங்கள் ஆரோக்கிய நிலையை அறிந்து கொள்ளுங்கள்.
11. உங்களுக்கென கூறப்பட்ட சிகிச்சை முறையை மட்டும் பின்பற்றுங்கள்.

**01.புகைத்தலை நிறுத்துதல் :**

புகைத்தலுடன் உள்ளூரில் பாவிக்கப்படும் பாபுல் (Babul), சரவிட்ட (sarawita) வெற்றிலை (Betil) பாவிப்பதனை தவிர்க்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

புகைத்தலை ஒருவர் நிறுத்தியவுடன் ஒரு சிலநாட்களிலோ அல்லது ஒரு வாரத்திலோ இதயத்தின் தொழிலாற்றல் அதிகரிக்கும்.நல்ல கொலஸ்ரோல் அதிகரிக்கும்.

புகைத்தலை முற்றாக நிறுத்தினாலும் ஒரு வருடம் செல்லும் போது புகைத்தலை தொடர்பவரிலும் பார்க்க மாரடைப்பினால் மரணமாகும் வீதம் 50%னால் குறைகிறது. ஒரு சிகரட் அல்லது பீடியில் இருக்கும் நச்சுப்பொருட்களில் சில வற்றை மட்டும் பார்ப்போம். தார், கட்மியம் (புற்றிநஞ்சு),கு றோமியன், காபன் ஓர் ஒட்சைட்டு, மெதேன், மெழுகு முதலின.

**02. மதுபாவனையை நிறுத்துங்கள் :**

மதுவின் தீய விளைவுகள்

1.உயர் குருதியமுக்கம்
2.மதுவினால் மூளை அழர்ச்சி
3.ஈரலின் தொழிற்பாடு குறைதல்
4.ஈரல் அழர்ச்சி
5.ஈரலில் புற்றுநோய்
6.ஆண்மைக் குறைவும் மலட்டுத்தன்மையும்

**03. உடற் திணிவு சுட்டியை சரிவர பேணல்:**

உடல் திணிவுச் சுட்டி

$$\text{BMI (Body Mass Index)} = \frac{\text{உடற் நிறை Kg}}{\text{உயரம் } (m^2)}$$

Eg :

$$\text{BMI} = \frac{50\text{Kg}}{1.5 \times 1.5}$$

$$\text{BMI} = 22.2$$

< 18.5 போசாக்குக் குறைவு
24.9 அளவான உடல் (தற்போது 23 வரை வைத்திருக்கப்படுகிறது.
25 அதிக உடற் பருமன் (over weight)
30 அதீத உடல் பருமன் (obesity)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அதிக, அதீத உடல் பருமனால் ஏற்படும் பாதிப்புகள் / செய்ய வேண்டியவை

| | | |
|---|---|---|
| 18.5 | ♦ தொற்று நோய் இலகுவாக தொற்றும். ♦ பெண்களின் கர்ப்பம். பிரசவத்தில் பிரச்சனை ஏற்படும் ♦ களைப்பு ஏற்படுவதனால் வேலைத்திறன் குறையும் | மேலதில உணவை உட்கொள்ள வைத்திய ஆலோசனை பெறல். |
| 18.5-23 | அளவானது | தொடர்ந்து பேணல்! |
| 23-24.9 | அளவாக இருப்பனும் அதிகரித்தால் ஆபத்தானது | கொழுப்புச் சத்து,வெல்லம் கொண்ட உணவுகளை குறைத்தல். |
| 25-30 | ♦ இருதய ஆலோசனையை பாதிக்கும் ♦ நீரழிவு ஏற்பட வாய்ப்பு அதிகரிக்கும். | ♦ நாளாந்த சீனி பாவனையை குறைதல். ♦ கொழுப்பு உணவுகளை தவிர்தல். ♦ பட்டர்.மாஜரின் பாவனையை குறைத்தல் ♦ trins கொழுப்பமிலம் அற்ற மாஜரினை தேர்ந்தெடுத்தல். ♦ மிகக் குறைந்தவில் ஆடை நீக்கிய பால் பதாத்தங்களை பயன்படுத்தல். ♦ கோதுமை மாவின் பாவனையை குறைத்தல். ♦ மாப் பொருள் நிறைந்த மரக்கறிகளை குறைத்தல் |

**04. சிரமமான உடற்பயிற்சி மேற்கொள்ளல்**

தினமும் 30 நிமிடங்கள் மற்றும் வாரத்தில் 05 நாட்கள் உடற்பயிற்சி அவசியம்

**உடற் பயிற்சியின் பயன்கள்**

- ♦ இதயத்திற்கு வலு அதிகரிக்கும்
- ♦ மன அழுத்தத்தை குறைப்பதுடன் புத்துணர்ச்சி தருகிறது.
- ♦ தசைக்கான வலு கூடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**உடற் பயிற்சி இன்மையினால் ஏற்படும் பாதிப்புகள்**

- நீரழிவு நோய் ஏற்பட வாய்ப்பு அதிகம்
- மாரடைப்பு ஏற்பட வாய்ப்பு அதிகம்
- உடல் நிறை அதிகரிக்கும் வாய்ப்பு அதிகம்

**நாளாந்த செய்ய வேண்டிய உடற்பயிற்சி**

- நடத்தல்,சிறிது நேரம் வாகனத்தில் சென்று மிகுதி தூரம் நடத்தல்
- மாடிப்படி ஏறி இறங்குதல்

**கிழமைக்கு பல தடவை செய்ய வேண்டியது**

- வேகமான நடை
- நீச்சல்,ஓட்டம்,சைக்கிலில் செல்லல்
- நடனம்
- படியேறுதல்

**கிழமையில் 01 முறை அல்லது 02 முறை செய்ய வேண்டியது**

- மா இடித்தல்
- பாரம் தூக்குதல்
- யோகாசனம்
- மரம் வெட்டுதல்

**குறைக்க வேண்டிய நடவடிக்கைகள்**

- ஒரே இடத்திலிருந்து கணணி விளையாட்டுகளில் ஈடுபடுதல்
- அதிக நேரம் தொலைக்காட்சி பார்த்தல்

**05. நாளொன்றுக்கு 5 பழங்கள்,மரக்கறிகள் உட்கொள்ளல்**

**நன்மைகள்**

♦ தினமும் 400g அதிகமான பழங்கள்,மரக்கறிகளை சேர்த்தல் புற்றுநோய், இதயநோய்யினால் ஏற்படும் மரணத்தின் வாய்ப்பு குறைவு.

♦ பழங்கள்,மரக்கறிகள்,இலைகள்,நார்த்தன்மை அதிகமான மரக்கறிகள் குருதியிலுள்ள கொலஸ்ரோலை குறைக்கும்

♦ பழங்கள்,மரக்கறிகளிலுள்ள விற்றமின்கள்,கனியுப்புகள் தொற்று நோய்களிலிருந்து பாதுகாக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## 06. நாளொன்றுக்கு ஒருவருக்கு ஒரு தேக்கரண்டி உப்புமட்டும் சேர்த்தல்

♦ நரம்பு தசை தொழிற்பாட்டிற்கு நீர் சமநிலையை பேண சோடியம் தேவை ஆனால் அதிகமானால் ஆபத்து ஏற்படும்.

♦ இரைப்பை புற்று நோய்

♦ பாரிசவாதம்

### அதிக உப்பை தவிர்க்கும் முறை

♦ சோறு சமைக்கும் போது உப்பு சேர்ப்பதை தவிர்த்தல்

♦ அதிக உப்பை கொண்ட கருவாடு.ஊறுகாய் என்பவற்றை தினமும் உட்கொள்வதை தவிர்த்தல்

♦ 5 அங்கத்தவர்கள் கொண்ட குடும்பத்தில் நாளாந்தம் 25g உப்பு தேவை. ஆகவே 450g கொண்ட உப்பு பக்கட்டை 18-20 நாட்கள் வரை உபயோகிக்கலாம்

## 07. இனிப்பு பாவனையை கட்டுப்படுத்தல்

அதிக இனிப்பை உட்கொள்வதனால் ஏற்படும் பாதிப்புகள் :-

♦ உடல் பருமன் அதிகரித்தல்.

♦ நீரழிவு நோய் ஏற்படுவதனால் சிறுநீரகம்,நரம்பு பாதிக்கப்படலாம்

♦ பாரிசவாதம்,மாரடைப்பு ஏற்படல்

♦ வெல்லத்தின் பாவனையை குறைத்தல்

♦ ஒரு வயதுக்கு குறைவான குழந்தைகளுக்கு சீனியை தவிர்த்தல்

♦ பால், தேநீர் பாவனையில் சீனியின் அளவை குறைத்தல்.

01 சொக்கிலற் பிஸ்கட்டில் 4g சீனி உள்ளது. 200ml சோடாவில் 20g - 30g சீனி உள்ளது.

## 08. Trans கொழுப்பமிலம் சேர்க்கப்பட்ட உணவுப் பாவனை

Trans கொழுப்பமிலம் தீங்கானது ஏனெனில் இது கெட்ட கொலஸ்ரோலை அதிகரிக்கிறது நல்ல கொலஸ்ரோலை குறைக்கிறது இதனால் மாரடைப்பு. பாரிசவாதம் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Trans கொழுப்பமிலம் கொண்ட உணவுகள்

♦ மாஜரின்.பொரித்த உணவுகள் முதலின

**09. உளநலத்தையை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுங்கள்**

மன நலம் பாதிக்கப்பட்டால் உடல் நலமும் பாதிக்கப்படும். ஆகவே இதிலிருந்து விடுபட

♦ தினமும் பிராத்தனை,தியானம் செய்தல்

♦இனிமையான தெய்வீக சங்கீதத்தை செவிமடுத்தல்

♦ மனநலத்தை அதிகரித்த தினமும் 1மணிநேரத்தை செலவிடலாம்

♦ உடற்பயிற்சி செய்தல் (நடத்தல், யோகா)

♦ பொழுது போக்குகளில் ஈடுபடுடல்

♦ அதிகாலையில் நித்திரை விட்டு எழுதல்

♦இயற்கை காட்சிகளை ரசித்தல்

♦ செல்லப் பிராணிகளை வளர்த்தல்

♦ குடும்பத்தாருடன் கூடி இருத்தல்,சுற்றுலா செல்லல்

♦ மன அழுத்தத்தை குறைக்கும் முயற்சியில் ஈடுபடல்

♦ நேர்சிந்தனைகளை வளர்த்தல்

**10. ஒருவர் தன் ஆரோக்கிய நிலை பற்றி அறிற்து கொள்ளல்.**

♦ செலவு குறைந்த ஆரோக்கிய வழிகளை அறிதல் - வைத்தியசாலை ஆரோக்கிய சிகிச்சை நிலையங்களை அணுகுதல்.

♦ இளவயதில் ஆரோக்கிய வாழ்வு பற்றி அறிதல்

♦ 40 வயதாகும் போது தொற்றா நோய்களின் மருத்துவ பரிசோதனையைப் பெறல்

**11. உங்களுக்கென கூறப்பட்ட சிகிச்சை முறையை மட்டும் பின்பற்றுங்கள்**

திருமதி றஜனி யோகேஸ்வரன் (RN, MN, PBDN, Bsc N)
தாதிய சகோதரி,
பிரதேச வைத்தியசாலை, ஆரையம்பதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாசிப்பு

இன்று எம்மத்தியில் வாசிப்பு எந்நிலையிலுள்ளது? வாசிகசாலை நாடிச் செல்கின்றோமா?வாசிப்பு மாதத்திலேனும் நூல்களை வாசிக்கின்றோமா? கேள்விக்குரிய வினாக்களாகும். இன்றைய நவீன உலகில் வாசிப்பானது நூல்களை சந்தோஷத்திற்காக வாசித்தல், தகவல்களை அறிய வாசித்தல், அறிவுக்காக தேடி வாசித்தல் போன்ற பல்வேறு நோக்கங்களைக் கருத்திற் கொண்டமைந்துள்ளது. மனிதன் வெற்றி பெறுவதற்கான ஆயுதம் வாசிப்பாகும். ஆரம்பத்தில் பத்திரிகை, புத்தகங்கள் மூலம் வாசித்து தகவல்களை பெற்ற மனிதன் தற்போது இணையத்தில் அதிகளவு நேரத்தைச் செலவிடுகின்றான்.

வாசிப்பு என்பது ஒரு பிள்ளை கருவறையில் இருக்கும் போது ஆரம்பிக்கப்பட வேண்டும். இதன் மூலம் சிந்தித்தல், ஆராய்தல், காரணம் கண்டறிதல், கற்பனை செய்தல், நியாயம் கண்டறிதல் போன்ற திறன்களை வளர்த்தெடுக்கமுடியும். தனி நபர் ஒருவரிடம் தன்னம்பிக்கை, ஆளுமை, விருத்தி, ஞாபக சக்தி அதிகரிப்பு, கிரகித்தல் திறன் என்பன வளர்க்கப்படுகின்றன. எழுத்துப்பிழையின்றி எழுதவும் தர்க்க சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உருவாக்கப்படவும் வாசிப்பு அவசியமாகின்றது.

எழுத்தாற்றல் ஒரு பிள்ளையிடம் குறைவாகக் காணப்படுமாயின் வாசிப்புத் திறன் குறைவாகக் காணப்படும் என்பது ஆய்வுகளின் முடிவாகும். கல்வி சார் திறன்களை வளர்த்துக் கொள்வதில் அடிப்படை எண்ணக்கரு வாசிப்பாகும். விசேஷடமாக வாசிப்பதன் மூலம் மொழித்திறன் விருத்தி, சொல்லாண்மை, சொல்லாட்சி என்பன விருத்தியடைகின்றது.

மனிதனுக்கு இயல்பாக மூளை வளரும். ஆனால் அறிவு வளர வேண்டுமாயின் வாசிப்பு அவசியமாகின்றது. ஒரு மனிதனுக்கு காவியங்கள் உற்சாக மூட்டுகின்றன. கணித நூல்கள் நுண்மை யுடையவனாக்குகின்றன. நீதி நூல்கள் கண்டிப்பை உணர்த்துகின்றன. தர்க்க நூல்கள் வாதிடும் திறமையை வளர்க்கின்றன. வாசிப்பு மனதை ஒரு நிலைப்படுத்தி நினைவுத் திறனை அதிகரிக்கச்செய்கின்றது. மருத்துவ ரீதியான நூல்களைப் படித்தால் மனதை மென்மையாக்கும். இரத்த அழுத்தம் உள்ளவரிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்து படிக்கச் கூறினால் இரத்த அழுத்தம் குறையுமென மருத்துவ அறிக்கை குறிப்பிடுகின்றது.

ஒரு சிற்பி கல்லைச் செதுக்கி அழகிய சிற்பத்தை செதுக்குவது போன்று நல்ல நூல்களை கற்கும் மனிதனும் தன்னை வளமாக மாற்றிக் கொள்வான். சோக்கிரட்டிஸ், பிளட்டோ, அரிஸ்ரோட்டில், கால்மார்க்ஸ், டார்வின், புத்தர் போன்றோரை உலகம் போற்றக் காரணம் அவர்களின் அறிவுக் கூர்மையாகும். "புத்தகம் படிக்கும் பழக்கம் வந்தால் சிந்திக்கும் திறன் வரும். சிந்திக்கும் திறன் வந்தால் அறிவு பெருகும். அறிவு பெருகினால் முன்னேற்றம் ஏற்படும். நல்ல புத்தகங்களை வாசிக்க வேண்டும்" என அப்துல் கலாம் குறிப்பிடுகின்றார். கிரேக்க நாட்டு சிந்தனையாளர் சோக்கிரட்டிஸ் மரண தண்டனை விதிக்கப்பட்டு விஷம் கொடுக்கப்படும் வரை நூல்களைப் படிதது‌க் கொண்டிருந்தார். லிபிய நாட்டு உமர் முக்தர் என்ற புரட்சியாளர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு தூக்குக் கயிற்றை அவரது கழுத்தில் மாட்டும் வரை படித்துக் கொண்டேயிருந்தார்.
ஆஸ்கார் வைல்ட் "உண்மையான வாசகன், வாசிப்பதை முடிப்பதே இல்லை!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்ற கருத்தை முன்வைத்துள்ளார். இங்கர்சால் என்ற அறிஞர் போதும் என்று நொந்துபோய், புதுவாழ்வைத் தேடுகிறீர்களா? ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்குங்கள்" என குறிப்பிட்டுள்ளார். சிக்மண்ட் ப்ராய்ட் "உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அது போலவே மனதுக்குப் பயிற்சி புத்தக வாசிப்பு" என உள ரீதியான கருத்தை முன்வைத்துள்ளார். பிரான்சிஸ் பேக்கன் "சில புத்தகங்களை சுவைப்போம். சிலவற்றை அப்படியே விழுங்குவோம். சில புத்தகங்களை மென்று ஜீரணிப்போம்" என குறிப்பிட்டுள்ளார்.

தற்காலத்தில் அச்சிடப்பட்ட வளங்களுக்குப் பதிலாக இலத்திரனியல் வளங்கள் அதிளவில் பயன்படுத்தப்படுகின்றன. உலக விடயங்களை அறிந்து கொள்வதில் இணைத்தள பயன்பாடு முன்னணி வகிக்கின்றது. பொன்னான நேரத்தை தேவையில்லாத விடயங்களில் செலவழிக்காமல் இணையம், இலத்திரனியல் புத்தகங்கள். இலத்திரனியல் சஞ்சிகைகள் போன்ற விடயங்களில் செலவழிப்பது சாலச் சிறந்ததாகும். புத்தகங்களை வாசிக்க வேண்டும் என்பதற்காக தேவையற்ற புத்தகங்களை வாசிக்கக் கூடாது. தகுதியான புத்தகங்களைத் தேர்வு செய்து வாசித்து அறிவைப் பெருக்க வேண்டும்.

கண்டதைக் கற்க பண்டிதனாவான் என்ற முதுமொழிக்கேற்ப நாம் வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். நாம் கேட்ட பார்த்த விடயங்களை விட வாசித்தறிந்த விடயங்களே அதிகமாகக் காணப்படுகின்றது. ஏனெனில் எம்மால் அதிகளவு விடயங்களை கேட்டுக் கொண்டிருக்க முடியாது. பொது நுழைவுத் தேர்வுகளும் போட்டிப் பரீட்சைகளும் வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. வாசிப்பதால் ஒரு மனிதன் பூரணமடைகின்றான். நவீன உலகில் ஒவ்வொருவரும் எமது வாசிப்பின் நிலையை உணர்ந்து எம்மைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். எமது அறிவை விருத்தி செய்துகொள்ள ஒவ்வொருநாளும் குறிப்பிட்ட நேரத்தை வாசிப்பதற்காகச் செலவிடுவது சிறந்தாகும்.

போ.யே. கிறிஸ்டினா நிரோஜினி.
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மனிதன் மனிதனாக வாழ வேண்டும்

"ஒண்ணா இருக்க கத்துக்கணும் இந்த உண்மையைச் சொன்னா ஒத்துக்கணும்." எனும் பாடல் வரிகளைக் கொண்டு மனிதனாகப் பிறந்த அனைவரும் இன,மத,மொழி,சாதி,கௌரவம்,தன்மானம் என்னும் பண்பாட்டுக் கோலங்களிலே ஒன்று பட்டவர்களாக ஒரு தாய் மக்களாக விட்டுக் கொடுப்புடன் வையகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தால் ஏன் இங்கே கலவரம், குழப்பம்,மோதல் என்பன ஏற்படப் போகிறது.

ஒவ்வொரு மனிதனும் தான் ஏன் பிறந்தான் எதற்காக வாழ்கிறான். என்னும் தத்துவத்தை புரிந்து கொண்டால் இவ்வுலகம் தேவலோகமாக காட்சி தரும். அதனாலே வாழ்க்கை இன்பமயமாகும். சந்தோசம் வாழ்க்கையின் பக்க பலமாக அமைந்தால் எங்கு பார்த்தாலும் ஆனந்தம் பூத்துக்குலுங்கும். எப்பொருள் எவ்விடத்தில் விடப்பட்டாலும் அப்பொருள் அவ்விடத்திலே காணப்படும். பேராசை ஏற்படாமல் இன்பமயமாக வாழ்வதை பழகிக் கொண்டவன். தேவைகளை அளவுக்கேற்ப மாற்றிக் கொள்ளவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கற்றுக்கொள்வதனால் சகல சௌபாக்கியமும் பெற்று இல் வாழ்க்கையை மனித தர்மங்களைக் கடைப்படித்து சிறப்புடன் வாழ்வான்.

ஆரம்பகாலம் தொட்டே மனிதனின் வாழ்க்கை காலத்தோடு தொடர்புபட்டு படிப்படியாக வளர்ச்சி. அடைந்தே வந்துள்ளது. மனிதன் விஞ்ஞான வளர்ச்சி நாகரிக வளர்ச்சி என்பவற்றுக்கு கட்டுப்பட்டவனாக எப்போது மாறினானோ அப்போதே அவனது தேவைகளும் விரிவடையத் தொடங்கியது. இந்த நேரத்திலே மனிதன் தனது நிலையிலிருந்து தவறி நடத்தைக் கோலத்தை மாற்றிக் கொண்டு தனக்கு ஏற்ற வகையில் செயற்படுத்துவதன் மூலம் போதுமான செல்வங்களை அள்ளி தேடி ஈற்றில் தனது பயணம் முடியும் போது எல்லாவற்றையும் விட்டு விட்டு வெறுமையாக செல்கிறான். என்பதை விளங்காமல் பேராசைப் பட்டு மண்ஆசை பெண்ஆசை பொருளாசை போர் விரீயம் என்னும் மாயைக் கயிற்றினால் கட்டப்பட்டு நடத்தையை மாற்றிக் கொள்ளும் போது வார்த்தைகளால் பேசிக் கொள்ளும் முறை மாறி கைகலப்பு வன்முறை பழிக்கு பழி தீர்த்தல் என்னும் பாவ மூட்டை சுமக்கப்பட்டு கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் முரண்பாட்டை வளர்த்துக்கொள்கிறான்.

இவ்வாறான செயற்பாட்டால் மோதல்கள் யுத்தங்கள் ஏற்பட்டு மனித உயிர்கள் பறிக்கப்பட்டு உயிர்ச்சேதம் பொருட்ச்சேதம் சொத்துக்கள் உடமைகள் அழிக்கப்பட்டு மனிதன் மனிதனாக சொந்த மண்ணில் வாழ வேண்டியவன். அகதி என்ற அட்டை போட்டு தனது சொந்தம் பந்தம் சாதி இனம் என்பவற்றை விட்டு இடம்பெயர்வு என்னும் பாதையூடாக உயிரைக் காப்பாற்றிக் கொள்ள கால் ஓயும் வரை ஓடி சரணடைந்து வாழ்கின்றான். இதனை பின்வரும் பாடல் உணர்த்துகிறது. "மனிதன் எல்லாம் தெரிந்து கொண்டான். வாழும் வகை புரிந்து கொண்டான் இருந்த போதும் மனிதனுக்கு ஒன்று மட்டும் தெரியவில்லை" என்னும் பாடல் தெளிவாக உணர்த்துகிறது.

மனிதன் மனித குணப்பண்புகளை மறந்து வாழ எப்போது பழகிக்கொண்டானோ அப்போது மனிதநேயம் இறந்து விட்டது. ஆகவே எதிர்கால சந்ததிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாழ்க்கை சுபீட்சகரமான சந்தோஷகரமானதாக அமைய வேண்டுமென்றால் ஒவ்வொரு பிள்ளையின் அடிமனதில் இருந்து எழும் சிந்தனைகள் ஆழமானதாக பரந்ததாக கூர்மையுடையதாக அமைந்து நேரானசிந்தனைப் போக்குடையதாக கட்டியெழுப்பப்படும் போது மனிதன் ஒரு சமூதாயப்பிராணி ஏனைய உயிரினங்களுக்கு முன் மாதிரியானவன் பகுத்தறிவு பெற்றவன் என்னும் எண்ணக்கரு குடும்பச்சூழல், சுற்றுப்புறச்சூழல், சமூகச்சூழல் என்பவற்றில் செல்வாக்குச் செலுத்தி முதன்மைச் செல்வமாக கல்விச் செல்வத்தினூடாக மனிதன் மனிதனாக வாழ பெற வேண்டிய அனைத்து தேர்ச்சிகளையும் பெற்று சிறந்த பண்புள்ள மனித நேயத்தை மதிக்கும் மனிதனாக பாண்டியத்தியம் பெற்றால் மனித வாழ்வில் புது மணம் வீசும். மனித நேயம் வாழ்த்துப்பாடும் இவற்றினூடாக மனிதன் மனிதனாக வாழ்வான். என்பது திண்ணம்.

வே. நித்தியானந்தன் (ஆசிரியர்)
தலைவர்,
வள்ளுவர் வாசகர் வட்டம்,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஆசிரியரின் வாண்மையை வளமாக்குவதில் முக்கிய பங்கு வகிப்பது நூலகம்

மாதாப், பிதா, குரு, தெய்வம் ஆகிய நான்கில் மாதா பிள்ளையை பத்து மாதம் சுமந்து பகல் இரவு பாராமல் கண்துஞ்சாது பசிநோக்காது பிள்ளையை உலகிற்கு தருகிறார். தாயாகிய மாதா.

பிதா பிள்ளையை பாராட்டி சீராட்டி நற்பிரஜையாக்குவதில் கண்ணும் கருத்துமாக செயற்படுகிறார்.

குரு நற்கல்வியை ஊட்டி உலகில் சிறந்த பண்புள்ள அறிவு,தன்னடக்கம், பொறுமை போன்ற நற்பண்புகளை ஊட்டுகிறாார்.

குருவாகிய ஆசிரியர் தன் வாண்மையை விருத்தி செய்து தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளை திறமையான நற்பண்புகளோடு அறிவுக்கண்ணை திறக்க அவனுக்கு அபயம் அளிப்பது நூலகமாகும்.

நூலகத்திலே பல விதமான அறிவுத்திறன், மனப்பான்மையில் முன்னேற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காண பல நூல்களை வாசிக்கிறார். தான் வாசித்த அறிவுச்சுரங்கங்களை தன் மாணவர் மத்தியிலே பசுமரத்தாணி போல செலுத்துகிறார்.

எழுத்தறிவித்தவனே இறைவன் என்ற ஆ என்ற மொழிக்கு ஏற்ப அந்த இறைவனுக்கு சமமான ஆசிரியர் நடமாடும் வாசிகசாலையாக எதிர்கால மாணவச்செல்வங்களாக பிரகாசிக்க வைக்க ஆசிரியனுக்கு உந்து விசையாக வாண்மை விருத்திக்கான திறவுகோலாக அமைவது நூலகமாகும்.

விடிவெள்ளியாக மிளிரும் ஆசிரியனுக்கு அதாவது கண்டது கற்கப் பண்டிதனாவான் என்ற எண்ணக்கருவுக்கு ஏற்ப கல்வியை வளர்க்க.தன் அறிவை மேலும் மேலும் வளர்ந்தெடுக்க அவனுக்கு துணை நிற்பது சிறந்த வாசிகசாலையாகும்.

கிட்லர், முசோலி, அறிஞர் அண்ணா அணைவருமே ஒரு நாட்டின் மூல வேர் வாசிகசாலை. எதை இழந்தாலும் நாம் வாசிகசாலை இழக்க முடியாது.

ஒவ்வொரு இடத்திலும் அறிவுக்கண்ணை திறந்து அறியாமையை அகற்றி அறிவைதரும் கருவூலம் வாசிகசாலை. என்பது மிகையாகாது.

தாய் தந்தையால் செய்ய முடியாத உதவி, ஆலோசனைகளை நல்லாசிரியரிடம் இருந்து பெறலாம் ஒரு சமூதாயத்தின் விடி வெள்ளி. விடிவெள்ளியாக அவனை உயர்த்தி உலகில் உலவ விட்டது நல்ல நூலகமே.

உலக நாடுகளின் அரசியல்,சமூதாய பொருளாதார விடயங்களை அறியலாம். தொழில்நுட்ப அறிவைப் பெறலாம்.அமைதியைப் பெறலாம். மேற்சொன்ன எண்ணக்கருக்களையெல்லாம் நூலகத்தின் மூலம் பெறலாம்.

ஒரு சிறந்த ஆசிரியரின் வீட்டில் ஒரு தரமான நூலகம் இருக்க வேண்டும். தன் உழைப்பில் கணிசமான பணத்தை ஒதுக்கி எதிர்கால சந்ததியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பிரகாசிக்கவைக்க சிறந்த நூலகத்தை உருவாக்க வேண்டும். உலகிலே பேச்சுப் பொருட்களாக பிரகாசித்துக் கொண்டிருக்கும் விவேகானந்தர்.புத்தர், காந்தி மகான்,அப்துல் கலாம்,அன்னை தெரேசா எல்லோருடைய அறிவைப்பிரகாசிக்க வைத்ததில் பாரிய பங்கு வகித்தது நூலகமே.

1983 ம் ஆண்டு இலங்கையின் இனக்கலவரத்தில் கிழக்காசியாவிலே திராவிடப்பாணியிலே அமையப்பெற்ற யாழ் நூலகம் எரிக்கப்பட்ட போது வேதனை தாங்கமுடியாமல் உயிர் நீத்த கிறிஸ்தவ பாதிரியாரின் இறப்பையே எடுத்துக் காட்டி நிற்பது யாழ் நூலகமேயாகும்.

ஆசிரியர்கள் வாசிப்பின் மகத்துவத்தை உணர்ந்தவர்கள் அவர்களின் வாசிப்பின் வீச்சே சிறந்த மாணவப்பரம்பரையை உருவாக்கும். அந்த உருவாக்கத்திற்கு உந்து விசையாக இருந்து அவனது வாண்மையை உயர்த்தி நிற்பது சிறந்த நூலகமே என்றால் மிகையாகாது.

வ.சிவசுந்தரம்,
இலங்கை வங்கி வீதி,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இயல் - ஆ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நூலகம்மா (குறுங்கதை)

பசுமையான வறுமையில் பட்டதாரியாகி, பசுமலைப் பாடசாலையில் நுண்கலைப் பட்டதாரி ஆசிரியராக பணியாற்றுபவன் பரசுராமன். இவனுக்கு தாய் பார்வதிதான் வழிகாட்டியாக விளங்கினாள். தந்தை புத்திசிகாமணியை இளம் வயதில் இழந்தாலும் பசுமலையூர் நூல் நிலையமே பரசுவிற்குத் தந்தையானது. பரசுராமனின் பாடசாலை நண்பர்கள் பிரத்தியேக கல்விக்காக எங்கெங்கே பஸ் ஏறி அலையாய் அலைந்து தூள் எழுப்பினர். ஆனால் வறுமையில் பசுமையைத் தேடி புறப்பட்ட பரசுராமனுக்கு சதா புகலிடமானது பசுமலையூர் நூல் நிலையம்!

தாய் பார்வதி படித்தாலும் இளம் வயதில் கல்வியை விட்டவள். பத்திரிகை வாசிப்பதிலும் குடும்ப நல நூல்களை தேடிப் படிப்பதிலும் வல்லவளாகத் திகழ்ந்தாள் பார்வதி. பட்டினியால் பலநாள் வாடினாள். இவை புத்திசிகாமணிபார்வதிநெஞ்சில்கண்ணீரால்எழுதப்பட்டகல்வெட்டாகின. மூன்று வேளையில் சதா இரவில் மாத்திரம் தான் சோறும், முருங்கை இலைச் சுண்டலும், சொதியும் கிடைக்கும். உறவினர் கூட எட்டிப் பார்க்கவில்லையே எனக் கண் கலங்கியது. ஓலைக் குடிசை தெரிந்தவர்களும் எட்டாக் கனியாகினர். பட்ட கடனைக் கொடுக்க முடியாத வேதனை ஒருபுறம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நையாண்டி பண்ணி நச்சரிக்கின்ற கூட்டம் மறுபுறம். இத்தனைக்கும் நடுவே எதிர் நீச்சல் போட்டு பட்டதாரியானவன் தான் பரசுராமன். "பரசு படிப்பில் நீ காட்டுகின்றஆர்வம், துடிப்பு அத்தனைக்கும் பச்சைக் கொடி காட்டியது. நம் ஊர் நூல் நிலையத்தை விட இங்கு யாரும் இருக்க முடியாதடா" அடிக்கடி பரசுவிற்கு தாய் பார்வதி கூறும் உயர்வான வார்த்தைகளே இவை. பார்வதி மகனை பரசு என்றே செல்லமாக அழைப்பாள். "அம்மா ஆண்டவனை அங்குதானம்மா கண்டேன்". "ஆண்டவனையா பரசு". " ஆமாம் அங்கு இருக்கும் நூற்றுக்கணக்கான புத்தகங்கள், அரிச்சுவடிகள் தானம்மா என்னை படிக்க வைத்து பட்டதாரியாக்கிய தெய்வங்கள்" பார்வதி தன் சேலைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பெருமூச்சு விட்டாள். புத்திசிகாமணியுடன் படத்திலிருந்து கண்ணீர் சொட்டுவதான உணர்வு பார்வதியை வாட்டிப் புரட்டியது.

வாசிப்பால் உயர்ந்தோரையெல்லாம் அலங்கரித்த குடிசை பரசுராமனால் புகழ் பெறலாயிற்று. திரைகடலோடிய நண்பர் கூட்டம் திகைப்புற்றாலும், அவர்களை விட ஒரு படி உயர்ந்தவனானான் பரசு. **"பாடசாலைக் கல்விக்கு பக்க துணையாவது நூல் நிலையத்தை விட யாதாகவும் இருக்கமுடியாது."** பரசுவின் உள்ளத்தில் தினம் தினம் உதயமாகி விரியும் எண்ணக்கரு இது. அதிபராய், கோட்டைக் கல்வி அதிகாரியாய், மாகாணக் கல்வி பணிப்பாளராய் பரசுராமன் மலர்ந்து வரும் வேளையில் தாய் பார்வதி, பார்வதியாய் சிவனோடு இணைந்தாள். உண்மையில் புத்திசிகாமணியும் பார்வதியும் பரசுவிற்கு சிவனும் சக்தியுமாகவே விளங்கினர். ஏழை வாழ்வும் ஓலைக் குடிசையும் எழுதும் கதையின் நாயகனானான் பரசு. ஓலைக் குடிசையினுள் பூரண தூலலிங்கமானது பசுமலையூர் நூல் நிலையம். படித்த வாசகர்கள் சாமரை வீச புறப்பட்டாள் நூலக தேவி! வீணே ஊர் சுத்தி அலைபவர்களையும், வேண்டாத பொழுதுபோக்குகளிலே காலத்தைக் கொண்டு செல்பவர்களையும், கடமை தவறி காற்றில் பறப்பவர்களையும் படிக்கிறோம் என்று சொல்லி அமிழ்கிறவர்களையும் கண்டு அலவலாவி பரசுராமன் குறுங்கதையை கூறி முடித்தால் நூலகம்மா!

கலாபூசணம் தேனூரான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வாசகன் திலிபன்

வாஞ்சிநகர் பிரதேசத்தின் கல்மடுக் கிராமம் இயற்கை எழில் கொஞ்சும் அழகிய கிராமமாகும். இக்கிராம மக்கள் உயர்வான பண்பாட்டாலும் அன்பு காட்டுவதிலும் சிறந்தவர்கள். இவ்வூரில் அமைந்துள்ள வள்ளுவர் வாசிகசாலையானது மிகவும் சிறப்பானது. இவ்வாசிகசாலையின் சேவையினால் பல்வேறு இடங்களிலிருந்தும் பல வாசகர்கள் கல்வியாளர்கள் மாணவர்கள் என பலரும் வந்து பயன் பெறுவர். அப்பிரதேசத்திற்கே நிழல் விருட்சமாக இவ்வாசிகசாலை விளங்கியது.

இங்கு வாசகர்களின் நலன் கருதியும் வாசிப்புத் திறனை மேம்படுத்தவும் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 7.00 மணிவரையும் நூலகம் திறந்திருந்திருக்கும். அர்ப்பணிப்போடு கடமை செய்யும் பெண் உத்தியோகத்தர்கள் இருவர் சுழற்சி முறையில் கடமை செய்து வருகின்றனர். சுற்று நிருபத்தை மதித்துக் கடமை செய்யும் இவர்களுக்கு சிற்சில சோதனைகளும் வேதனைகளும் வராமல் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அன்று ஒருநாள் இரவு 7.00 மணிக்கு 10 நிமிடங்கள் இருக்கும் போது சாதுவான மழை தூறத்தொடங்கியது.

நீண்ட நாட்களுக்குப் பின் மழை பெய்வது சந்தோஷத்தைத் தந்தாலும் வீட்டில் வெளியில் காயப்போட்ட தேங்காய் சீவல்கள் நனையப்போகிறதே என்ற கவலையுடன் கடிகாரத்தைப் பார்த்தாள் சுமதி 7.00 மணியாகி விட்டது. யன்னல்களைப் பூட்டி விட்டு உள்விளக்குகளை அணைத்து விட்டு வெளிக்கதவை பூட்டுமுன் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. சுமதிக்குத் திகீா் என்றது 'சட்' என்று தன்னை அறியாமல் பயத்தில் உடம்பு நடுங்கத் தொடங்கியது. வெளியில் வெளிச்சம் எதுவும் தெரியவில்லை."கும்" இருட்டு என்ன இருந்தாலும் அவளும் ஒரு பெண்தானே பயம் இருக்காதா? முன் வீட்டில் இருந்தவர்களும் வேறு இடத்திற்குப் போய் விட்டார்கள். இல்லா விட்டால் உதவி கேட்டிருக்கலாம்.பக்கத்தில் வேறு வீடுகளும் இல்லை. வேண்டாத தெய்வம் இல்லை இந்தக் கதவை அவளால் இலகுவாக பூட்டமுடியாது. பலம் கொண்ட மட்டும் இழுக்க வேண்டும். ஒருவாறு Hand Phone உதவியுடன் கதவைப்பூட்டி விட்டு கேற்றுக்கு பற்லொக் போட்டுவிட்டு பாதைக்கு வர மழை கொஞ்சம் அதிகமாகியது .மின்னல் ஒன்று 'பளீா்' என அடித்தது. "வம்மியடியானே", "நாராயணா" என்று மனதிற்குள் இருவரையும் துணைக்குக் கூப்பிடுகிறாள்.

இந்த நேரம் எனது கணவர் மட்டும் உயிருடன் இருந்திருந்தால்... இந் நிலை எனக்கு ஏற்பட்டிருக்குமா? நூலகம் நூலகம் என்று இருவரின் வாழ்வும் நூலகத்துடனேயே முடிந்து விட்டது என்று அவரையும் நினைக்கிறாள்.. கண்ணீா் கண்களை மறைக்கிறது. கைகளால் துடைத்தபடி சாறித்தலைப்பால் தோளை மூடிக்கொண்டு தோள்ப் பையை மாா்போடு அணைத்தபடி குடையை விரிக்கும் போது ஏதோ காலில் விழுந்த மாதிரி இருந்தது எதையும் கவனிக்காத மன நிலையில் 'விறு விறு' என்று நடக்கிறாள்.

உட்பாதை வழியாக போகலாம் மழைக்காலம் பூச்சி,பொட்டுக் கிடக்கும் கொஞ்சம் காடான பகுதி அதனால் சுற்றுப பிரதான பாதையால் நடக்கிறாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பிள்ளையார் கோயிலைத்தாண்டும் போது பின்னால் யாரோ மிஸ் என்று கூப்பிடுவது போல கேட்கிறது.திரும்பிப் பார்க்க பயம் மனம் திக் திக் என்று அடிக்கிறது.

நடையைஅதிகப்படுத்துகிறாள்.சாதுவாக திரும்பும் போது ஒரு நெடிய உருவம் மழைக்கோட், தொப்பியுடன் அவளை நோக்கி வருகிறது. எப்போதும் அவள் தோள் பையில் சிறிய ரோச் லைட் இருக்கும். அவசரத்திற்கு அதையும் காணவில்லை. Hande phone ஐ கையில் எடுத்தேனே, Hand bag க்கில் வைத்துவிட்டேனா , அல்லது நூலகத்தினுள் வைத்துப் பூட்டிவிட்டேனோ என்று பலவாறு யோசித்தபடி தன்னையே சபிக்கிறாள். கொஞ்ச நாளாக அதிக மறதியாகத்தான் இருக்கிறது.

நான் ஒரு அதிகூஷ்டமில்லாதவள் ஏன்தான் எனக்கு இந்த வாழ்க்கையோ சீ... என்ன வாழ்க்கை இது இப்படியான வேளைகளில் மனது நொந்து போகிறது. யாரிடத்தில் சொல்லி அழமுடியும் என்னைப் போல ஒரு நிலமை என் எதிரிக்கும் வரக்கூடாது என்று பலவாறு யோசித்துக்கொண்டு நடக்கிக்கிறாள். நனைந்த சாறி நடையைத் தடுக்கிறது. இதோ என் பின்னால் வரும் உருவம் என்னை நெருங்குகிறது. கத்தி வைத்திருப்பானோ செயினைப் பறிக்கப்போறானோ? "பிளீஸ் யாராவது வாங்களேன்" என்னைக் காப்பாற்றுங்கள் என்று சத்தம் போடுகிறாள்.சத்தம் வெளியே வரவில்லை அவள் குரல் வளை இறுகுவது போல் இருக்கிறது. அழுகை அழுகையாக வருகிறது. பிரதான பாதைக்கு வந்தால் யாராவது விஷ்ணு கோயிலடியில் நிற்பார்கள். கண்ணா! எனக்கு வழிகாட்டு ஆஞ்சநேயரே!! வழிகாட்டு என்று இஷ்ட தெய்வம் எல்லாம் உதவிக்குக் கூப்பிடுகிறேன். விஷ்ணு கோயிலுக்கு வர இன்னும் அரை நொடி இருக்கிறது. இருபுறமும் வாகனங்கள் இன்னும் கொஞ்சம் நடையை அதிகரித்து விஷ்ணு கோயிலுக்கு வர அந்த நெடிய உருவமும் அவளை நெருங்க "அம்மா" என்று சத்தமிடுகிறாள். பளீர் என மின்சாரம் வந்துவிட்டது.

உலர்ந்து போன வாயில் ஒரு துளி உமிழ்நீரும் இல்லை தொண்டை வறண்டு விட்டது. நெடிய உருவத்தை பயத்தினால் நிமிர்ந்து பார்க்கிறாள். மிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இந்தாங்க உங்கள் மொபைல் போண் நீங்கள் வரும் போது அவசரத்தில் நூலகத்துக்கு முன்னால் கீழே போட்டுவிட்டீர்கள் அதை எடுத்து உங்களுக்குத் தரத்தான் உங்களைக் கூப்பிட்டேன்.


ஆனால் நீங்கள் பயத்தில் போவது போல தெரிந்தது. அதுதான் உங்களுக்குப் பின்னால் வந்தேன். நான் முன்பு நூலகத்திற்க்கு தினமும் வரும் வாசகன் திலிபன் என்றான். அப்போதுதான் அவன் முகத்தைப் பார்க்கிறாள். ஆ... திலீபனா? நாக்கு தழுதழுக்கிறது திலீபன் மன்னிக்கவும் நான் தப்பாக வேறு யாரோ என்று நினைத்து பயந்து விட்டேன். மின்சாரம் இல்லைத்தானே இந்தக்காலத்தில் இந்த நேரத்தில் எனக்காக உதவிதான் செய்திருக்கிறாய் நன்றியப்பா. நீங்களும் எனக்கு நிறைய உதவிகள் செய்திருக்கிறீர்கள் மிஸ் சிறு வயதிலிருந்தே நான் நூலகத்திற்கு வந்து எவ்வளவோ நூல்கள் வாசித்திருக்கிறேன். இரவல் பெற்றிருக்கிறேன். தேசியவாசிப்பு மாத போட்டிகள் பலவற்றில் கலந்து கொண்டு பரிசில்கள் பெற்றிருக்கிறேன். இன்று நான் உருவத்தால் மட்டும் அல்ல ஒழுக்கத்தினால், கல்வியினால் உயர்ந்து நிற்க இந்நூலகம் மட்டுமல்ல நீங்களும் தான் ஒரு காரணம் என்றான். அவளுக்கு மெய் சிலிர்த்து உள்ளம் குளிர்ந்தது. பயம் எங்கே போனதென்றே தெரியவிலலை இவ்வளவு மதிப்பும் ஞாபகமும் வைத்திருக்கிறாயே மீண்டும் நன்றி கூறிவிட்டுத் திறன்பேசியை பெற்றுக் கொண்டு உனது எதிர்காலம் சுபீட்சம் நிறைந்ததாக அமையட்டும். என்று வாழ்த்துக்கள் தம்பி "குட்நைட்" என்று கூறி விடை பெற்று வீடு வருகிறாள். தேங்காய்ச் சீவல்கள் நீரில் மிதக்கிறது ஆனால் அவள் கவலைப்படவில்லை. திலிபன் கூறிய வார்த்தைகள் அவளுக்கு பெருமையுடன் நெஞ்சில் நிறைவைத் தருகிறது.

(யாவும் கற்பனை அல்ல)

திருமதி ரமணிஜெயபாலன்
நூலகப்பொறுப்பாளர்
பொது நூலகம்
களுவாஞ்சிகுடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# நிம்மதி

குயில்கள் தம்மினங்களைக் கூப்பிட்டழைத்துக் கொண்டிருந்தன. இதனைக் கண்ட ஏனைய பட்சிகள் காலைக்கதிரவனை எழும்பும்படி பூபாளம் பாடிக்கொண்டிருந்தன. வில்கைஷன் பதிக்கபெற்ற உடையணிந்த இளைஞர்களும் யுவதிகளும் சிலர் ஒவ்வொரு வாட்டாகச் சுத்தம் செய்து கொண்டிருந்தனர். இது கதிரவன் உதயமாவதற்கு முன் ஐந்தரைமணியை பிரதாபிப்பது போலக் காட்டிக்கொண்டிருந்தது

அப்போது "என்ன வசந்தராசா இன்னும் எழும்பல்லையோ"? என்ற தாதியின் சத்தம் வசந்தனை உசார்படுத்தி விட்டது போல சட்டென்று கண்களை திறந்தான். படுக்கையில் இருந்து தான் விரும்பிய மட்டும் எழுந்திருக்க முயன்றும் முடியவில்லை. இதனைக் கண்ணுற்ற பக்கத்துக் கட்டிலில் இருந்த நோயாளி ஹனிபா எழுந்து வந்துஇமெல்லத் தலையும் முதுகையும் நிமிர்த்தி ஒருவாறு இருக்கப் பண்ணினான் அ...ம்...மா... வசந்தனுக்கு அரைக்கு கீழ் ஏற்பட்டிருந்த வலிப்பு இன்னும் கூடியிருந்ததே தவிர சற்றேனும் மாறியதாக இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இரண்டு வாரமாக ஆயுள்வேத வைத்தியரிடம் கை மருந்து செய்தும் பலனளிகாமையினால் மட்டகளப்பு வைத்தியசாலையை நாடிப்பார்ப்போம் என்ற எண்ணத்தோடு, தன் அகதி முகாமில் நிறுவனத்தால் கொடுக்கப்பட்ட ரூபா ஓராயிரத்தையும் கவனமாகப் பத்திரப்படுத்தி வைத்திருந்தான். இறுதிப் பூர்வாங்க நடவடிக்கையே இது. தான் அணிந்திருந்த பழைய சாரமும், அவனைக்கிட்ட அணுகி உரையாடுபவர்களுக்கே அவன் உயர்ந்த அதுவும் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவன் என்பததை நியாயிக்கும். ஹனிபா கொடுத்த தண்ணீர்ப் பாத்திரத்தின் உதவியுடன் தன் முகத்தையும் வாயையும் அலம்பிட்டுத் தன் கந்தல் துவாயினால் துடைத்து முடிப்பதற்குள், தாதியின் மறுவார்த்தை கட்டளையாக பிறப்பித்தது "கெதியா வாங்கோ" தற்போது நடக்கவே முடியாததை அவனது கண்ணீர்த் துளிகள் காட்டிக் கொண்டிருந்தன.

அப்போது தாதியைப் பார்த்து ஹனிபா கேட்டான் 'அவருக்கு நேற்றையவிட இன்று எழுந்திருக்கவே முடியாம இருக்கு மிஸ் அந்த தள்ளுவண்டியில அவரை இருத்தி தள்ளி கொண்டு வரட்டா அம்மா?'இதனைகேட்ட தாதிக்கு உள்ளம் இரங்கி விட்டது இரவு முழுவதும் தன் கடமையைச் சரிவரச் செய்த தாதி மிகவும் பொறுமை கொண்டவளாக தானே வசந்தனை அணுகி இரத்தம் எடுத்து விட்டு கூறினாள். தம்பி நீங்க எனக்கு உள்ளத சொல்லிருக்கலாமே? நேற்று மாலை டியூட்டிமாறின எனக்கு இரவு எட்டு மணிக்கு மருந்து தரும் போது, என்னவகையான மருந்து கொடுக்க வேணும் எண்டுபார்த்தேனே தவிர உங்களுடன் கதைக்காது என்ர தவறுதான் இருந்தாலும் இரவு நானும் உங்களிடம், "பெரிசாகக் குறட்டைவிடாதே தம்பி என்று தமாசாகக் கதைச்சிற்றன். இப்படி நீங்க அடிபட்டு, சொத்துகளை இழந்து, இடுப்பிலும் உபாதையுடன் துன்பபட்டு வந்தது எனக்குத் தெரிந்திருந்தா, பகிடி பண்ணியிருக்க மாட்டன்." தாதியின் வார்த்தை தாயன்பாக மாறியது வசந்தனுக்கு.

வசந்தன் பெரிய குடும்பத்தில் பிறந்தவன். தான், தன் குடும்பம் என்று மட்டுமல்ல தம்மைப் போல் மற்றவரும் உயரவேண்டும், வாழவேண்டும் என்ற எண்ணத்தோடு தம்மைச் சார்ந்த சிங்கள முஸ்லிம் மக்களுக்கும் நன்றாக உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செய்து வாழ்ந்தவன். தனது உழவு இயந்திரத்தைக் கொண்டு தனது பத்து ஏக்கர் வயலை உழுதுவிட்டு மற்றவர்களிடம் சிறிதளவு பணத்தை வாங்கிக் கொண்டு உழுது விதைத்துக் கொடுப்பான். அது போல அவனது கெமிக்கல் கடையிலும் உரம், கிருமிநாசினி முதலியவனவும் கடனுக்குக் கொடுத்து உதவுவான். சூடு மிதிக்கும் காலத்தில் அவை முற்றாக கொடுத்து முடிக்கப்பட்டு விடும். இவ்வாறு எல்லோராலும் நற்பெயர் பெற்று வந்த வசந்தன், தனது விசாலமான வீடு நிறையக் குரக்கன் முதல் பல்வேறு தேவைப்பட்ட பொருட்களும் வைத்திருப்பான்.விருந்தினரை உபசரிப்பதில் அந்தப் பகுதியில் அவனுக்கு எவரும் நிகரில்லை என்றே கூறலாம்.

தனது தந்தையின் காலத்தில் பல வருடம் பஞ்சம் நிலவிய போது சகலருக்கும் உதவிய பழக்கத்தை இன்றும் கடைபிடிக்கும் நல்லெண்ணம் கொண்டவனாகவே வசந்தன் காணப்பட்டான். முப்பத்தாறாம் கொலனியில் பதற்றமாக இருப்பதாகவும், பிரச்சினைகள் அதிகரித்தால் சில காடையர்களின் அட்டகாசத்திற்கு நாம் நிகர் நிற்க முடியாது என்ற வார்த்தைகளைக் கேட்ட வசந்தன், முன்னொரு போது இப்படிபட்ட ஒரு சந்தப்பத்தில் தந்தை தாக்கப்பட்டதையும், சொத்துக்களையும் உடமைகளையும் இழந்ததையும் எண்ணிப்பாக்கலானான். ஊர் திரண்டு விட்டது! யார் எதை எப்படி செய்வதென்ற பதற்றம் எல்லோரையும ஒரு கணம் உலுப்பியது. தும் உயிரையாவது தப்பித்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வோடு தனது உழவியந்திரத்தில் தன் குடும்பத்தோடு அயலவர்களையும் ஏற்றிக் கொண்டு பக்கத்தில் கேட்ட செல் சத்தங்களையும் பொருட்படுத்தாது வேகமாக ஓடிவரலனான் வசந்தன்.

அப்போது பெய்த பெரும் மழையையும் இடிமின்னலையும் பற்றி ஒரு துளிகூடச் சிந்திக்க மனம் வரவில்லை. வரும் வழியில் வீதியில் நின்ற ஓர் ஆலமரத்தில் இருந்து முறிந்து விழுந்த பருத்த கிளையொன்று அவன் வாகனத்தின் மேல் விழுந்ததில், அவனுக்கே பெரிய பாதிப்பு ஏற்பட்டது. முள்ளந்தண்டில் அடிபட்டு அதனால் ஏற்பட்ட பாதிப்பு அவனை நாளாக நாளாக நிமிர்ந்து நடக்க முடியாதபடி ஆக்கிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எழுவான் கரையை அடைந்த போது அங்கு கிராமத்து மக்களும் சொந்தக்காரர்களும் முகம் சுழிப்பதை ஊகித்துக்கொண்ட வசந்தன், தாமும் மற்றவர்களோடு பாடசாலையில் சென்று தஞ்சம் புகுந்தான். வகுப்பறை கட்டிடம் ஓரளவு வசதியாக இருந்தாலும் நல்ல குடிநீர் வசதியோ, மலசலகூட வசதியோ ஆயிரக் கணக்கானோருக்கு ஈடுகொடுக்காது. அன்றையபொழுதைப் போக்கிய வசந்தனுக்கு மறுநாள் அக்கிராமத்து விதானையாரின் கட்டளை மேலும் கவலையைத்தூண்டியது. "எல்லோரும் கேளுங்கோ இங்க ஒரே ஒரு மலசலகூடம்தான் இருக்கு கிணத்து நீரும் உவராக இருக்கின்ற படியால் குடிக்க ஏலாது பிரதேச செயலாளர் மூலம் குடிதண்ணிக்கு ஏற்பாடு செய்யிறன் பெண்கள் மட்டும் இதுகளை சமாளிக்கட்டும் ஆண்கள் வேறு இடங்களைப் பார்த்து சமாளியுங்க." வசந்தன் என்ன செய்வான். நினைத்த போது நினைத்த காரியத்தை முடிக்க பாத்ரூம் வசதி முதல் சகல வசதியையும் கொண்டிருந்தவனுக்குத் தன் பிள்ளைகளை எங்கு அழைத்த செல்லலாம் என மனம் தவித்தது.

ஏதோ சமாளித்துக் கொள்வோம் என்று நினைத்த வசந்தன், தனது தந்தையின் நண்பனது வீட்டிற்குச் சென்று அன்றைய காலைக்கடன்களைக் குடும்பத்துடன் முடித்துக் கொண்டான். காலை ஆகாரமாகப் பாடசாலையில் கிடைத்தபாண் துண்டு, அவனுக்கு யானைப்பசிக்குச்சோழப்பொரிபோட்டதுபோல இருந்தாலும், அது அமிர்தமாகவே இருந்தது. மதியம் கிடைத்த உணவுப் பார்சலும் அப்படியே. சுனாமிக்குப் பின்பு ஏட்டிக்குப் போட்டியாகப் பொருட்களை இலவசமாகத் திணித்துப் பேரெடுத்து வந்த நிறுவனங்களும் அகதிகளின் அதிகரிப்பைக் கண்டு மெல்ல பின் வாங்கியதே இதற்குக் காரணம்.

இவ்வாறுதம் முகாம் வாழ்க்கையை தொடர்ந்த வசந்தனுக்கு தம் வீட்டில் உள்ள ஆடம்பரப் பொருட்களோடு, நெல் முதலிய உணவுப் பொருட்கள், கால் நடைகள் யாவும் செல் தாக்குதலால் சாம்பலாகி விட்டதைக் கேள்வியுற்று அரற்றிய தன் மனைவியின் ஓலம், நாரசாரமாக தன் காதில் நுழைந்தது. ஒருகணம் பிரமித்து, "சாதுரியா நம்ம போல எல்லா மக்களுக்கும் ஏற்பட்ட கதிதானே இது" என்று தனது மனைவியைத் தேற்றிக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இவ்வாறு இரவல் யாசகத்துடன் இரு வாரங்களைக் கடத்திய வசந்தன் தன் வறுமையைக் காட்டிக்கொள்ளவில்லை. .இருந்தும் அவனது உடல் நிலை வரவர மோசமாகிக் கொண்டு வருவதை எண்ணித் தன் மனைவி மக்களது எதிர் காலத்தையும் பற்றி சிந்திக்கலானான். சுவர் இருந்தால்தானே சித்திரம் வரைய முடியும்.என்பதனை தன் மனதுக்குள் எண்ணிக் கொண்ட வசந்தன் நான் எப்படியும் எனது இடுப்பு நோய்யை சுகமாக்க வேண்டும். என்ற நோக்கோடு தனக்கு கிடைத்த ரூபா ஓராயிரத்தையும் தன் வாழ்நாளுக்குத் தீபம் ஏற்றக் கிடைத்த ஒரு கை விளக்கு என எண்ணி மட்டுநகர்ப் போதனா வைத்தியசாலையை நாடலானான்.மறுநாள் காலை ஆகாரமாகக் கோப்பையில் ஏறிய பாண்துண்டையும். தேனீரையும், வாழைப் பழத்தையும் ஏந்தியபடி கட்டிலிலிருந்து கண்ணீர் வடித்தவன்," எனது மனைவி மக்களுக்கு இதுவும் கிடைக்குமோ? என்ற முணுமுணுப்போடு வந்த பெருமூச்சு அருகில் இருந்த ஹனீபாவையும் ஒருகணம் உருகவைத்துவிட்டது. தம்பி நீங்க கவலைப்படாதீங்க இது உங்களுக்குமட்டுமல்ல நம்ம எல்லா மக்களுக்கும் ஏற்பட்ட துயரந்தானே. நேற்று நீங்க வாட்டுக்கு வந்ததும் உங்களப் பார்க்க வந்தாரே சிறிபால முதலாளி அவரும் உங்களைப்பற்றித்தான் கவலைப்பட்டாரு. நீங்களும் உங்கட அப்பாவும் சிங்கள,முஸ்லீம் மக்களுக்குச் செய்த உதவிகளுக்கு, நீங்க படுற துன்பத்த நினைக்க உங்களப்பற்றியாரு கவலைப்படாம இருப்பாங்க தம்பி. நிலம சரிவந்திடும் எப்படியும் இப்படியா இருக்கப்போது? சுரிவந்தா எல்லோரும் உங்களுக்கு உதவ முன்வருவாங்க தம்பி. தான் தன் கண்முன்னே கண்ட காட்சிகளைக் கேட்ட பல கருணை வார்த்தைகளைக் ஹனீபா எடுத்துக் கூறினான்.

மறுநாளும் வழமைபோல வாட்டின் நித்திய கருமங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. காலை ஆகாரமாகப் பாண்துண்டு, வாழைப்பழம் அதனைத் தொடர்ந்து குளிகைப்பங்கீடு, அதனையடுத்து தாதியப் பயிற்சி மாணவர்களின் படுக்கை விரிப்பு அலங்கரிப்பு அவர்களுக்கு தக்கபடி மருந்துகள் எழுதி விட்டுப் பத்தாவது கட்டிலை அடைகிறார். "வசந்தராசா இப்ப எப்படியிருக்கு?. வசந்தனின் பதிலாகக் கிடைத்தது கண்ணீர்த் துளிகள்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மீண்டும் டாக்டர் பேச்சைத் தொடர்ந்தார். 'உங்களுக்கு முண்ணாணில சின்னப் பாதிப்பொண்டு இருக்கு முள்ளந் தண்டுல ஏற்பட்ட வெடிப்பால அது தாக்குப்பட்டு இருக்கு அதனால கெதியாகச் குணமடைய வேணுமெண்டு இண்டைக்குக் கொழும்புக்கு அனுப்புறன். சீக்கிரம் குணமடஞ்சதும் பழையபடி நடக்கலாம். இங்கு அதுக்குரிய வசதிகள் இல்லத்தானே. நீங்க எதுக்கும் பயப்படத் தேவயில்ல. இப்ப எட்டுமணிக்கு அம்பியுலன்ஸ் வண்டி புறப்படுது. அதுல போங்க சரியா? அங்க நல்லபடியாக் கவனிப்பாங்க.

வசந்தனுக்கோ, 'ஐயோ நான் ஏன் இங்குவந்து மாட்டிக்கிட்டன். எனக்கு இங்கு என்ன உதவி இருக்கிறது. அகதிக்கு ஆகாயம்தான் துணை வரவேணும். என்ற வார்த்தை மனதுக்குள் விசாலித்துக் கொண்டிருந்தது. மறுபுறம் மனைவி மக்களின் கவலை கரைபுரண்டோடும் காட்டாற்று வெள்ளம்போல நிழலாடியது. சரி என்று தன்னைத் தானே தேற்றிக்கொண்ட வசந்தனுக்கு, இறுதியாக இதையும் பார்த்துவிடுவோமே என்ற கடைசி எண்ணம் அவனை உந்த, தான் அம்பியுலன்ஸ் வண்டியில் ஏறிக்கொண்டான். அப்படியல்லாமல் தனியே வாகனம் பிடித்துப் போவதென்றால் ஸ்கானிங்முதல் ஒப்பறேசன்வரை ஐந்து லட்சத்துக்குமேல் செலவாகும் அதற்கு அவன் இந்த இக்கட்டான நேரத்தில் எங்குபோவான்?.

சுமார் ஏழு மணித்தியாலங்களின் பின்பு அம்பியுலன்ஸ் வண்டி கொழும்புப் பெரியாஸ்பத்திரியை அடைந்தது. பார்த்த இடமெல்லாம் அந்நியர்களாய்க் காணப்பட்டனர். வண்டியலிந்து ஸ்ரெச்சரில் மாற்றப்பட்டு வாட்டில் அனுமதிக்கப்பட்ட வசந்தனுக்கு அன்றையநாள் வாழ்க்கையில் மறக்கமுடியாத முதல் நாள்தான். ஓரிரு ஊழியர்கள் வசந்தனைப் பார்த்தாலும் தன்னை முறைத்துப் பார்ப்பதுபோலவும் அவர்களது பேச்சு நடை முரட்டுத்தனமாக நடந்துகொள்வது போலவும் இருந்தது அவனுக்கு. அவர்களது பாஷை வசந்தனுக்குத் தெரியாததால்தான் அவனுக்கு அப்படியிருந்ததே தவிர வேறொன்றும் இல்லை.

கடைசியாக ஸ்கானிங் செய்வதற்காகக் கொண்டுசென்ற வைத்தியர் அவனுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உரையாடலானார் 'மொக்கத உணே' டாக்டரின் மெய்ப்பாட்டு விசாரணை ஓரளவு விளங்கினாலும். வசந்தனுக்கு சிங்களம் பேசவராது. என்ன நடந்ததைத் தமிழிலேயே விவரமாகக் கூறினான் ஸ்கானிங் முடிந்ததும் அன்றைக்கே ஒப்பரேசனுக்குக் கையெழுத்தும் வாங்கப்பட்டது. தனது இஷ்ட தெய்வங்களையெல்லம் வேண்டியவாறு கையெழுத்தும் இட்டு மௌனமானான் வசந்தன்.

அன்றைய இரவிலிருந்தே விரதம் அனுட்டித்த வசந்தனை ஒப்பரேசனுக்கு ஆயத்தமாகும்படி தாதி கூறியதும் இஅப்பனே தான்தோன்றீஸ்வரா! தாந்தா மலையானே என்றெல்லாம் தன் மனதுக்குள் எண்ணியபடி ஆயத்தமானான். சற்று நேசத்தில் ஸ்ரெச்சர் முலம் ஒப்பரேசன் தியேட்டரை அடைந்த வசந்தனுக்கு இடைவழியே போகும் போது 'ஒயாதமுழுத' என்ற வைத்தியசாலை ஊழியன் கேட்டது. அவனுக்குப் பயத்தையும் பீதியையும் கொடுக்கத் தொடங்கியது. 'இன்றோட என்ர கதை முடியப் போகுதோ?' என்று நினைத்த வசந்தன் நான் ஊரிலே செத்திருந்தாலும் என்னப் பிள்ளகுட்டிகளாக, இனசனம் சூழக் கொண்டு அடக்கம் செய்யக் கிடைச்சிருக்குமே. என்ர ஆத்மாவும் நிம்மதியாகப் போயிருக்குமே என்றெல்லாம் பலவாறு அவனது உள்ளம் தறியடித்துக் கொண்டிருந்தது.

ஒப்பரேசன் தியேட்டரில் இருந்த டாகடர் வசந்தனைப்பார்த்துச் சிங்களத்தில் கேட்டார் 'ஒயா கொஹெ இந்தலா என்னே?' வசந்தனுக்கு அவரது கேள்வி புரிந்துவிட்டது. நான் முப்பத்தாறாம் கிராமத்தில் இருந்து வருகிறேன். பதிலளித்தான் வசந்தன். மயக்க ஊசி போடுவதற்கு முன் இரண்டு நிமிடங்கள் அவனுடன் உரையாடிய டாக்டர், தன் கடமையைத் தொடரலானார். நான்கு மணித்தியாலங்களின் பின்பு வசந்தனுக்குச் சுய உணர்வு வந்துவிட்டது. அப்போது டாக்டர் கேட்டார் "இப்போ எப்படியிருக்கு? அவர் அரைகுறைத் தமிழிலும், சிங்களத்திலும் கதைத்தது. மிக்க சந்தோசத்தையும் ஆச்சரியத்தையும் கொடுத்தது. அப்போ நீங்க யார்ட மகன்? நானும் முப்பத்தாறாம் கொலனிதான். பயப்படாம சொல்லுங்க டாக்டரின் கேள்விகள் விசித்திரமாக இருந்தது வசந்தனுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"நான் ராசதுரையின்ர மகன்." வசந்தனின் பதிலைக் கேட்டதும் டாக்டரின் முகம் பூவாய் மலர்ந்தது. டாக்டர் கூறினார் 'நான் முனிதாசின் மகன். உங்களக் காணக் கிடைத்தது எனக்குப் பெரிய சந்தோசம். உங்கட அப்பா நல்லவர் எல்லோரையும் நல்லாக் கவனிப்பார். என்ர அப்பா உங்கட அப்பாட்ட வயல் வேலைக்காரனாக பத்து வருடம் கூலி வேலை செய்திருக்கிறார். என்ர குடும்ப நிலையில நான் இப்படி ஒரு டாக்டர் பதவிய அடையிறதுக்கு உங்க அப்பாவின்ர உதவிதான் காரணம். அது ஒருபுறமிருக்க, நீங்க இன்னும் ஒரு கிழமை பிந்தியிருந்தால் உங்களுக்கு நிலம மோசமாகியிருக்கும். இருந்தாலும் உங்களுக்கு நான் சேவைசெய்யக் கிடைத்தது எனது பாக்கியம் எண்டுதான் சொல்ல வேணும் தம்பி .'டாக்டரின் இரக்கமான வார்த்தைகளைக் கேட்ட வசந்தனுக்கு ஆனந்தம் பொங்கிற்று.

'இண்டைக்குமட்டும் ஆஸ்பத்திரியில இருங்க. நாளையில இருந்து நான் இருக்கிற வீட்டுக்கக் கூட்டிக்கொண்டு போறன். உங்கள நான் மிச்சம் கண்ணியமாகப் பார்க்கிறேன். எனக்கொண்டு கடமையே இருக்கல்லவா?. உங்கட மனைவி மக்களையும் கொழும்புக்கே கொண்டுவர என்ர காரையே அனுப்புறன்'. இவ்வாறு டாக்டர் கூறியதைக்கேட்ட வசந்தனுக்கு, இன்றுடன் வாழ்வு முடிந்துவிடுமோ என்றிருந்த மாறா, உலகம் எப்படி வெளுத்ததென்றே தெரியவில்லை. அவனது கண்களில் இருந்து ஆனந்தக்கண்ணீர் பெருகடாக்டரின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டான் வசந்தன். இருவர் உள்ளங்களையும் அன்பெனும் பாசம் இறுகப் பிணைத்துக்கொண்டது.

திரு. தா. கோபாலகிருஷ்ணன்
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நதி என்னும் முதியவர்

நதி என்னும் முதியவர் வேகமாகப் பாய்ந்து கொண்டிருந்தார். "குப்பை! குப்பை! குப்பை!" என்று கோபமாக முணுகினார். "மக்கள்என்மீது மேலும் மேலும் ஏன் குப்பைகளைக் கொட்டிக் கொண்டிருக்கிறார்கள்," என்றார். அவரும் நதியில் வசித்து வந்த ஏனைய மீன்கள், இறால்கள், நண்டுகள், தவளைகள் போன்ற உயிரினங்களும் மகிழ்ச்சியை இழந்தன. நீர் அழுக்காகி வருகிறது இதனால் அவற்றிற்கு உடல் நலம் குன்றியது.

ஒருநாள் நண்டு ஒன்று உடல் நலம் இன்றி இறந்தே போயிற்று. இதைக் கண்ட நதித் தாத்தா மிகுந்த வருத்தமடைந்தார். இனியும் இதுபோன்ற சம்பவங்கள் நிகழக் கூடாது.என்று அழுதார்.நதித் தாத்தாவுக்கு மூச்சு விடுவதே சிரமமாக இருந்தது. காரணம் அந்தத் திசையில் சேறு அதிகமாக இருந்தது. மற்ற உயிரினங்களும் இதனை உணர்ந்தன. தண்ணீரே! நதித் தாத்தாவே!எங்களைக் காப்பாற்றுங்கள். இந்த நீர் மாசடைந்து வருவதால் எம்மால் தொடர்ந்து இங்கு வசிக்க முடியாது. நீங்கள் என்ன தான் செய்கிறீர்கள் என்று அவை கூச்சலிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நதித் தாத்தா மிகவும் சோகத்துடன், ஆறறிவுள்ள மக்களே! ஏன் இதை உணர்கிறீர்கள் இல்லை சுற்றுச்சூழலை பாதுகாக்க எண்ணுகிறீர்கள் இல்லை! எவ்வளவோ அறிவுறுத்தல்களை கொடுத்தும் அதனைப் பின் பற்றுகிறீர்கள் இல்லையே! உங்களுக்கு பகுத்தறிவு இல்லையா?என்று விம்முகிறார். என்னால் என்ன செய்ய முடியும் நாம் தான் இனி மக்கள் இல்லாத இடங்களுக்குச் செல்வோம்.

தண்ணீரும் இதை உணர்ந்து கொண்டது. அது தான் போகும் திசையை மாற்றிக் கொண்டது. வெப்பம் அதிகரித்து வருகிறது நதித் தாத்தாவும் ஏனைய உயிரினங்களும் தண்ணீர் போகும் திசையில் பல சிரமங்களுக்கு மத்தியில் செல்லலாகின மாதக் கணக்கில் சிரமப்பட்டன. இறுதியில் வெற்றியும் கண்டன. இப்போது அந்த நீர் காட்டின் வழியாக மிகவும் சந்தோசத்துடன் செல்கிறது. முன்னர் நதி இருந்த இடம் காய்ந்து பள்ளம் ஆகிவிட்டது. நதி இருந்த போது படகுகளில் மக்கள் அக்கரைக்கு சென்று கொண்டிருந்தனர். இப்போது நீர் வற்றியதால் காய்ந்து போய் விட்டது. மக்கள் அதிக நெடுந் தொலை தூரம் நடக்க வேண்டியுள்ளது. சிறுவர்கள் பெரியவர்கள் நீந்தி விளையாட நதி இல்லாமல் போய் விட்டது. நதியோரம் குடியிருந்தவர்களுக்கு குளிக்கவோ துணி துவைக்கவோ நீர் இல்லை விவசாயிகளுக்கு வரட்சியால் பயிர்கள் வயல்கள் தோட்டங்கள் காய்ந்து போய் விட்டது.

மக்கள் நதியைத் துன்புறுத்தியதை உணர்ந்து கொண்டனர். தூயநீரை பெற அதிக பணம் செலவளிக்க வேண்டியிருந்தது. குப்பைகளை அகற்றவும் பணம் செலவளித்தனர்.

இனியாவது நாம் உணர்ந்து சுற்றுச் சூழலைச் தூய்மையாக பேண நடவடிக்கை எடுப்போம்.

நன்றி

திருமதி சிறிதாரணி சுதன்
பொதுநூலகம், களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இயல் - இ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**அன்று எரிந்து சிதைந்து**
**அழிந்து காட்சி தந்த**
**நூலகம் இன்று**
**புகழ் பெற்று**
**நற்சேவையாற்றி வருகிறது.**

சீர் பெருகு சிறப்பு மிகு பழம்பதியாம் மறவர் மண்ணும்
குடிமரபும் குல மரபும் ஏர் உழவர் காராளர் வாழ்பதியாம்
வற்றாத மீன் பாடும் தேன் நாட்டின் வாவிபாய்ந்து ஓடும்
நெற்கதிர்கள் முற்றி வளைந்து காற்றில் அசைந்தாடும்

சுற்றி எங்கும் குளங்களிலே தாமரை,அல்லி,ஆம்பல்
காலையிலே கதிரவன் வரவு கண்டாடும்
அழகு தரும் எங்கள் மருத நிலமும்
விளா,வேம்பு,வம்மி,திருக்கொன்றை, ஆலை,அரசை
மரங்கள் நிழல் தரும் சோலைகளும்
மா,பலா,வாழை, கனிவளமும் மந்தையினமும்
அழகு தரும் களுவாஞ்சிமாநகராம் இவ் ஊரில்

பாவலரும், நாவலரும், கலைஞர்களும்,முத்தமிழும்
தன் மானத்தமிழ் இனமும் ஆற்றல் மிகு அறிஞர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அருள் மிகு பழமை மிகு சிறப்பான ஆலயமும் நிறை
எங்கும் நிறைந்துள்ள நீர்வளமும், நிலவளமும் சோலைகளும்
வரலாறு படைத்திட்ட தமிழ் மறவர் வாழ்ந்து வரும் எங்கள்
அறிவகமாய் நிலைத்திருக்கும் பொது நூலகமாய்
அமைந்திட்ட உண்மையுள்ள வரலாற்றை உரைக்கின்ற
தமிழ் உணர்வும் தமிழ் இனத்தின் உயிர் அழிவை சொல்லும்
தெளிவான கவிதையினை அஞ்சாமல் ஏற்றிடுக படித்து சுவைத்திடுக
தினம் வாசகர்கள் நாடி தேடிவரும் நூலகமாம் இது

சோதிடர்கள்,வைத்தியர்கள்,ஆத்மீக அறிஞர்கள்
சைவ மத குருமார்கள்,புகழ் மிக்க பூசகர்கள்
சான்றோர்கள் ஆசிரியத் தீபங்கள் நிறைபதியாம்
மண்ணை சிவப்பாக்கி செவ்விரத்தம் வடித்திட்ட செந்தமிழர்
வாழும் பரம் பரையினர் வாழும் இவ்வூரில் அறிவு
தரும் நூல்கள் பல நிறைந்திருக்கும் பொதுநூலகமாம்
சுற்றி உள்ள இடங்களில் மத்தியகேந்திர மையமாகும்
தேன் நாடும் வண்டு தினம் மலர் நாடி வருவது போல்
வாசகர்கள் நாடிதேடி ஓடிவந்து பலன் பெறும் அறிவகமாம்
இது என்றும் வளர்க புகழுடன் சிறப்புடன் வாழியவே.

கவிஞர்.பூ.பா.மதுரநாயகம். J.P
களுவாஞ்சிகுடி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## களுவாஞ்சியில் கமழும் மண்வாசனை

அத்தியடி மூலையில்,
அந்த அழகொளிரும் சோலையில
முத்து முத்தா பனித்துளிகள்
முத்தமிட்டுச் சிரிக்கையிலே
தித்திக்க தேன்குரலால்
பூங்குயில்கள் பாட்டிசைக்கும்
பாங்குடனே பவ்வியமாய்
அங்கு பச்சைமயில் தோகை விரிக்கும்...

குளக்கரை ஓரத்து விளாமரங்கள்
குதூகலித்து இங்கு கோலம் காட்டும்
காலம் பார்த்து கனிபறித்து
களிப்புற எங்கள் வாய்ருசிக்கும்
ஞாலம் போற்றும் நற்கனியும்
நன்றாய் அங்கு கமகமக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆலமரத்து கிளிகள் வந்து
அங்கு அழகாய் சிறகடிக்கும்...

ஏற்றாலே நீர் இறைத்து
ஏற்றமுறப் பயிர் வளர்த்து
சேற்று வயல் விளைய நாமும்
போற்றினோம் பூமாதேவியையும்
ஆற்றினோம் அரும்பணிகள்
அருவி வெட்டி சூடடித்து
காற்றாலே பொலியும் தூற்றி பொலிவுகண்டு
சோற்றாலே பஞ்சமின்றி சுகமும் கண்டோம்.

வட்டிக் குளத்து வெண்டிக்காயில்
வதக்கி வைச்ச வத்தல் குழம்பும்
கட்டுச்சோறும் கமகமக்கும்
வட்டவான் வட்டையில்
கட்டிய வரம்பினிலிருந்து
புட்டுப் புட்டு தட்டில் வைத்து
தயிரும் சேர்த்து உண்ண
தவியாய் தவிக்கும் உள்ளம்.

கை. சுந்தரலிங்கம்.
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தாய் மண்ணே
# என் வணக்கம்

மீனிசையின் நாதமொடு வாவி நங்கை நடனமிடும்
மட்டு நகர் தென் திசையில் கதிரோனின் கரைதனிலே
கம்பீர தோற்றமொடு காட்சி தரும் ஊரம்மா
களுவாஞ்சிகுடி என்னும் கண் போன்ற மண்ணம்மா!

கருணை ஒளி வீசுகின்ற கஜமுகனவன் ஆலயமும்
கவினழகு காட்டி நிற்கும் கண்ணகியாள் கோயிலுடன்
வீரத் திருமகனாம் வீரபத்திரன் பதியுடனே கண்ணபிரான் திருப்பதியும்
வம்மி நிழல் கீழதனில் வீற்றிருக்கும் விநாயகனின்
ஆலயமும் அமைந்த எந்தன் கண்ணான ஊரம்மா !

கெண்டையுடன் கயல் துள்ளும் வெள்ளி அலை மோதுகின்ற
வாவி மகள் கரையோரம் செந்நெல் பரப்பி நின்று
செங்கதிர் அலையாடும் களனி வயல் கரைதனிலே
கண்ணகியாள் ஆலயமும் அமைந்த மண் எந்தன் ஊரம்மா !
செந்நெல் களனி வயல் கரைதனிலே நீர் பரவிக் கரை புரளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெருங்குளங்கள் காட்சி தரும் குளநீரை மறைத்து நிற்கும்
வெண் செந்தாமரைகள் மலர்ந்தபடி பூத்து நிற்கும்
வெண் நாரைக் கூட்டம் அங்கே இரை நாடித் தவம் கிடக்கும்
இத்தனை எழில் கொஞ்சும் கவினழகு மண்ணம்மா !

ஆலயங்கள் பராமரிக்க ஆலய பரிபாலன சபையுடனே
சைவமதைப் பேணிடவே சைவ மகா சபையொன்றும்
ஆதிமுதல் இன்றுவரை இயங்கி இங்கே வருகிறதே
கல்வியொடு கலைகள் பலவாழுகின்ற செல்வம் நிறை வீடம்மா !

தமிழும் சைவமும் தன்னிரு கண் போன்று
போற்றி நின்று காத்து வந்த தமிழ்த் தாயின் தவப்புதல்வன
ந்த காலமது பொற்காலம் தானம்மா !
எம்மண்ணில் நடமாடி வாழ்ந்த நல் மண் எனது மண் அம்மா !
அவர் வாளமதூரை வளர்த்து விட்ட
எம் தலைவன் இங்கே சிலையாக நிற்கின்றான் !

கடற்கரைச் சாலைதனில் கலைவாணிச் சிலை அமைந்த
பூங்காவின் மத்தியிலே நூல் நிலையம் தானொன்று நிமிர்ந்தபடி நிற்கிறதே !
பல்வேறு வகைப்பட்ட பல்லாயிரம் நூல்கள் அங்கு பரந்தபடி இருக்கிறது.
அறிவுப் பசி மிக்க மாணவர் பலருக்கு நல்ல பணியாற்றி வருகிறது
இளசு முதல் பழசு வரை படித்திடப் பத்திரிகை
சஞ்சிகைகள் பலவும் அங்கு இருக்கிறது
ஆளுமை மிக்க நல்ல தையலாள் ஒருவர் இங்கே
நூலகராய்ப் பணியாற்றி வருகிறார் பல நாளாய்.

கல்வியொடு கலைகள் பல வாழுகின்ற செல்வம் நிறை வீடம்மா
கலை வளர்க்கும் கழகங்கள் பலவுண்டு என்னூரில் தானம்மா
கலையுடனே விளையாட்டும் வினைத்திறன் மிகு நல்ல சேவைகளும்
செய்கின்ற செயல் வீரர் பலர் உள்ளர் எந்தனூர் கழகமதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்விதனைப் போதித்திட கல்விக் கூடங்கள் பலவுண்டு
திணைக்களங்கள் யாவும் உண்டு அரச, தனி வங்கிகள் பலவுமுண்டு
காவற் துறை முதலான நீதிமன்றம் தானுடனே
நிர்வாக அலுவலகம் எல்லாமே இங்குண்டு
சுகாதாரச் சேவையாற்றப் போதுமான வைத்தியசாலையும் இங்குண்டு

கடைத் தெருச் சாலைகளும் வியாபார நிறுவனத் தொகுதிகளும்
அமைந்த நல்ல நகரம் அன்றோ !
என்னினிய தாய்மண்ணை பூசித்து வணங்குகிறேன்.

வணக்கம்

என் தமிழ் வாழ்க !
என் மொழி வாழ்க !
என் இனம் வாழ்க !

அருள் செல்லமாணிக்கம்
களுவாஞ்சிகுடி

**" புதிதாக ஒரு நூலகம் திறக்கப்படும் போது நாட்டில் ஒரு சிறைச்சாலை மூடப்படும்."**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கவிதை (அம்மா)

அம்மா எனும் அர்த்தத்தில் ஆயிரம் கதை இருக்கும்
'அ' எனும் முதல் எழுத்தில் அவனது பொருள் இருக்கும்
அன்பென்னும் அர்த்தத்தை அவள் நிழல் சுமந்திருக்கும்
ஆஹாஹா இவள் புகழ் உலகமே அறிந்திருக்கும்

'அ' எனும் முதலெழுத்தை அரிசி பரப்பிஎழுதியே
பேனா எனும் எழுகோலை பிடிக்கச் சொல்ல
வேணாண்ணு சொல்லாமல் பிடித்ததனால்
இன்று நான் வெற்றி நடை போட்டு நடந்து விட்டேன்.

வே.கௌதமன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தொனிப்பொருள்
## "இனங்களுக்கிடையில் புரிந்துணர்வினை ஏற்படுத்தல்.

உள்ளம் மலர்ந்திடும் உயர்வு கிடைத்திடும்
கள்ளம் கபடமில் வாழ்வினிலே
எள்ளி நகையாடும் குள்ள மனங்கொண்ட
பிள்ளைத் தன வாழ்வை மாற்றிடுவோம்

எங்கள் தாய் நாட்டிலே எங்களுக்கேயிடம்
எங்கேயிருக்கு தென்றெண்ணும் வகை
மாங்காவுலகினில் எண்ணாத எண்ணாங்கள்
தங்கமே வேண்டுமோ என்ன செய்வோம்

இந்தவுலகினில் பிறந்தவர் யாவரும்
ஒரு தாய் மக்களென்ற நல்ல வெண்ணம்
எந்தப் பிரிவுக்கு வருமென்று சொல்லவே
சிந்தை கலங்குவது மானிடனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனிதனாய்ப் பிறந்தவன் புத்தரின் மனம் போலப்
புனிதமாம் வேறேது எண்ணிப்பாரு
கனிவான வார்த்தையோ இனிய வெண்ணங்களோ
இனிவருமோ எங்கள் நாட்டினிலே

சதிரத்தைச் சாறாகப்பிழிந்தெடுத்த செல்வம்
உதிரத்தான் உலகெங்கும் களைப்பைப் போக்க
மதிகொண்ட சோதரர்க் கேது நன்றியிங்கே
சதியின்றி உயர்வுக்கு உதவி செய்வோம்.

வந்த வழிபோலப் போவது நிச்சயம்
எந்த மனிதரும் எண்ணுவரோ
சொந்த நாட்டில்லல்ல எந்தவுலகிலும்
சுகமாக வாழந் தொன்றாய்ப் போயிடுவோம்.

செல்வி :- லோ.வினுத்தா
மட்/ பட்/ விநாயகர் வித்தியாலயம்.
களுவாஞ்சிகுடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இயல் - ஈ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நாட்டார் பாடல்களில் பேச்சுவழக்கு மண் வளச்சொற்களின் இனிமை

நாட்டார் பாடல்கள் கள்ளங்கபடமற்ற வெள்ளை உள்ளங்களின் உணர்ச்சி வெளிப்பாடாகும். எளிமையும், இனிமையும் இசையும். உணர்ச்சியும், உண்மையும் ஒருங்கிணைந்திருக்கும் இப்பாடல்கள் படிப்பறிவில்லா ஏழைக்கிராமத்து மக்களால் உள்ளத்தில் உள்ளதை உள்ளவாறே அவர்கள் வாழும் கிராமத்தின் மண்வளச் சொற்களைக் கொண்டு பாடப்பட்ட இலக்கியங்களாகும்.

நாட்டார் பாடல்கள் சிலவற்றிலுள்ள சொல் இன்பத்தை நுகர்வோம்.

ஆதம்காக்கா ஆதம்காக்கா
அவரைக் கண்டால் சொல்லிடுங்க
பூவரசங் கன்னி யொன்று
பூமலர்ந்து போச்சுதெண்டு....!

இடக்கரடக்கல் :

- பூவரசங்கன்னி - தனது மகள்
- பூமலர்தல் - வயதுக்கு வரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறுவடை காலத்தில் அருவிவெட்டச்சென்ற தன் கணவன் வீடு திரும்ப நாளாகும். தனது பெண் பிள்ளை வயதுக்கு வந்த செய்தியை ஆதம்லெப்பை என்கின்ற முஸ்லிம் ஒருவரிடம் பின்வருமாறு சொல்லி அனுப்புகிறாள். அன்னிய மனிதரான ஆதம்லெப்பையிடம் தனது மகள் பெரியவளான செய்தியை சொல்வதில் அவளுக்கு பண்பாடு தடுக்கிறது. எப்படியோ சேதி சொல்ல வேண்டியநிர்ப்பந்தம். எனவே "பூமலர்ந்துவிட்டது" என சொல்லி அனுப்புகிறாள். இங்கு பூவரசங்கன்னி மஞ்சல் நிறமுடையது இது மாங்களகரமான நிறமாக தமிழர்கள் ஏற்றக்கொள்வர். அதிலும் பூப்படைந்த இல்லங்களில் மஞ்சள் அதிகம் பாவிக்கப்படும் மஞ்சள் கரைத்து வீடுகளில் தெளித்தும் உடல்களில் பூசியும் தொற்று நீக்கியாகவும் பாவிப்பார்கள் தமிழர்கள். அந்தவகையில் பூவரசங்கன்னி பூமலர்ந்தது எனும் சொற்கள் சிறப்பானதாகக் காணப்படுகிறது.

ஆலையிலே சோலையில
ஆலம்பாடிய சந்தையிலே
கிட்டிப்புள்ளும் பம்பரமும்
கிறுக்கியடிக்கப் பாலாறு பாலாறு பாலாறு...

எனும் விளையாட்டுப் பாடலில் கிறுக்கி என்ற சொல் திரும்பி என்ற பொருளில் அதாவது திரும்புதல் என்ற தொழிற்பெயரை குறித்து வருவதை நாம் காணலாம். மட்டக்களப்புக்கே உரித்தான சிறப்பான மண்வளச்சொல் கிறுகி ஆகும். இது போலவே மறுகா புறகு என்னும் சொற்களையும் குறிப்பிடலாம்.

தனது மச்சானின் அழகையும் ஆளுமையையும் பற்றி தலைவியின் கூற்றாக அமைந்த ஒரு நாட்டார் பாடலை எடுத்து நோக்கும் போது

வெள்ள வெளுட்டும்
விரல் நிறைய மோதிரமும்
எங்கும் பொழு பொழுப்பு
எங்க மச்சான் வாற செப்பம்...!

தனது மச்சாள் வரும் போதெல்லாம் அழகாகவும் மினு மினுப்பாகவும் (பொழுபொழுப்பு) வாறதாக தலைவி கூறுகிறாள் செப்பம் எனும் பேச்சுவழக்கு சொல்லானது அவன் வருகின்ற அழகைக் குறிக்கின்றது.
மற்றுமொரு காதற்பாடலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சீனமயில் பட்டே
சின்ன நிலா வானமுதே
ஆழிப்பொன் முத்தே - ஒன்ன
அயத்திரிக்க கூடுதில்ல

தலைவி கூற்றாக அமைந்த மேற்படி நாட்டார் பாடலில் அயத்திரிக்க கூடுதில்ல என்ற பாடல் வரிகள் அவனை மறந்திருக்க முடியவில்லை என்பதைக் கூறும் மண்வளச் சொல்லாகும்.

தலைவனும் தலைவியும் சந்தித்து என தலைவன் கேட்க தலைவி கூற்றாக பின்வரும் நாட்டார் பாடல் அமைந்துள்ளது.

"சந்தன மரத்தை மச்சான்
சந்திக்க வேண்டுமென்றால்
பூவலடிக்கு மச்சான்
பொழுதுபட வந்துபோங்க..."

எனப் பாடிக் கொண்ட ஓடுகிறாள். இங்கே பூவல் என்பது மண்ணைத் தோண்டி உருவாக்கி கிணறைக் குறிக்கின்றது. பூவலடி என்பது கிணற்றடி ஆகும். பூவல் என்கிற பழங்கால பேச்சு வழக்கு மண்வளச்சொல் நாட்டார் பாடலில் இடம் பெற்றுள்ளதைக் காணலாம்.

கணவன் மனைவி ஊடற்பாடல் ஒன்றிலே

திறக்க லொண்ணா என் கதவு
திண்ணையில் வேணுமெண்டா
இறப்பால பாய் தருவேன்
என்னவாச்சும் செய்திருங்க...!

எனும் பாடலில் இறப்பால எனும் சொல் கதவு வளையின் இறவானத்துக்கு கீழால் பாயைத் தருவேன் என்று கூறுவதுபோல் உள்ளது. இதுவும் மட்டக்களப்பு தமிழர்களின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த ஒரு பேச்சுவழக்கு சொல் ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அம்மியடியிலே
அருகுவளைத் தொங்கலிலே
துறப்புச் சொருகிருக்கு
துறந்து வந்தாச் சம்மதந்தான்

துறந்து வந்தாச் சம்மதந்தான் எனும் பாடலில் தொங்கலில் எனும் சொல் அந்தத்தில் இறுதியில் முடிவிடத்தில் எனும் பொருள்பட வருவதை நாம் காணலாம்.

மேலும் காதலியை எவ்வாறு சந்திக்க வரலாம் என காதலன் சிந்திக்கும் வேளை காதலியே வழி சொல்வதாக அமைந்த பாடலில்

வெற்றிலையைக் கைப்பிடித்து
வெறும் புளகை வாயிலிட்டு
சுண்ணாம்பு இல்லையெண்டு

சுத்தி வந்தால் கண்டிடலாம் என்பதில் "புளகு" எனும் சொல்லானது பாக்குத்துண்டினைக் குறித்து நிற்பதைக் காணலாம்.

மருமகன் முறையான ஒருவன் தனது மாமியிடம் அவரின் மகளைத் திருமணம் செய்ய சம்மதம் கேட்கும் ஒரு நாட்டார் பாடலை நோக்கும் போது

மாடு கன்று இல்லையென்றோ
மணி சகடை இல்லையென்றோ
நான் அழகு இல்லையென்றோ - உங்கள்
நாகு கன்றை இல்லையென்றீர்...

எனும் பாடலில் மணி சகடை எனும் பேச்சுவழக்குச் சொல்லானது உள்ளே குலுங்கக் கூடிய வகையில் அமைந்த சகடை போன்ற ஆபரணங்களை குறிப்பதால் மணி சகடை என்பது நகைநட்டைக் குறிப்பதுடன் நாகு கன்று என்பது பெண்ணை (மகளைக்) குறிப்பதையும் காணலாம்.

பிரிவுத்துறரை வெளிப்படுத்தும் மற்றுமோர் நாட்டார் பாடலினை நாம் எடுத்து நோக்கும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வெள்ளி விடிவெள்ளி
வெள்ளாப்பில் மறையும் மட்டும்
சொன்ன கதையெல்லாம்
சொர்ப்பனமாய் மறந்தாரோ?

எனும் பாடலில் வெள்ளாப்பு எனும் பேச்சு வழக்கு சொல் அதிகாலை வேளை என்பதைக் குறித்து நிற்பதைக் காணலாம்.

காதலன் தன்னை விட்டு பிரிந்து சென்றதை காதலி இவ்வாறு புலம்புகின்றாள்.

குஞ்சிப் பயிரிலே
கூச்சம் தெளிவிச்ச மச்சான்
கதிரு குடலையிலே
கைபறிய விட்டதென்ன?

எனும் பாடலில் கைபறிய எனும் சொல் கைநழுவிச்செல்ல எனும் கருத்திலும் கதிரு குடலை என்பது தான் பூப்படைந்த பருவம் என்பதையும் இடக்கரடக்கலாக சுட்டி நிற்பதையும் காணலாம்.

நாட்டார் பாடல்களில் அப்பாடல்கள் எந்தக் கிராமத்து மக்களால் பாடப்படுகின்றனவோ அக்கிராம வழக்கிலுள்ள மண்வளச் சொற்களைத் தவிர புரியாத சொற்கள் எதுவுமின்றியே இப்பாடல்கள் பாடப்பட்டுள்ளன. இப்பாடல்கள் மயக்கும் இன்பத்தை அளிக்கும் தன்மை வாய்ந்தவைகளாகும்

**உசாத்துணை நூல்கள்**

♦ சிறிஸ்கந்தராசா. சு. (2002) "மனைதக் கவரும் மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள்" மணிமேகலைப் பிரசுரம். சென்னை -17

முத்து மீரான். எஸ் (1997) "கிழக்கிலங்கை முஸ்லீம்களின் நாட்டார் பாடல்கள்" மீரா உம்மா வெளியீட்டகம் நிந்தவூர். இலங்கை.

தொகுப்பு : ஆ. கலாபராஜன் (ஆசிரியர்)
மட்/பட்டிருப்பு ம.ம.வி
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சத்தியவான் சாவித்திரி

**நாட்டுக்கூத்து நேரம் 2.00 மணி**

**சபை விருத்தம்**

மண்டலம் மதிக்கவரு திண்டறல் அசுபபதி மத்திராபுரி மன்னன் மகளாம் குண்டலம் விளாப்கவரு கொற்றவன் குலக்கொடி கோதையவள் சாவித்திரி கொண்டல் வியோடிவரு வண்டு செறி சோலைசூழ் வனமதில் விளையாடிவரவே அண்டர் தொழுதம்பிரான் அடியினைகள் போற்றியே அருங்கானக் தன்னில் புகுந்தனளே

**காட்சி - 1**

"சாவித்திரி வனத்தில் விளையாடி வருகின்ற பொழுது புலி யொன்றினால் விரட்டப்படுகின்றாள் அவ்வேளை சாளுவநாட்டு இளவரசன் சத்தியவான் அவளைக் காப்பாற்றி காதல் கொள்ளுகிறான்."

முதலில் சாவித்திரி வரவு தாளக்கட்டுமுடிய.

**சாவித்திரி -**

வாசமலர்ச் சோலையிலே வசந்தகாலத் தென்றல் வீச நேசமுடன் ஆடிப்பாடி நெடுந்தூரம் நடந்து வந்தேன்.

அருவி நீர் ஓடையிலே ஆயிலையாள் குழல் விரித்து மருவி நீர் ஆடுகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மாரன்கனை விட்டனரே.

ஆசை மிகுதியாலே அலைந்து நான் நிற்கையிலே ஓசை போட்டு ஓர் புலிதான் ஓடிவந்து துரத்தியதே.

மெய் சிலித்து வியர்வெழும்பி மேனியெல்லாம் நடுநடுங்க கைகுவித்துக் கடவுளை நான் கண்ணீர் விட்டு அழுது விட

புலியுடுனே போர் புரிய புறப்பட்டு வந்த காளை வலியவர்க்கு நன்றி கூறி வாழ்த்துக் கூறஇங்கு வந்தேன்.

(இவ்வேலை புலியுடன் போர்புரிந்த சத்தியவான் களைப்புற்று ஒரு மரத்தடியில் சாய்ந்து படுக்கிறான்)

**வசனம்**

**வித்திரி**

கேளும் மகாவீரனே! பூஞ்சோலையில் நான் விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது, புவியொன்றினால் விரட்டப்பட்டேன். தக்கதோர் சமயத்தில் என்னை வந்து காப்பாற்றிவிட்டீர்கள். உங்களை யார் எவர் என்றறிந்து நன்றி கூறவேண்டும். எழுந்து இருப்பீர்களாக.

**விருத்தம்**

**பெவான்**

சாளுவநாட்டு வேந்தன் மைந்தன் சத்தியவான் எந்தன் பேரே ஆளுவதில்லை இப்போ நாடு அன்னியன் ஆட்சி கொண்டான் தாளுவதில்லையென்று எந்தன் தந்தை தாய் கண்ணிழந்தார் மாளுவதில்லை யென்று நாங்கள் வனத்திலே வாழுகின்றோம்.

**வசனம்**

கேளும் பெண்ணே! சாளுவநாட்டு வேந்தன் தியூமத் சேனனின் மைந்தன் சத்தியவான் எந்தன் பெயராகும்.அன்னிய நாட்டான் எங்கள் நாட்டை அபகரித்து தந்தை தாயாரின் கண்களைப் பறித்துவிட்டான் மானத்தோடு வாழவேண்டும் என்பதற்காக வனத்திலே வாழ்ந்து வருகின்றேம் எனது விபரங்கள் இதுவேயாகும் உமது விபரத்தைச் சொல்லுவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**விருத்தம்**

**வித்திரி**

அசுவநாட்டு அதிபதியின் அன்பு மகன் சாவித்திரி பசுபதியார் எந்தந்தையார் பாராளும் திறமை பெற்றேன் வேத வொலி யோங்கி நிற்கும் விளைவும் மிகப் பெருகும். அங்கே நாத வொலி யோங்கி நிற்கும் நாட்டரசி நானறிவாய்!

**வசனம்**

கேளும் மகாவீரனே சகல வளங்களும் பெற்ற மத்திராபுரி மன்னன் அசுபதியின் மகன் சாவித்திரி என்பெயராகும். நான் பூங்காவில் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது புலியொன்று என்னைக் கொல்ல வந்தது அந்த ஆபத்தில் இருந்து காப்பாற்றிய உங்களுக்கு நன்றி கூறுகின்றேன் அறிந்து கொள்வீராக

**பாட்டு**

**சத்தியவான்**

தையலே சாவித்திரி உந்தன் மேலே தணியாத தாகமாச்சேமையல் மிகவாகுதே எந்தன் உள்ளம் மயங்குதே உன் அழகில்!

**சாவித்திரி**

மாடமாளிகயிலேதான் மங்கையாக வாழ்ந்து நான் வந்த போது ஆடவர் ஒருவரையும் இது வரையில் அண்ணாந்து பார்த்ததில்லை

**சத்தியவான்**

கன்னிப்பெண் எவரையும் நான் காரிகையே கண் கொண்டு பார்த்ததில்லை உன்னிடம் ஆசை கொண்டேன் உத்தமியே ஓடிவா என் அருகில்

**சாவித்திரி**

ஆண்டவன் எழுத்திதுவோ அடிதொழுதேன் அன்புள்ள மன்னவரே! தாண்டி வழியறியாத் தையலரின் சாதகம் இப்படியோ!

**சத்தியவான்**

ஏழை எளியவன் நான் ஏந்திழையே இன்பமுடன் இணைந்தோம் வேளை வருகுமம்மா விரைவினில் திருமணம் செய்து கொள்வோம்

**சாவித்திரி**

ஏழை எளியவன்தான் எந்தன் உயிர் கார்த்து இறையவனே! கோழைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கணவன் அல்ல என்தலைவன் கொற்றவன் இவ்வுலகில்

**விருத்தம்**

**சத்தியவான்**

மனமது ஒன்றுபட்டோம் மாசிலாக் காதலாலே சினமது வாழ்வில் இல்லா சிரித்துநாம் வாழ்வோம் பெண்ணே வனமதில் கண்டமானே வள்ளலார் பெற்ற கண்ணே தனமது செறிந்த நாட்டுத் தையலே ஏகுவாயே

**வசனம்**

கேளும் பெண்ணே சாவித்திரி! நாம் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பிக் கொண்டோம். நமது உள்ளமெல்லாம் ஒன்றுபட்டு விட்டது. நமது திருமணம் வெகுவிரைவில் சிறப்பாக நடைபெறும். நீ உனது நாட்டுக்குச் செல்வாயாக.

**காட்சி 2**

**நாரதமா முனிவரவு**

**விருத்தம்**

**நாரதர்**

பிரமதேவன் மைந்தன் பிரபஞ்ச காலம் எல்லாம் உரமுடன் வாழ்ந்து வந்தோன் உலகினில் இசை பெருக்கி பரமலோகமெல்லாம் பழியினை மூட்டிவிட்டு நரர்பதி மத்திராபுரிக்கு நாரதன் வருகின்றனே!

**பாட்டு**

வந்தார் பாரீர் நாரதமாமுனி வருகின்றார் பாரீர்
வந்தாரே நாரதர் வண்ண வீணை மீட்டு
வகையான பாட்டொலி வானில் கிழம்பிட

பகை மூட்டி வைப்பேன் படும்பாட்டை பார்த்துரசிப்பேன்
திசை யெட்டும் செல்வேனே திக்கெட்டும் நடுங்குமே
சபை மெச்ச நடப்பேனே சாதனை புரிவேனே!

கற்புடை மாது சாவித்திரிக்குக் கலியாணம் பேச
எற்றிசையும் புகழ் ஏந்தல் அசுபதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நற்புத்தி சொல்லலே நாரதனை விட்டான்

செய்து முடிப்பேன் இல்லையென்றால் செத்து மடிவேன்
உய்யும் வழியெல்லாம் ஓதுவேன் அவளுக்கு
வையக வாழ்வினில் வளம் பெறச் செய்வேனே!

**விருத்தம்**

கங்கையால் வளங்கொழிக்கும் காசினியில் அசுவநாட்டு பங்கையச் செல்வியான பத்தினி சாவித்திரியே மங்கையர் திலகமானே மாங்கல்யம் நீடுவாழ்க நங்கையே வாழ்த்துகின்றேன் நாரதன் வாக்கினாலே!

**வசனம்**

கேளும் பெண்ணே சாவித்திரி! சகல செல்வங்களும் பெற்று நீடுழிகாலம் மாங்கல்யத்தோடு வாழ்வாயாக.

**பாட்டு**

சாவித்திரி - நாராயணன் பாதங்கள் போற்றிடும் நால்வேதம் ஓதிடும் நற்குருவே
நாரதமாமுனியே இங்கு நாடிவந்தசெய்தி ஏதுரைப்பீர்!

நாரதர் - அன்னை தந்தை சொற்படி அன்னமே அடியேனும் இங்கு நான் தூதுவனால்
உன்னை மணவாழ்க்கையிற் சேர்த்திட உந்தன் மனநிலை அறிய வத்தேன்.!

சாவித்திரி - எந்தன் உள்ளத்தைப்பறிகொடுத்தேன் குருவே ஏந்தல் ஒருவரின் உள்ளத்திற்கு
உந்தன் வாக்குப்பலிக்க வேண்டும் குருவே உலகத்தில் மாங்கல்யம் நீடுழிவாழ.

நாரதர் - ஆசை காட்டிமோசங்கள் செய்திட்ட ஆணழகன் யாரோசொல் குழந்தைய்
பாசமுள்ள தாய்தந்தை ஏங்கிட பாதை வழிமாறிச் சென்றனையோ?

சாவித்திரி - கானில் விளையாடிவரும் போது காட்டுப்புலியொன்று
எனைவிரட்ட வானில் வருதேவதூதன் போல வந்துஒருவீரன் காத்து விட்டான்.
சாளுவநாட்டுவேந்தன் மகன் சத்தியவான் அவர்பெயரதாகும்
வாழுவேன் நான் அவருடனே சுவாமி வாழ்த்துங்கள் இப்போதே வாழ்க என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாரதர் - சத்தியவான் சாதகம் அறிவேனே சம்சார வாழ்விலே ஒரு வருஷம் பத்-தினி சாவித்திரி அவன்பாருலகில் வாழ்வான் வேண்டாம் கண்ணே!

சாவித்திரி - மாங்கல்யம் நீடுவாழ்க என்ற மாமுனியே உங்கள் வாக்குப்பொய்யோ தாங்கள் வாக்குத்தந்தாலே போதுமே தரணியில் நீடுழி வாழ்ந்திருப்போம்!

நாதரர்- சாவித்திரி தவக் கொழுந்தேயம்மா சத்தியவானை நீ மணந்து கொண்டு காயத்திரி பூசைசெய்து உன்தன்கணவன் உயிர்தனைக்காத்துக்கொள்வாய்!

**விருத்தம்**

திருமணம்செய்து வாழ்வில் சீருடன் சிறப்புபெற்று ஒரு மனத்தோடு உந்தன் உத்தமன் அடி பணிந்து பெருமனத்தோடு மாமன்மாமியை பேணியே காப்பாயம்மா குருமொழி வாக்குத்தந்தேன் கோதையே வருகின்றேனே!

**வசனம்**

கேளும் பெண்ணே சாவித்திரி! இந்தத் திருமணந்தைத் தாய் தந்தையர் விரும்பாவிட்டாலும் பின்னொரு காலத்தில் திருப்தியடைவார்கள். நீர் விரும்பியபடி சத்தியவானை மணந்து கொண்டு சகல செல்வங்களும் பெற்று வாழ்வாயாக "தீர்க்கசுமங்கலிசுபா" சென்று வருகின்றேன் பெண்ணே!

**காட்சி - 3**

**இயமதர்மராஜன் வரவு**

**விருத்தம்**

இயமன் - அட்டதிக்குறை அரசருள் ஒருவனும் ஆருயிர்தனைக் கவர்வோன் விட்டவர் பட்டவர் தொட்டவர் வீணர்களாம் பல வீரருடன் முட்டியே மோதியே விழிகள் பிதுக்கிடும் முடிச்சுடைபாசக்கயிறுடனே இட்டமுடன் எழில் எருமைக்-கடா மீதில் இயமதர்ம ராஜனும் வருகின்றனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**வரவுத் தாளப் பாடல்**

இராஜாதி திராஜன் யமதர்மராஜன்
இராஜாதி திராஜன் யமதர்மராஜன்
இராஜாதி திராஜன் யமதர்மராஜன்

ராஜதி ராஜர் உடலைப் பிழப்பேன்
ராஜதி ராஜர் உடலைப் பிழப்பேன்
ராஜதி ராஜர் உடலைப் பிழப்பேன்

சேனாதி சேனைப் படையைத் துளைப்பேன்
சேனாதி சேனைப் படையைத் துளைப்பேன்
சேனாதி சேனைப் படையைத் துளைப்பேன்

ஜெகவீரர் என்னைப் போற்றிப்பணிய
ஜெகவீரர் என்னைப் போற்றிப்பணிய
ஜெகவீரர் என்னைப் போற்றிப்பணிய

ஆகாய வீதி அண்டம் கிழிப்பேன்
ஆகாய வீதி அண்டம் கிழிப்பேன்
ஆகாய வீதி அண்டம் கிழிப்பேன்

கடலைக் கலக்கி கடுமிடி கொடுப்பேன்
கடலைக் கலக்கி கடுமிடி கொடுப்பேன்
கடலைக் கலக்கி கடுமிடி கொடுப்பேன்

எடு எடு பாசம் எதிரேறுபாசம்
எடு எடு பாசம் எதிரேறுபாசம்
விடு விடு பாசக் கயிறெடு வந்தேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**வசனம்**

ஆகா பூலோகத்திலே அனியாயங்கள் அட்டூழியங்கள் எல்லாம் மிகவும் மலிந்து விட்டன. துஸ்டர்களை அழித்து சிஸ்ரபரிபாலனம் செய்வதற்காக இரவிலோ, பகலிலோ, ஏமத்திலோ, சாமத்திலோ, எந்த இடத்திலேயோ எந்த வடிவங்களெல்லாம் எடுக்க முடியுமோ அந்த அந்த வடிவங்களெல்லாம் எடுத்து அழித்துவிடுவேன். ஆமாம் இன்று மத்திராபுரி இளவரசி கற்பின் செல்வி சாவித்திரியின் கணவன் சந்திய வானின் உயிரைக் கொண்டு செல்ல சாதாரணவேக்ஷத்தில் வந்திருக்கிறேன். அவ்விடம் செல்வோமாக.

**காட்சி - 4**

**சத்தியவான் சாவித்திரி**

**விருத்தம்**

சத்தியவான் - வானகம் போற்றிவாழ்த்த வாழ் விலே ஒளிகொடுத்து
மானமாய் வாழ்ந்து வந்த மடக் கொடியாளேகேளாய்
கானகத்தில் மணம் முடித்து கழிந்தது ஒருவருடம்
கானகம் சென்று நானும் கனிமலர் கொய்து வாறேன்!

**வசனம்**

கேளும் பெண்ணே சாவித்திரி! நான் திருமணம் செய்து ஒரு வருடமாகப் போகின்றது. வனத்திலே எளிய வாழ்க்கையை இன் முகத்தோடு கழித்து வந்தாய். உம்மை நான் போற்றுகின்றேன். நான் இப்போது வனத்துக்குச் சென்று காய், கனி, கிழங்கு வகைகளெல்லாம் எடுத்துக் கொண்டு வருகின்றேன்.எனக்கு விடை தந்து அனுப்புவாயாக.

**பாட்டு**

சாவித்திரி நாடுகார்க்கும் திறமையுற்ற நாயகரே நானும் வாறேன்
காடு சென்று கனிபறிக்க காரிகையும் உடன் வருவேன்
சத்தியவான் பஞ்சு மலர்ப் பாதமதில் பருக்கைகல் முள் தைக்குமடி
கெஞ்சிய வேண்டாம் கண்ணே கெதியில் நானும் வந்திடுவேன்
சாவித்திரி தன்னந்தனி காட்டுவழி தலைவா நீயும் செல்லுவதோ
சின்னஞ்சிறு பிஞ்சு மனம் செத்துவாடிப் போகுமையோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சத்தியவான் கட்டழகுக் காரிகையே காட்டில் யானை, புலி கரடி
துட்டர் கள்ளர் தொல்லை உண்டு தோகையே நீ வந்திடாதே!

சாவித்திரி நாயகனின் இன்பம் துன்பம் நாயகிக்கும் பங்குதானே
நாயகரே நானும் வாறேன் நாயகியை அழைத்துச் செல்வீர்!

**விருத்தம்**

சத்தியவான் - கண்ணை இமை காப்பது போல் கணவன் உயிர் காக்கும் எந்தன் கற்பரசியே தண்ணீரும் இல்லாதவனம் தாண்டியே செல்ல வேண்டும் கண்ணீரைச் சொரிந்திடாதே காட்டெருமைமாடுதயானை கண்டு என்னியடி வைத்து வாராய் எந்தன் பின்னே ஏந்திளையே ஏகுவோமே!

**வசனம்**

கேளும் பெண்ணேஅ சாவித்திரி! உமது ஆசையை நிறைவேற்ற வேண்டியது எனது கடமையாகும். ஆதலால் என்பின்னே வனத்துக்குச் செல்ல வருவாயாக.

**காட்சி - 5**

**சத்தியவான், சாவித்திரி, யமதர்மராஜன்**

சத்தியவான், சாவித்திரி, யமதர்மராஜன், கேளும் பெண்ணே சாவித்திரி! வனத்துக்கு வந்து விட்டோம் வனத்தின் அழகை ரசிப்பாயாக.

**பாட்டு**

சத்தியவான்

நாவல் புளி வீரை சூரை விழாமரம் நன்றாகக் காய்ந்திருக்கும்
காவல் வனவிலங்கு காட்டு மரங்களுக்குக் காரிகையே அறிவாய்!

முல்லை இருவாட்சி பாதிரி செண்பகம் முத்துப்போல் பூத்திருக்கு
தொல்லைகள் இல்லாமல் சுதந்திரமாய் இங்கு சொலிச்சிக்கிடப்பதைப்பார்

வள்ளிக்கிழங் ஒட்டி கவலை பறங்கியெல்லா வகையாக வளர்ந்திருக்கு
கொள்ளியின மெல்லாம் கொண்டு போக வேண்டும் கோதையே நீ அறிவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சாவித்திரி

கனி பறிக்கும் போது கால்கள் இடறுவதன் காரணம் என்ன சுவாமி

தனிமையாய் நிற்கவேண்டாம் சாய்ந்திடும் என்மடியில் தலைவரே இங்கு வாரும்

**வேறுதரு**

சத்தியவான - தலையெல்லாம் சுற்று தையோ - இந்தத்
தரணியெல்லாம் சுற்றி வருகுதையோ!

சாவித்திரி - பரா சக்தித் தாயாரே - எந்தன்
பத்தாவை இப்போது பாதுகாப்பாய்!

சத்தியவான் - வியர்வை மிகப் பொங்குதையோ - விழிப்
பார்வையெல்லாம் கெட்டுப் போகுதை யோ!

சாவித்திரி - உமாதேவித்தாயாரே - எந்தன்
உத்தமரை இப்போது காத்திடுவாய்!

சத்தியவான் - அறிவு கெட்டு வருகுதையோ - இந்த
அந்தரக் கானிலே என்ன செய்வேன்!

சாவித்திரி - காயத்திரித் தேவியாரே - எந்தன்
கணவரை இப்போது காத்திடுவாய்!

(இவ்வேளை யமதர்மராஜன் எதிரேதோன்றுகின்றான்)

**விருத்தம்**

**சாவித்திரி**

எருமை வாகனத்தில் ஏறி எந்தனின் முன்னால் இப்போ
பெருமை யாய் வந்துநிற்கும் பெரியவர் நீர்தான் யாரோ?
கருமை நிற மேனியனே கைதனில் கயிறெலாம் சுற்றிக்கொண்டு
அருமை யாய் வந்து நிற்கும் ஐயனே நீர்தான் யாரோ?

**வசனம்**

கேளும் பெரியவரே! எருமைக் கடா வாகனத்தில் ஏறி கையிலே கயிறுடன் வந்திருக்கும் நீங்கள் யார் என்பதைச் சொல்லுவீரா

**விருத்தம்**

சத்தியவான் - கற்புடை சாவித்திரியே காவனார் தூதுவரை விட்டு விட்டு
கற்புடையாளாகையினால் கரிகாலன் நானே வந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கற்புடையாளாகையினால் கண்ணினால் கண்டாய்
இப்போ கற்புடையாளே உந்தன் கணவன் உயிர்
கவரவந்தேன்!

**வசனம்**

கேளும் பெண்ணே சாவித்திரி! உனது கணவன் சத்தியவானின் ஆயள் இன்றுடன் முடிந்து விட்டது யம தூது வரை வர விடாது தடுத்து யமனாகிய நானே நேரில் வந்தேன். நீ கற்புடையவள் ஆகையினால் நான் உன் கண்ணுக்குத் தெரிசனமானேன். இதை அறிந்து கொள்வாயாக.

(இயமன் சத்தியவான் மீது பாசக்கயிற்றை எறிந்து உயிரை எடுப்பதைக் கண்ட சாவித்திரி அழுது பின் தொடருகிறாள்)

**பாட்டு**

சாவித்திரி - மறலியூர் மன்னவனே மாங்கல்யப்பிச்சையைத் தாராய் - என்னைக்
குறளிப்பேன் ஆக்கிவிட்டு கொடு சூரி ஆக்கினாயே தேவா!

சத்தியவான் - கணக்குகள் முடிந்தபின் கரிகாலன் விடுவேனே பெண்ணே -
நீயும் பிணக்குகள் பேசி என்மே பெரும்பழி சொல்லாதே சாவித்திரி.

சாவித்திரி - அனலில் இடுமெழுகு புனலில் இடு உடல் போல் ஆனேன் - நானும்
கனலில் இடு மலர் போல் நிலைகுல்ய லானேன்!

யமன் - மானைப்பழித்த விழி தேனைப்பழித்த மொழியாளே - இங்கே
யானை வாய்க் கரும்பும் யமன் கை உயிரும்தான் வருமோ?

சாவித்திரி - காலக் கடவுளே கைம் பெண்ணாய்க் கானகத்தில் ஐயா- நானும்
கோலம் அழிந்தேனே கொற்ற வரைத்தாராய் ஐயா!

யமன் - மாங் கல்ய வரத்தை விட்டு மாற்றுவமேதும் கேளாய் - நீயும்
ஏங்க வேண்டாம் பெண்னே இப்போதே தந்திடுவேன் நானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**வேறுதரு**

சாவித்திரி - கண்ணிழந்தார் மாமன் மாமியாரும் கவலைக் கடலில் வீழ்ந்து
எண்ணி அழுகின்றாரே யமதேவா இப்போதே பார்வை தாராய்!

யமன் - தந்தேனம் மா பார்வை சாவித்திரியே தயங்காமல் செல்லுமடி
வந்தவேலை முடித்தேன் சாவித்திரியே வானகம் செல்கின்றேனே!

சாவித்திரி - தட்டிக்கழிக்காதையா கரிகாலா தலைவனைத் தந்து செல்வாய்
வெட்டுக் கழித்து எந்தன் விழிகலங்க வேடிக்கை பார்பதேனே!

யமன் - தாறுமாறாய்ப் பேசி என்னை நீயும் சஞ்சலப் படுத்தாதடி
வேறு வரங்களேதும் வேண்டுமெனில் விரைவினில் தந்திடுவேன்!

சாவித்திரி - நாடுநகர் இழந்து மாமன் மாமி நடுக்காட்டில் வாழுகின்றார்
நாடுநகர் கிடைக்கக் கடற்றுவனே நல்லாசி நீ அருள்வாய்!

யமன் - சாருவ நாட்டரசு தையலரே தந்தேனே இப்பொழுதே
ஆளுவார் பல்லாண்டு அடியேனும் ஆகாயம் செல்கின்றேனே!

சாவித்திரி - வாண்டு ஒருவருடம் செல்லவில்லை வனத்திலே என்னை விட்டு
மாண்டு போன எந்தன் மன்னவரை மறலியூர் மன்னதாரீர்!

யமன் - பித்துப்பிடித்ததுபோல் சாவித்திரியே பிசத்தி நீ பேசாதடி
இத்துடன் ஏகவேண்டும் ஏந்திளையே இன்னும் ஒரு வரம்கேள்!

சாவித்திரி - வெள்ளை மனது கொண்டாய் பெருமானே வேண்டினேன் உன்னையப்பா
பிள்ளை வரம் வேண்டுமே பெருமானே பேருலகாள்வதற்கு!

யமன் - உள்ளதைக் கேட்டாயடி உத்தமியே உலகத்தில் உன்போல் இல்லை
பிள்ளை வரமளித்தேன் பெய்வளையே பேருலகாழுவிரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சாவித்திரி - பத்தினியென்று சொன்ன பகவானே பத்தாவை இழந்த பெண்யான்
புத்தியாய் எந்தனற்குப் பிள்ளை பெற புருசனைத் தந்தருள்வாய்!

யமன் - மாட்டி விட்டேனம்மா உன்னுடைய மணிமொழி இரங்கலிலே
பூட்டி விட்டாயம்மா கற்பினைலே புருசனைத் தந்தேனிப்போ!

**விருத்தம்**

உத்தமன் ஆவி தந்தேன் உலகினில் ஆட்சி தந்தேன்
உத்தம மாமன் மாமி ஒளியையும் தந்தேனிப்போ
உத்தம தந்தை தாயார் உறவினில் பலமும் தந்தேன்
உந்தம பிள்ளை பெற்று உலகினில் நீடு வாழ்வீர்.

**வசனம்**

கேளும் பெண்ணேசாவித்திரி! உனது கற்பின் மகிமையால் எனது கடமையைச் செய்ய முடியாமல் திணறிவிட்டேன். நீர்கேட்ட வரங்கள் அனைத்தையும் அரிவரத் தந்தேன். நீர் உனது கணவன் மாமன்இமாமிஇ பெற்றேருடன் சந்தோசமாக இருந்து உத்தமமான பிள்ளைகளைப் பெற்று இன்பமாக வாழ் வீராக.

**காட்சி நிறைவு**

இராசகேசரி - அரசகேசரி.
கலாபூஷணம் இமத்திய வீதி.
களுவாஞ்சிகுடி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இயல் - உ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கையில் அவசர தேவை கருதிப் பயன்படுத்தப்படும் தொலைபேசி இலக்கங்கள்.

| No<br>இல | Short Code<br>தொ.தே. இல | Purpose<br>நோக்கம் | Responsible Organization<br>பொறுப்பான நிறுவனம் |
|---|---|---|---|
| 01 | 110 | தீயணைப்பு மற்றும் நோயாளர் காவு வண்டி அவசர உதவி | Fire Service Department |
| 02 | 112 | பொலிஸ் அவசர அழைப்பு | Police Emergency Service |
| 03 | 117 | இயற்கை அனர்த்த முகாமை மையம் | DMC (Disaster Management Centre) |
| 04 | 119 | பொலிஸ் அவசர சேவை | Srilanka Police Department |
| 05 | 1900 | வாடிக்கையாளர் தொலைத் தொடர் சேவை | TRCSL |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| | | | |
|---|---|---|---|
| 06 | 1901 | இலங்கை மின்சார சேவை | Ministry of Power & Energy |
| 07 | 1910 | மின்சார விநியோகம் தடைப்படல் அறிவித்தல். | LECO |
| 08 | 1911 | பரீட்சைத் திணைக்களம் | Department of Examinations |
| 09 | 1919 | அரசாங்கத் தகவல் நிலையம் (ஜனாதிபதியிடம் தெரிவிக்க) | ICTA |
| 10 | 1929 | சிறுவர் உதவி (சிறுவர் துஸ்பிரயோகம்) | Ministry of Child Department & Womens Empowerment |
| 11 | 1938 | மகளிர் உதவிச் சேவை | Ministry of Child Department & Womens Affairs |
| 12 | 1954 | இலஞ்ச ஊழல் தொடர்பான முறைப்பாடு | Commission to InvestiGate AlleGation of Bribery or Corruption |
| 13 | 1975 | School Net Project பாடசாலைகள் இணையச் செயற்றிட்டம் | Ministry Of Education |
| 14 | 1988 | National Operations Centre Of Edu. Ministry | Ministry Of Education |
| 15 | 1990 | Emergency Pre Hospital Care Ambulance Service ஆவசர வைத்திய முன்சேவை அழைப்பு | Ministry Of Health |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| | | | |
|---|---|---|---|
| 16 | 1992 | Complaints about Electric Fence breakdowns<br>மின்சாரத் தடைவேலி பற்றிய முறைப்பாடு | Wild Life Department |
| 17 | 1996 | Reporting Human Rights issues<br>மனித உரிமைகள் பிரச்சினைகளை அறிக்கையிடல் | Human Rights Commission of sri Lanka |

தொகுப்பு
போ.யே. மொறின் லக்சிகா
களுவாஞ்சுகுடி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## திருக்குறள் பற்றி
## "திருக்குறளில் 133 அதிகாரங்களும் 1333 குறள்களும் உள்ளது என்பது நாம் அறிந்தது."

**அறியாதது**

1) திருக்குறளில் தமிழ் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை
2) திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்கள் 42194
3) 247 எழுத்துக்களில் 37 எழுத்துக்கள்
4) திருக்குறளில் இடம் பெறும் இருமலர்கள் அனிச்சம்இகுவளை
5) திருக்குறளில் இடம் பெறும் ஒரே பழம் நெருஞ்சிப்பழம்
6) திருக்குறளில் இடம் பெறும் ஒரே விதை குன்றுமணி
7) திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயர் எழுத்து ஔ
8) திருக்குறளில் இடம் பெற்ற இரு மரங்கள் பனை மூங்கில்
9) திருக்குறளில் அதிகம் பயன்படுத்தப்பட்ட ஒரே எழுத்து னி (1705)
10) திருக்குறளில் ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துளீஇங்
11) திருக்குறளில் இடம் பெறாத எண் ஒன்பது
12) திருக்குறளில் இது வரை சம மொழிகளில் வெளிவந்தது
13) திருக்குறளில் ஆங்கிலத்தில் 40 பேர் மொழி பெயர்த்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விளையாட்டு விடயங்கள்

♦ இலங்கையில் "சம்போ" மற்றும் "கியூசு" என்னும் விளையாட்டுகள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

♦ இலங்கை தனது முதலாவது டெஸ்ற் கிரிக்கற் வெற்றியை இந்தியாவுக்கு எதிராகப 1985ம் ஆண்டு பெற்றது.

♦ ஜொகான் பீரிஸ், ஜெயந்த உந்துமல் ஆகியோர் (2016இல்) எவரெஸ்ட் மலையேறிய முதல் இலங்கையர்கள் ஆவார்கள்.

♦ 2016 ஜனவரி முதல் விளையாட்டுத்துறை அமைச்சினால் விளையாட்டு மற்றும் சீர ஆரோக்கிய மேம்படுத்தல் தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

♦ இலங்கையில் விளையாட்டுத்துறையில் அபிவிருத்தியை மேற்கொள்ள 2017 மாசி மாதத்தில் அவுஸ்ரேலியாவுடன் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது.

♦ இலங்கையில் நவீன விளையாட்டுத்திடல் ஹோமாகமவில் அமைக்கப்பட்டு வருகிறது.

♦ இலங்கைக்கு முதலாவது ஒலிம்பிக் வெள்ளிப்பதக்கம் 1948ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற போட்டியில் தடைதாண்டலுக்காக வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

♦ சர்வதேச கிரிக்கற் சபையின் அதியுயர் விருதான "வாழ்நாள் சாதனையாளர் விருது" இலங்கை சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனுக்கு வழங்கப்பட்டது.

♦ விளையாட்டுத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ளக்கூடிய பல்கலைக்கழகமாக களனிப் பல்கலைக்கழகம் விளங்குகிறது.

♦ டெஸ்ட் அந்தஸ்து பெற்ற அனைத்து நாடுகளுக்கும் எதிராக சதம் அடித்த இலங்கையின் கிரிக்கட் வீரராக குமார் சங்கக்ஹார விளங்குகிறார்.

♦ 11/04/1921 ம் ஆண்டு உலகில் முதன் முறையாக விளையாட்டுக்கள் வானொலி மூலம் வர்ணனை செய்யப்பட்டது.

♦ பார்வையற்றோருக்கான முதலாவது T20 ஆசியக்கோப்பைக் கிரிக்கற் போட்டி (2016) கொச்சியில் (இந்தியா) நடைபெற்றது.

♦ 2016 ஒகஸ்ட்டில் சர்வதேச கிரிக்கற் போட்டிகளில் இருந்து இலங்கை வீரர் டில்சான் திலகரட்ன ஓய்வு பெற்றார்

♦ "வைட்டியஸ், ஆல்டியஸ், போர்டியஸ்" என்பவை ஒலிம்பிக் வாசகங்கள் ஆகும்.

♦ சதுரங்கப் பலகையிலுள்ள சதுரங்கள் 64 ஆகும்.

♦ ICC உலக கிரிக்கற் கட்டுப்பாட்டு சபைத் தலைமையகம் டுபாயில் அமைந்துள்ளது.

♦ கிரிக்கற் தொடர்பான நூலாக விஸ்டன் விளங்குகிறது.

♦ "ஸ்நூக்கர்" விளையாட்டில் 22 பந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

♦ ஒலிம்பிக் கொடியில் 5 வளையங்களும் 5 கண்டங்களைக் குறிக்கிறது.
சிவப்பு - அமெரிக்கா, பச்சை - அவுஸ்ரேலியா, நீலம் - ஐரோப்பா, மஞ்சள் - ஆசியா, கறுப்பு - ஆபிரிக்காவாகும்.

♦ மாற்றுத்திறனாளிகளுக்காக பராஒலிம்பிக் நடாத்தப்படுகிறது.

ஜெ. அபிஸ்னா,
தரம்-07
மட்/ பட்/ விநாயகர் வித்தியாலயம்,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தமிழர் எவ்வளவு அறிவாளிகள் தெரியுமா?

ஓலைச்சுவடிகள் பற்றிய அறியாத தகவல்கள் .பாறைகளில் எழுதிவந்த தமிழர் பனையோலையைப் பயன்படுத்தினர். இம்முறை இங்கு மறைந்தாலும் தெற்கு மற்றும்தெற்காசியா நாடுகள் அனைத்திலும் இருந்தது.

**நீட்டோலை :** திருமணம் மற்றும் இறப்பு செய்திகளுக்கான ஓலை நீட்டோலை எனப்படும்.

**மூலைஓலை :** ஓலைச்செய்தியை படியெடுத்து வைத்துக் கொள்ளும் முறை அந்தக்காலத்திலேயே இருந்துள்ளது இந்த ஓலைகளை மூலைஓலை என அழைத்தனர்.

**சுருள் ஓலை :** ஓலை ஆவணங்கள் நாட்டுப்புற மகளிர் அணிந்து வந்த சுருள் வடிவமான காதோலைபோல் சுருட்டி வைத்துப் பாதுகாக்கப்பட்டன. இதை சுருள்ஓலைகள் எனப்பட்டது. இதை பெரியபுராணத்தில் "சுறுள் பெறுமடியை நீக்கி" எனும் பாடல் மூலம் அறியமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**குற்றமற்ற ஓலை :** மூளியும் பிளப்பும் இல்லாத ஓலை குற்றமற்ற ஓலை எனப்பட்டது.

**நாளோலை :** தமிழகத்திலுள்ள கோவில் செய்திகளுக்கு பயன்படுத்தப்பட்ட ஓலை நாளோலை எனப்பட்டது.

**திருமந்திர ஓலை :** அரசனது ஆணைகள் எழுதப்பட்ட ஓலை திருமந்திர ஓலை எனப்பட்டது. இதை எழுதுவதற்காக அரசவைகளில் ஓலை நாயகம் என்பவர் இருந்தார். அரசரது ஆணைதாங்கிய எனப் பொருள்படும். "கோணேலை" "சோளன்கோன்ஓலை" போன்ற சொறகள் செப்பேடுகளில் காணப்படுகின்றன.

**மணவினைஓலை :** திருமணச் செய்தியை உற்றார் உறவினருக்குத் தெரி-யப்படுத்தல் மணவினை ஓலை எனப்படும்.

**சாவேலை :** இறப்புச்செய்தியை அறிவிக்கும் ஓலை சாவேலை எனப்படும்.

தொகுப்பு,
ஜீ. மதுக்ஷிகா
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இயல் - ஊ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சுருக்கப்பட்ட தூய
## தசமப் பகுப்புத் திட்டம்
## 22ம் பதிப்பு

| | | |
|---|---|---|
| 000 | - | கணினி அறிவியலும் பொது ஆக்கங்களும் |
| 001 | - | பொது அறிவு |
| 001 | - | பொது உளச் சார்பு |
| 001 | - | நுண்ணறிவு |
| 01.4 | - | Research Handbook: a practical guide |
| 004 | - | கணினியியல் அறிவியல் |
| 005.3 | - | எம்.எஸ் வேர்ட் கற்றுக் கொள்ளுங்கள் |
| 006 | - | விசேட கணினி முறைகள் |
| 0010 | - | நூல்விவரப்பட்டியல் |
| 015.493 | - | இலங்கை நூல்விவரப்பட்டியல் |
| 020 | - | நூலக தகவல் அறிவியல் |
| 027.4 | - | பொதுநூலகங்கள் |
| 027.8 | - | பாடசாலை நூலகங்கள் ஓர் அறிமுகம். |
| 030 | - | பொது கலைக்களஞ்சியங்கள். |
| 031 | - | தமிழ் கலைக்களஞ்சியங்கள். |
| 032 | - | ஆங்கிலக் கலைக்களஞ்சியங்கள். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| | | |
|---|---|---|
| 060 | - | பொது நிறுவனங்கள் |
| 069 | - | அரும்பொருட் காட்சியகவியல் |
| 070 | - | செய்தி ஊடகங்கள்இவெளியீட்டுத்துறை |
| 070.4 | - | ஊடகவியல் |
| 080 | - | பொதுச்சேகரிப்புகள் |
| 081 | - | உலகப் புகழ் பெற்ற மேற்கோள்கள் |
| 081 | - | உலகச் சிந்தனையாளர்களின் பொன்மொழிகள் |
| 081 | - | வாழ்வியல் சிந்தனைக் கட்டுரைகள் |
| 081 | - | கண்ணதாசனின் அனுபவ மொழிகள் |
| 100 | - | மெய்யியலும் உளவியலும் |
| 133.3 | - | பஞ்சபட்சி சாஸ்திரம் |
| 133.33 | - | எண்கணித சாஸ்திரம். |
| 133.5 | - | சோதிடவியல் |
| 133.6 | - | கைரேகை சாஸ்திரம் |
| 138 | - | அங்க சாஸ்திரம் |
| 140 | - | விசேட மெய்யியல் துறைகள் |
| 150 | - | உளவியல் |
| 154.7 | - | வெற்றிதரும் மனோசக்திக் கலை |
| 158 | - | வெற்றிச்சிகரத்தை எட்டிப் பிடிப்போம் |
| 158 | - | சவால்களை வாய்ப்புகளாக மாற்றுங்கள் |
| 160 | - | அளவையியல் |
| 170 | - | ஒழுக்கவியல் (திருக்குறள்) |
| 180 | - | புராதன மெய்யியல் |
| 181 | - | கீழைத்தேய மெய்யியல் |
| 181.4 | - | இந்திய மெய்யியல் |
| 181.49 | - | சைவ சித்தாந்தம் |
| 200 | - | சமயம் |
| 200 | - | பகவத்கீதை, திருக்குர்ஆன், பைபிள் |
| 200 | - | உலகச்சமயங்கள் |
| 223.11 | - | பகவத்கீதை |
| 230 | - | அர்த்தமுள்ள இந்துமதம் |
| 231.362 | - | இந்துசமயமும் குற்றங்களும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| | | |
|---|---|---|
| 232 | - | இந்து சமய இலக்கியங்கள் |
| 232.1 | - | வேத இலக்கியங்கள் |
| 232.31 | - | இராமாயணம் |
| 232.32 | - | மகாபாரதம் |
| 232.321 | - | பகவத்கீதை |
| 232.5 | - | தர்மசாத்திரங்கள் |
| 233.1 | - | சைவம் |
| 233.2 | - | வைகூஷ்ணவம் |
| 233.7 | - | நாட்டார் தெய்வங்கள் |
| 234 | - | பக்தி இலக்கியங்கள் |
| 234.1 | - | பக்தி இலக்கியங்கள் - சிவன் |
| 234.11 | - | சைவத் திருமுறைகள் |
| 234.111 | - | தேவாரங்கள் |
| 234.112 | - | திருவாசகம் |
| 234.113 | - | திருப்பல்லாண்டு |
| 234.114 | - | திருமத்திரம் |
| 234.115 | - | பதினொராம் திருமுறை |
| 234.116 | - | பொரிய புராணம் |
| 234. 12 | - | ஏனையவை (தாயுமானவர்) |
| 234.2 | - | பக்தி இலக்கியங்கள் - விகூஷ்னு |
| 234.21 | - | நாலாயிர திவ்விய பிரபந்தங்கள் |
| 234.3 | - | பக்தி இலக்கியங்கள் - சக்தி (அபிராமிப் பட்டர் பாடல்கள்) |
| 234.4 | - | பக்தி இலக்கியங்கள் - கணபதி |
| 234.7 | - | பக்தி இலக்கியங்கள் - நாட்டார் தெய்வங்கள் |
| 235 | - | இந்துக் கோவில்கள் |
| 235.09 | - | தலபுராணங்கள் |
| 235.1 | - | சிவன் கோவில்கள் |
| 235.2 | - | வைகூஷ்ணவக் கோவில்கள் |
| 235.3 | - | அம்மன் கோவில்கள் |
| 237.1 | - | இந்து சமயமும் சமூகமும் |
| 237.11 | - | வர்ணாச்சிரம தர்மம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| | | |
|---|---|---|
| 237.32 | - | நாட்டார் தெய்வ வழிபாட்டுக் கிரியைகள் (பொங்கள், தீமிதிப்பு, கேள்வி) |
| 237.33 | - | வாழ்வியற் கிரியைகள் |
| 237.4 | - | பக்தி நெறி |
| 237.41 | - | விரதங்கள் |
| 237.5 | - | யோக வாழ்வு |
| 237.51 | - | ஜெபம் |
| 237.7 | - | ஞான வாழ்வு |
| 237.71 | - | இந்து சமயக் கல்வி |
| 237.8 | - | இந்து சமய விழாக்களும் பண்டிகைகள் |
| 238 | - | இந்து சமய நிறுவனங்கள் |
| 238.34 | - | ஆறுமுகநாவலர் பணிகள் |
| 238.7 | - | சமய கல்வி நிறுவனங்கள் |
| 238.82 | - | சாயி சர்வ மதம் |
| 242 | - | பக்தி இலக்கியங்கள் |
| 249.12 | - | சமண சமய நூல்கள் |
| 273.2 | - | ரோமன் கத்தேலிக்கம் |
| 282.1 | - | குர்ஆன் |
| 291.1 | - | புனித பைபிள் |
| 297.1 | - | புனித திருக்குர்ஆன் |
| 300 | - | சமூக அறிவியல்கள் |
| 301 | - | சமூகவியல் கொள்கைகள் |
| 302 | - | சமூக உளவியல் |
| 304 | - | சமூக நடத்தைகளில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகள் |
| 304.6 | - | சனத்தொகை |
| 307 | - | சனசமூகங்கள் |
| 310 | - | பொதுப் புள்ளிவிபரத் தொகுப்புகள் |
| 320.9 | - | அரசியல் சூழலும் நிலைமைகளும் |
| 320.15 | - | தேசிய ஜனநாயகமும் சுயநிர்ணய உரிமையும் |
| 323 | - | குடியுரிமையும் அரசியல் உரிமையும் |
| 324 | - | இலங்கை இடதுசாரி இயக்கங்களின் தோற்றம் |
| 330 | - | பொருளியல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| | | |
|---|---|---|
| 331 | - | தொழிற் பொருளியல் |
| 332 | - | நிதிப் பொருளியல் |
| 334 | - | கூட்டுறவு நிறுவனங்கள் |
| 335 | - | சோசலிசமும் அது தொடர்பான முறைகளும் |
| 337 | - | சர்வதேசப் பொருளாதாரம் |
| 338 | - | உற்பத்தி |
| 340 | - | சட்டவியல் |
| 341 | - | தேசங்களின் சட்டம் |
| 342 | - | அரசியலமைப்புச் சட்டமும், நிர்வாகச்சட்டமும் |
| 345 | - | குற்றவியல் சட்டம் |
| 352.14 | - | இலங்கை மாகாணசபை ஆளுனர் அறிக்கை |
| 360 | - | சமூகப் பிரச்சினைகளும் சேவைகளும் |
| 361.77 | - | செஞ்சிலுவைச் சங்கம் |
| 368 | - | கப்புறுதி |
| 370 | - | கல்வி |
| 370.1 | - | கல்வியின் தத்துவ சமூக அடிப்படைகள் |
| 370.15 | - | கல்வி உளவியலின் அடிப்படைகள் |
| 371 | - | பாடசாலைகளும் செயற்பாடுகளும் : விசேட கல்வி |
| 371.02 | - | தனியார் பாடசாலைகள் |
| 371.102 | - | புதிய கற்பித்தலியல் |
| 371.227 | - | தொலைக் கற்பித்தல் |
| 372 | - | பாலர் கல்வியும் விஞ்ஞான அனுகுமுறையும் |
| 373 | - | இடைநிலைக் கல்வி |
| 374 | - | முதியோர் கல்வி |
| 375 | - | வணிகம் |
| 379 | - | கல்விக் கோட்பாடுகளும் தத்துவங்களும் |
| 380 | - | வணிகம்இ தொடர்பாடல்இ போக்குவரத்து |
| 381 | - | வணிகம் |
| 384 | - | தொடர்புகள் தந்தித் தொடர்பு |
| 390 | - | சடங்குகள், ஒழுக்க ஆசாரங்கள், நாட்டாரிய |
| 398 | - | நாட்டாரியல் வழக்கியல் |
| 400 | - | மொழி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| | | |
|---|---|---|
| 401 | - | மொழியியல் |
| 410 | - | தமிழ் எழுத்தின் தோற்றம் |
| 413 | - | கோனார் தமிழ்க் கையகராதி |
| 413 | - | தமிழ் அகராதிகள் |
| 413.1 | - | சிறப்புத் தமிழ் அகராதிகள் |
| 413.2 | - | ஆங்கில தமிழ்மொழி அகராதிகள் |
| 415 | - | தமிழ் இலக்கணம் |
| 415 | - | சொல்லதிகாரம்: சேனாவரையர் |
| 415 | - | தமிழ்மொழி இலக்கண மரபுகள் |
| 415 | - | அடிப்படைத் தமிழ் இலக்கணம் |
| 415 | - | நன்னூல் விருத்தியுரை |
| 420 | - | நியம ஆங்கிலமொழி |
| 423 | - | ஒக்ஸ்போட் ஆங்கில அகராதி |
| 422 | - | ஆங்கில சொற்பிறப்பியல் அகராதி |
| 423.1 | - | ஆங்கில சுருக்க அகராதிகள் |
| 425 | - | Practical English Grammar |
| 428 | - | English by stages |
| 428 | - | எளிய தமிழில் ஆங்கில இலக்கணம் |
| 428 | - | Chapman English Grammar and Exercises |
| 500 | - | அறிவியல் |
| 510 | - | கணிதம் |
| 512 | - | அட்சர கணிதம் |
| 513 | - | எண் கணிதம் |
| 516 | - | கேத்திர கணிதம் |
| 520 | - | வானவியல் |
| 530 | - | பௌதிகவியல் |
| 535 | - | ஒளியியல் |
| 536 | - | வெப்பவியல் |
| 539 | - | நவீன பௌதிகம் |
| 540 | - | இரசாயனவியல் |
| 546 | - | அசேதன இரசாயனம் |
| 547 | - | சேதன இரசாயனம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| | | |
|---|---|---|
| 550 | - | புவிசார் அறிவியல் |
| 560 | - | புராதன உயிரியல் |
| 570 | - | வாழ்க்கை அறிவியலகள்இ உயிரியல் |
| 572 | - | உயிர்த் தொழினுட்பவியல் |
| 580 | - | தாவரவியல் |
| 590 | - | விலங்கியல் |
| 600 | - | தொழினுட்பவியல் |
| 610 | - | மருத்துவமும் சுகாதாரம் |
| 613.7 | - | சுகாதாரமும் சுகவாழ்வும் |
| 611 | - | மனித உடற்கூற்றியல், கலனியல், உயிர்த்தசைமவியல் |
| 616 | - | நோய்கள் |
| 616.9 | - | புற்று நோய் |
| 616.9 | - | மஞ்சள் காமாலை |
| 617 | - | அறுவைச் சிகிச்சை |
| 620 | - | பொறியியலும் அதனுடன் இணைந்த செயற்பாடுகளும் |
| 630 | - | விவசாயவியலும் தொழினுட்பங்களும் |
| 636.089 | - | மிருக வைத்தியம் |
| 636.5 | - | கோழி வளர்ப்பு |
| 638.1 | - | தேனி வளர்ப்பு |
| 640 | - | வீடும் குடும்ப முகாமைத்துவமும் |
| 641.4 | - | உணவைப் பாதுகாக்கும் முறைகள் |
| 641.5 | - | சமையற்கலை |
| 646.6 | - | தையற்கலை |
| 647 | - | வீட்டுப் பராமரிப்பு |
| 649.1 | - | குழந்தை வளர்ப்பு |
| 650 | - | முகாமைத்துவ சேவைகள் |
| 657 | - | கணக்கியல் |
| 658 | - | பொது முகாமைத்துவம் |
| 658.3 | - | ஆளணி முகாமைத்துவம் |
| 658.15 | - | நிதி முகாமைத்துவம் |
| 660 | - | இரசாயனப் பொறியியல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| | | |
|---|---|---|
| 670 | - | உற்பத்தி |
| 700 | - | நுண்கலைகளும் அலங்காரக்கலைகளும் |
| 720 | - | கட்டிடக் கலை |
| 730 | - | பிளாஸ்ரிக் கலை சிற்பக்கலை |
| 740 | - | வரைதலும் அலங்காரக் கலையும் |
| 750 | - | ஓவியமும் ஓவியக் கலையும் |
| 780 | - | இசை |
| 791.43 | - | தொலைக்காட்சி நாடகங்கள் |
| 792 | - | அரங்கு (மேடை நிகழ்ச்சி) |
| 794.1 | - | சதுரங்கம் விளையாடக் கற்றுக் கொள்ளுங்கள் |
| 794.8 | - | கணினி விளையாட்டுக்கள் |
| 796 | - | மெய் வல்லுநர் உடற்பயிற்சி விளையாட்டுக்களும், வெளிப்புற விளையாட்டுக்களும் |
| 800 | - | இலக்கியம் |
| 808.83 | - | உலக புனைகதைகள் தொகுப்பு |
| 810 | - | தமிழ் இலக்கியம் |
| 811.1 | - | சங்கக் கவிதைகள் |
| 811.6 | - | நவீன கவிதைகள் |
| 812 | - | தமிழ் நாடகம் |
| 813 | - | தமிழ் நாவல்கள் |
| 813.01 | - | தமிழ்ச் சிறுகதைகள் |
| 814 | - | தமிழ்க் கட்டுரைகள் |
| 815 | - | தமிழ்ச் சொற்பொழிவுகள் |
| 816 | - | தமிழ்க் கடிதங்கள் |
| 817 | - | தமிழ் நகைச்சுவை |
| 818 | - | தமிழ் இலக்கியத் தொகுப்புகள் |
| 820 | - | ஆங்கில இலக்கியம் |
| 900 | - | வரலாறும் புவியியலும் |
| 904.5 | - | இயற்கை நிகழ்வுகள் |
| 909 | - | உலக நாகரிகங்கள் |
| 909.041 | - | உலகத் தமிழர் வரலாறு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| | | |
|---|---|---|
| 910.014 | - | இடப்பெயர் வரலாறு |
| 910.02 | - | பௌதிகப் புவியியல் தத்துவங்கள் |
| 910.02 | - | காலநிலையியல் |
| 910.1 | - | பொருளாதாரப் புவியியல் |
| 910.4 | - | பயணக் கட்டுரைகள் |
| 910.41 | - | உலக சுற்றுப்பயணங்கள் |
| 910.71 | - | புவியியல் கற்பிக்கும் முறைகள் |
| 911 | - | வரலாற்றுப் புவியியல் |
| 912.5493 | - | இலங்கை தேசப்படத் தொகுப்பு |
| 915.493 | - | இலங்கைப் புவியியல் |
| 920 | - | வாழ்க்கை வரலாறு (அந்தந்தப் பகடத்துறைகளுடன் வரலாற்றை இணைக்கவும்) |
| 929.54 | - | சத்திய சோதனை |
| 929.54 | - | அக்கினிச் சிறகுகள் |
| 929.97 | - | இடப்பெயர் வரலாறு |
| 940 | - | ஐரோப்பிய வரலாறு |
| 950 | - | ஆசிய வரலாறு |
| 954.93 | - | இலங்கை |
| 954.9303 | - | சுதந்திரத்திற்குப்பின் 1948 முதல் |

**DDC 22ம் பதிப்பு**

உசாத்துணை நூல் - நூலக பகுப்பாக்கம் நூலகர் கைநூல்

தொகுப்பு :
திருமதி சிறிதரணி சுதன்
பொது நூலகம்,
களுவாஞ்சிகுடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பல நோய் தீர்க்கும்
# ஒரு மருந்து
# முயற்சித்துப் பாருங்கள்

வெந்தயம் - 250g

ஓமம் - 100g

கருஞ்சீரகம் - 50g

மேலேயுள்ள 3 பொருட்களையும் சுத்தம் செய்து அதனைத் தனித்தனியாக கருகாமல் வறுத்து தூள் செய்து ஒன்றாகக் கலந்து கண்ணாடிப் போத்தலில் போட்டு வைத்துக் கொள்ள வேண்டும். இக் கலவையை 1 ஸ்பூன் அளவு இரவு நேரத்தில் வெதுப்பான நீரில் உட்கொள்ள வேண்டும். இதனைச் சாப்பிட்ட பின் எந்த உணவும் உண்ணக்கூடாது. தினமும் இதனைச் சாப்பிடுவதால் உடலில் தேங்கி இருக்கும் அனைத்து நச்சுக் கழிவுகளும் மலம்,சிறுநீர் மற்றும் வியர்வை மூலம் வெளியேற்றப்படுகிறது. தேவையான கொழுப்பு நீக்கப்படுகிறது. இரத்த சருமத்தில் சுருக்கம் நீக்கப்படும். கண்பார்வை ஒளிவடையும்., நினைவாற்றல் அதிகரிக்கும். நிரழிவு பராமரிக்கப்படும். இதனை 2,3 மாதங்கள் தொடர்ந்து சாப்பிட்டால் நோய்கள் யாவும் சுகமாகும்.

திருமதி. சுந்தரி பரமேஸ்வரன்,

பொதுநூலகம்,

களுவாஞ்சிகுடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



Nations Reading Month
Award - 2014



கதை சொல்லும் போது



இரவல் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Public Library
MS&EP P.S
KALUWANCHIKUDY

# நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Kabeer Publication, KKY - 077 00 21 737